
விட்டுவிடுவேனோ
வண்ண மலரே
ரமணிசந்திரன்

# விட்டுவிடுவேனோ வண்ணமலரே

ரமணிசந்திரன்

# அத்தியாயம் -1

மேக மூட்டமும்  லேசான சிலுசிலுப்புடன் கூடிய காற்றும், சுமனசிக்கு உற்சாகத்தை ஊட்டியிருக்க வேண்டும். ஆனால், கொஞ்ச காலமாகவே, இது போல எப்போதும் உற்சாகமூட்டும் பல விஷயங்கள், அவளது எரிச்சலைத்தான் கிளப்பிக் கொண்டிருந்தன.

அப்படி இருந்திருந்தால் . . . இப்படி நடக்காமல் இருந்திருந்தால் . . .என்று மாற்ற முடியாமல் முடிந்துவிட்ட பலதையும் நினைத்து வருந்துவது . . . வருந்தினாள் என்று சொல்ல முடியாது. ஏனெனில், இன்றைக்கும் அவளது கடந்த காலத்தில் கடைசியான பல மாதங்கள் மீண்டும் நடக்குமானால், அவள் நடந்துகொண்ட எந்த விதமான மாற்றமும் இல்லாது, அச்சுப் பிசகாமல், முன்பு நடந்துகொண்ட அதே போலத்தான், இப்போதும் நடந்திருப்பாள். ஏனெனில், அந்த நாளைய அவளது பேச்சு, செயல் எதையுமே, அவளால் தவறாகக் கருத முடியவில்லை!

ஆனால், நேர்ப் பாதையில் நடந்துகொண்டோம்., தப்பை ஏற்கவில்லை என்பதால் மட்டும் மனது சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்கவா, செய்கிறது? அதற்காக இழந்தவற்றை நினைக்கும்போது வேதனையாகத்தானே இருக்கிறது?

அவளது தப்பு, சரி கொள்கைகளால் இழந்து விட்டனவற்றை நினைத்து, மறுகுவது இப்போது தினசரி வழக்கமாகிக் கொண்டிருக்கிறது!

சும்மா என்றால், இந்த இளங்குளிர்க் காற்று முகத்தில் மோத நிற்பதே, அவளுக்கு ஆனந்தமாக இருந்திருக்கும்!

அதுதான் பிடிக்கவில்லை என்றாலும், இந்தச் சிலுசிலுப்புக்கு, நல்ல “ரஜாய்” ஒன்றை எடுத்துப் போர்த்திக்கொண்டு, கதகதவென்று சுகமாகப் படுத்தேனும் இருக்கலாமே!

அதை விட்டு, என்றோ பிரிந்துவிட்ட ஒருவனின் கரங்களுக்குள், இந்தக் காற்று, குளிர் நேரம் எவ்வளவு சுகமாக இருந்தது என்று அந்த நினைவா, இப்போது வந்து வாட்டித் தொலைக்க வேண்டும்?

அதுவும், அந்தக் கரங்களின் அணைப்பு வேண்டாம் என்று அடியோடு உதறிவிட்டு வந்தவளே அவளாக இருக்கும்போது, இப்படி ஓர் எண்ணம் தோன்றுவதே, அசிங்கம் அல்லவா?

அவனுக்குத் தெரிந்தால் . . தெரிய வாய்ப்பில்லை என்றாலும்,

ஏதோ ஒரு வழியில், அவளது இந்த ஏக்கத்தை அவன் அறிய நேர்ந்தால், அவளை எவ்வளவு கேவலமாக நினைக்கக் கூடும்!

அதுவும், அவளே அவனிடம் திரும்பி வருவாள் என்று அலட்சியமாகக் கூறியவன்! அதே போல, அவளைத் திரும்பி வா என்று ஒரு தரம் கூடக் கூப்பிடாதவன்!

ஒருவேளை, தொல்லை விட்டது என்று நிம்மதியாக இருக்கிறானோ என்று எண்ணம் ஓட, தன்னை மீறிக் கண்ணீர் வழிந்தது.

என்ன மூடத்தனம்!

தன் மீதே மிகுந்த எரிச்சலுற்றவளாக, சுமனசி டவலை எடுத்துக்கொண்டு குளிக்கப் போனாள்.

நல்ல குளிர் நீரில் குளித்தால்தான், இந்தத் துன்பம் தீரும்! சும்மாவே குளிர் நேரம். அதிகப்படியான குளிர் தாக்கும்போது, அந்த வெடவெடப்பில் உடலின் துன்பம்தான் பெரிதாகத் தோன்றும்! கண்டகண்ட வேண்டாத கற்பனைகளில் மனம் ஈடுபடாது.

நினைத்தபடியே அன்றாட வேலைகளில் மனம் ஈடுபட, ஒரு டோஸ்டும் ஆம்லெட்டும், கூடவே ஒரு வாழைப்பழமுமாகக் காலை உணவை முடித்துக்கொண்டு, சுமனசி . . சுமனசசுந்தரி வேலைக்குக் கிளம்பினாள்.

காலில் செருப்பை மாட்டும்போது, செல் ஒலித்தது.

எடுத்து, எண்ணைப் பார்த்தவளுக்குப் பேசவே மனமில்லை. ஆனால், ஒருவேளை ஏதாவது முக்கியமான விஷயமாக இருந்தால் . . என்ற ஒரு காரணத்துக்காக செல்லை ஆன் செய்தாள். “சொல்லுங்கள், சித்தி.” என்று சுருக்கமாகக் கேட்டாள்.

“என்னத்தையடி சொல்வது? நீதான் ஏதாவது நல்ல விஷயம் சொல்லுவாய் என்று காத்துக் கிடக்கிறோம். அப்படி இங்கே ஒரு கூட்டம் ஒரு நல்ல சேதிக்காகக் காத்துக் கிடக்கிறோம் என்ற கவலையே இல்லாமல், நீ சும்மா வேலைக்குப் போவதும் வருவதுமாக இருந்தால் எப்படி? சொல்லு, நீ எப்போது புருஷனோடு போய் வாழப் போகிறாய்? இந்த வீட்டை எப்போது வாடகைக்கு விடப் போகிறாய்? அது ஒரு வருமானம் எப்போது வரும் என்று நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தால், அது பற்றி நீ மூச்சுக் கூட விடவே மாட்டேன் என்கிறாயே! அதை நினைத்துப் பாதி நேரம் எனக்குத் தூக்கம் கூட வர மாட்டேன் என்கிறது! ஒருவேளை, இப்படித் தனிக்காட்டு ராணியாக வாழ்வதே

சுகமாகத் தோன்றிவிட்டதா? என்னையெல்லாம் போலக் குடும்பத்துக்காக உழைத்துக் கொட்டாமல், மனம் போன போக்காய் வாழ முடிவே செய்துவிட்டாயா? அப்படித்தான் என்றால், என்னிடம் நிஜத்தைச் சொல்லிவிடு. இந்தியாவோடு, அந்த வீட்டுக்கும் ஒரு பெரிய முழுக்காய்ப் போட்டுவிடுகிறேன்! “ என்று புலம்பினாள் அவளுடைய சிற்றன்னை ஆனந்தா என்கிற ஆனந்தவல்லி!

ஆனந்தவல்லியாம்! என்ன பேரை யாருக்கு வைப்பது என்றே இல்லையே. சித்தி பேசினாலே, ஒன்று புலம்பலாக இருக்கும். அல்லது குற்றம் சாட்டுவதாக இருக்கும். எவ்வளவு சின்ன உரையாடலாக இருந்தாலும், பேச்சின் முடிவில் சுமனசியின் மனம் வலியில் துடித்துக் கொண்டிருக்கும்.

விட்டால் கழுத்தைப் பிடித்து நெறித்துவிட முடியாதா என்ற சித்தியின் ஆத்திரத்தை, உள்ளூர சுமனசியால் நன்றாக உணர முடியும்.

ஆனால், அதை வெளிப்படையாக் காட்டிக் கத்துவதற்கு ஆனந்தா தயங்குவாள். காரணம், கணவர் சமயத்தில் காலை வாரி விட்டுவிடுவார். அதாவது, மனைவி ஜாடை மாடையாக ஓதிய அனைத்தையும் மறந்து, அவர் மனைவியிடமே கத்தத் தொடங்கி விடுவார். எனவே, எப்போதும் ஓர் அழுவணித்தனத்தின் மறைவில்தான், எல்லாம் தெரிவிக்கப் படும்.

இப்போதும், அதுதான்.

மனம் போனபடி வாழ்வது என்று குத்தியதெல்லாம் ஒரே ஒரு காரணமாகத்தான்.

இந்த வீடு, என் புருஷன் கட்டியது. என்  சொத்து. இதிலிருந்து, வாடகையாக எனக்கு ஒரு கணிசமான வருமானம் வேண்டும். அதை நந்தியாக இருந்து தடுக்காமல், நீ எப்போது வெளியே போவாய்?

இதைத்தான் சுற்றி வளைத்து, அவள் இப்படிக் கேட்டது.

ஆனால், பசுபதி சுமனசியுடைய தந்தையும்தானே? அவருடைய மகளுக்கு இந்த வீட்டில் உரிமையென்று ஒன்றுமே கிடையாதா? குறைந்த பட்சமாக, இந்த மனவலி குறையும் வரை  தங்குவதற்கு?

அத்தோடு, மகள் வாழ்வு அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக்கையில், பெற்ற தந்தைக்குப் பைசாக் கணக்கா பார்க்கத் தோன்றும்? இதுவே, தம்பிகள் இருவரில் ஒருவர் தங்குவதானால், சித்தி இந்தப் பணக் கணக்குப் பார்ப்பாளா?

திருமணம் தோல்வியுற்று, சுமனசி திரும்பி வந்த அந்தச் சமயத்தில்தான், குடும்பத்தின் மற்ற அங்கத்தினர் அனைவரும்

சிங்கப்பூருக்குக் கிளம்பி இருந்தனர்.

சரியாகச் சொல்லப் போனால், இது ஒன்றும் புதிய ஏற்பாடு அல்ல. கடந்த ஓர் ஆண்டாகவே, இந்த சிங்கப்பூர் வேலை பற்றிய பேச்சு வீட்டில் அடிபட்டுக்கொண்டேதான் இருந்தது.

“நான் வேலையை விட்டு வர முடியாது. அதனால் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் நாலு பேரும் போய் வாருங்கள்.” என்று சுமனசி பிடிவாதமாக இருந்தாள்.

அப்போதுமே, ஆனந்தாவுக்கு அது பிடித்தமில்லை. இங்கேயே இருப்பது என்றால், இந்த வீடு, பெணணுக்கு என்றாகி விடுமோ என்ற கலக்கம்!

“அதெப்படி, இவ்வளவு பெரிய வீட்டில், உன்னைத் தனியாக விட்டுவிட்டுப் போவது? அப்படி வேலைதான் முக்கியம் என்றால், ஏதாவது வேலை பார்க்கும் மகளிர் விடுதியில் தங்கினாலும் பரவாயில்லை. வாடகைக்கு இருப்பவர்கள் வீட்டை நன்றாக வைத்துக் கொள்கிறார்களா என்று, அவ்வப்போது வந்து பார்க்கவும் வசதி.” என்று சுமனசியை அந்த வீட்டை விட்டுக் கிளப்பவே, அவள் முயன்றாள்.

ஆனால் பசுபதிக்குக் குழப்பமாக இருந்தது. “இங்கானால், சுற்றிலும் தெரிந்தவர்கள். ஒரு குரல் கொடுத்தால், பக்கத்து ஃப்ளாட்காரர்கள் அத்தனை பேரும் உதவிக்கு வந்துவிடுவார்கள். ஆனால், ஃப்ளாட்டுக்குள்ளே தனியாகத்தான் இருக்க வேண்டும். என்றாலும், அதில் ஒன்றும் பயமில்லை. இரவு பகல் செக்யூரிடி இருக்கிறார்கள். . . ஆனால் . . .” என்று யோசித்துக் கொண்டே இருந்தார்.

அவரது யோசனைக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல, யுகேந்திரனுடைய தாயார் சுபத்ரா தேவி அங்கே குடி வந்ததும், புயல் வேகத்தில், யுகேந்திரனும், சுமனசியும் காதலித்துப் பெரியவர்கள் சம்மதத்தோடு திருமணம் நடந்ததும், அடுத்து, உடனேயே அவள் கணவனோடு டெல்லிக்குக் கிளம்பியதும், ஆனந்தவல்லி அப்பாடி என்று மூச்சு விட்டாள். மாயா மந்திரம் போல, அவள் விரும்பிய வண்ணமே எல்லாம் நடந்துவிட்டதே!

சிங்கப்பூர்ப் பயண வேலையும் அவள் ஆசைப்பட்டபடி வெகு ஜரூராக நடந்தது.

இந்த நேரத்தில், எல்லாவற்றையும் தட்டிக் கவிழ்ப்பது போலச் சுவரில் அடித்த பந்தாய்ப் போன வேகத்திலேயே சுமனசி கண்ணீருடன்

திரும்பி வந்து சேர்ந்தாள்.

குடும்பத்தில் எல்லோருக்குமே பேரதிர்ச்சியே. பெற்றவர், தம்பிகளுக்கு சுமனசியின் வாழ்க்கைப் பிரச்சினை பெரிதாகத் தோன்ற, ஆனந்தவல்லிக்குப் பணக்கணக்கு பயங்கரமாக உதைத்தது.

அந்த வீட்டு உரிமைக்காகவே, அவர்கள் கிளம்புகிற நேரம் பார்த்து, சுமனசி திரும்பி வந்துவிட்டாளோ என்று, அவள் ரொம்பவே சந்தேகப்பட்டாள்.

ஆனால், சுமனசியோ, ரொம்பவுமே அதிர்ந்து போயிருந்தாள். “எல்லாம் முடிந்துவிட்டது.” என்பதற்கு மேல், அவளால் எதுவும் சொல்லக்கூட முதலில் முடியவில்லை.

இது போன்ற கலங்கிய நிலையில் மகளை விட்டுப்போகப் பசுபதிக்கு மனமில்லை. சிங்கப்பூர் வேலையே வேண்டாம் என்று சொல்லி விடலாமா என்று கூட அவர் யோசிக்கவும், ஆனந்தவல்லிக்கு அடி வயிற்றில் பகீரென்றது!

அங்கே லட்சக் கணக்கில் சம்பளம்!

“எஎன்ன இப்படிப் பேசுகிறீர்கள்? மகள் சும்மாவே கலங்கிப் போயிருக்கிறாள். இந்த நேரத்தில், ஒரு நல்ல வேலையை விட்டுவிட்டு, நம்மால்தானே இப்படி என்று நீங்களும் அவளை, இன்னும் அதிகமாக வருந்த வைக்கப் போகிறீர்களா? “ என்று அவள் கேட்ட பிறகே, பயணத்தைக கைவிடும் எண்ணத்தை, அவர் கைவிட்டார்.

ஆனால், காதல் மணாளனுடன் சந்தோஷமாகக் கிளம்பிச் சென்ற பெண், மணவாழ்வு பெரும் தோல்வியாக முடிந்து, தவித்தது தாளாமல், தங்களோடு வருமாறு, பசுபதி மகளைக் கூப்பிட்டார்.

ஆனால், இப்போதுதான் மூத்த தாரத்தின் அடையாளமே இல்லாமல் தன் குடும்பம் மட்டுமாகத் தனியே வாழப் போகும் இந்த நேரத்தில், மறுபடியும் சுமனசியைத் தங்களோடு கூட்டிப் போகவும், ஆனந்தாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

ஆனால், அதை அப்படியே சொல்ல முடியாதல்லவா?

முழுக்க வேறாக மாற்றி, “என்னப்பா இப்படிப் பேசுகிறீர்கள்? அங்கே வந்து, நம் குழந்தை என்ன செய்யப் போகிறாள்? நாள் முழுவதும், தனியே உட்கார்ந்து, பாழாகிப் போன அவளது மண வாழ்வை நினைத்து நினைத்து அழச் சொல்லுகிறீர்களா? இங்கானால், இவள் எப்போது கேட்டாலும் பழைய வேலையைத் தரத் தயாராக இருப்பதாக, அவளுடைய பாஸ், திருமண வரவேற்பின்போது

சொன்னாளே! அப்படி ஒரு வேலையைப் பார்த்தாள் என்றால், பகல் முழுவதும் அதில் கழிந்து போகும். வேலை செய்த அலுப்பில், இரவும் தூங்கி விடுவாள். அப்படியே பொழுது நிம்மதியாகக் கழிந்து போகும். அதை விட்டு, அங்கே வந்து, பொழுதும் போகாமல் பழசையே நினைத்து அழுதுகொண்டும் இருக்க வைக்கப் போகிறீர்களா?" என்று மனைவி அழுத்தம் திருத்தமாகப் பேசிக் கேட்கவும், அது சரிதானோ என்று, பசுபதி இப்போது யோசித்தார்.

தன் வழிக்கு இன்னமும் கணவனைத் திருப்பும் கருத்தில், குரலைத் தணித்து, "பாருங்கள், கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று நம் சுமா திரும்பி வந்துவிட்டதால் மட்டும் எல்லாம் முடிந்துவிடாது. இவள் மாமியாருக்கு, இவளிடம் பிரியம் அதிகம். கட்டாயம் மகனிடம் இவளுக்காகப் பேசுவார்கள். அப்படிப் பேசி, அந்தப் படுபாவி மனம் திருந்தித் திரும்ப வந்து அழைப்பதானாலும், சுமிக்கண்ணு இங்கே இருப்பதுதானே நல்லது? நம்மோடு கூட்டிப் போய்விட்டால், அப்படியொரு வாய்ப்பை, நாமே அழிப்பது போல ஆகாதா?" என்ற கேள்வியில், அவர் மனைவிக்குத் தலையாட்டவே தொடங்கிவிட்டார்.

சித்திக்குத் தன்னை உடன் அழைத்துச் செல்ல விருப்பமில்லை என்பதை உடனே கண்டுகொண்ட சுமனசிக்கு, முதலில் வருத்தமாகத்தான் இருந்தது.

ஆனால் சிற்றன்னை சொன்னதிலும் ஓர் உண்மை இருந்தது. அது, யுகேந்திரன் திருந்தி வந்து அவளை அழைப்பது பற்றி அல்ல. ஆனால், தந்தையோடு வெளிநாடு போய், அங்கே செய்வதற்கு ஒன்றும் இல்லாமல் சும்மா உட்கார்ந்திருப்பது, கஷ்டம்தானே?

இயல்பிலேயே அவளுக்குச் சோம்பேறித்தனம் கிடையாது. சும்மா இருக்கவும் பிடிக்காது.

உடம்பால் உழைத்துச் செய்ய ஒன்றும் இல்லாவிட்டால், கூடச் சேர்ந்து மூளையும் சும்மாவா இருக்கும்? கணவனின் மோசமான புத்தியையே நினைத்து நினைத்து, அது மறுகத்தானே, செய்யும்? உள்ள துன்பம் பத்து மடங்காகப் பெருகித் தோன்றாதா?

இப்போதே தாங்க முடியவில்லை. இன்னும் அதிகமானால், சகித்து உயிரோடு இருப்பதே கடினம்!

வெளிநாட்டில், நினைத்தாற்போல வேலை தேடிக் கொள்ளவும் முடியாது. வேற்று நாட்டுக் குடிமக்களுக்குப் பலவிதமான கட்டுப்பாடுகள் உண்டு. அவைகளைக் கடக்கவே பல மாதங்கள்

ஆகிவிடும். அவ்வளவு காலம், இந்த வெறுமையைச் சகித்து வாழ்வது நிச்சயமாக அவளால் இயலாது.

அத்துடன், சித்தியின் ஜாடைமாடைப் பேச்சுகளான குளவிக் கொட்டல்களையும் தாங்கியாக வேண்டும்!

அதைக் காட்டிலும், இங்கே உடனேயே மறுபடி வேலைக்குப் போனால், நெஞ்சை அரிக்கும் இந்தத் துன்பம் கொஞ்சமேனும் குறையக் கூடும் என்றே, அவளுக்கும் தோன்றலாயிற்று. குறைந்த பட்சமாக வேலை நேரத்தில் வேறு நினைவு வராது! அந்த அளவுக்கு, அவளுக்குப் பிடித்தமான வேலையும் கூட!

“ஆமாம்ப்பா. சித்தி சொல்வது போல, நான் இங்கே மதுரையிலேயே தங்கி, பழைய வேலைக்கே போகிறேன். அதுதான் என் வேதனைக்கு ஒரே மருந்து!” என்று கூறி, ஆனந்தவல்லியின் காதுகளில் தேனை ஊற்றினாள்.

ஆனால், “சரிம்மா. முன்பு பார்த்த வேலைதானே? உன் விருப்பம் போல, அதையே செய். கூடவே, அப்போது போலவே, நீ இங்கே, இந்த வீட்டிலேயே தங்கிக்கொள். “ என்று தந்தை சொல்லவும், ஆனந்தாவின் காதில் முன்பு தேனாக விழுந்தது, இப்போது காய்ச்சிய ஃஈயமாகிப் போயிற்று.

“இந்த வீட்டிலா?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள் மனைவி.

“ஆமாம்மா. சுசி இருக்கும் மன நிலையில், வேற்று இடம் எதுவும் சரிப்பட்டு வராது. இங்கே என்றால், செகரட்டரி, செக்யூரிடி, தெரிந்த அக்கம் பக்கத்து மனிதர்கள் என்று பாதுகாப்பாகவும் இருக்கும். நீ கவனமாக இருப்பாய் அல்லவா, தங்கம்?” என்று பரிவுடன் மகளின் தலையை வருடிக் கேட்டார் பசுபதி.

பெற்றவராய், வெகு இயல்பாகக் கேட்டதுதான்.

ஆனால் ஆனந்தாவுக்கு , அது அளவுக்கு மீறிய மிகப் பெரிய தியாகமாகவும், சொந்த மனைவிக்குச் செய்த மிகப் பெரிய அநியாயமாகவும் தோன்றியது.

அந்த ஃப்ளாட்டை வாடகைக்கு விட்டால், வாடகைப்பணம் மாதாமாதம் ஆயிரக் கணக்கில் சேருமே. மூத்த தாரத்து மகளுக்காக அதை ஏன் விடுவது? இதை எடுத்துச் சொன்னால், மகளுக்காக மனம் உருகி நிற்கும் இன்றைய மனநிலையில், பசுபதி அவளைக் கிழி கிழி என்று கிழித்து விடுவார்! எவ்வளவோ கவனமாக, உள்ளூரப் பிரித்து வளர்த்தபோதும், அவள் வயிற்றில் பிறந்த பையன்கள் கூட, சமயத்தில்

அக்காவுக்காக அப்பாவுடன் சேர்ந்து விடுவார்கள்.

எனவே, கணவர் பிள்ளைகளின் முன்னிலையில், “எல்லா அம்மாக்களுக்கும் போல, நீ உன் கணவனோடு சேர்ந்து வாழவேண்டும் என்பதுதான் என் ஆசை, சுமாச் செல்லம்! அதுதான் நடக்கப் போகிறது என்று முழு மனசாக நம்புகிறேன். என் நம்பிக்கை வீண் போகாது. அப்படி நீ கணவரோடு செல்லும்போது வீட்டைச் சும்மா விட்டுவிட்டுப் போய்விடாமல், நல்ல ஆட்களுக்கு வாடகைக்கு விட்டுவிட்டுப் போ. “திரை கடல் ஓடியும் திரவியம் தேடு” என்பார்கள் அதன்படிப் பணத்துக்காகத்தானே, சொந்த நாட்டை விட்டுப் போகப் போகிறோம்? இதிலும் ஒரு தொகை சேர்வது, எல்லா வகையிலும் நல்லது அல்லவா? அது எப்போதும் நினைவு இருக்கட்டும். சீக்கிரமே மாப்பிள்ளையோடு சேர்ந்து வாழ, என் ஆசீர்வாதம். சொல்வதைப் புரிந்துகொண்டு நல்லபடியாக நடந்துகொள்.” என்றாள், பெண்ணின் கண்களை நேராகப் பார்த்து!

அதாவது, அவளது பேச்சின் மறைபொருளை அவள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமாம்!

என்ன பெரிய மறைபொருள்? இந்த வீட்டிலேயே சட்டமாக உட்கார்ந்து விடாதே! சீக்கிரமே வேறு எங்கேனும் போய் இருந்துகொண்டு, வீட்டு வாடகையைத் தன்னிடம் கொடு என்கிறாள்.

நீங்கள் கேட்கும் வாடகையை நானே தந்துவிடுகிறேன் என்று சொல்ல, சுமனசியின் நாக்கு துறுதுறுத்தது.

ஆனால், என்றேனும் தந்தைக்குத் தெரிந்தால், சித்தியைப் போட்டு வாங்கி விடுவார்! அவர்களுக்கு இடையில், அவளால் ஏன் பிளவு வருவது? கணவனைப் பிரிந்து வந்து, அவள் தவிப்பது போதாதா? சித்திக்கும் ஏன்?

ஆனால், அவளும் அந்தத் தந்தையுடைய மகள்தானே? அதென்ன, இந்தச் சித்தி, அவளை ஒரேயடியாக விரட்டுவது என்று, சுமனசிக்குக் கோபமும் வந்தது.

ஆனால், இதெல்லாம் பற்றி யோசிக்கக் கூட மனம் வராமல், ஒரே அலுப்பாக இருந்தது.

கொஞ்ச காலம் இப்படியே போகட்டும். இப்படியே, இங்கேயே இருந்துவிட்டு, அப்புறமாகப் பணமாகவோ, பொருளாகவோ, சித்தியிடம் தனியே கொடுத்து விடலாம் என்று முடிவு செய்தாள் பெண்.

அப்படிக் குடும்பத்தினர் சிங்கப்பூருக்குக் கிளம்பிச் சென்று சில

நாட்களின் பின், அவளுக்கு ஒரு ஃபோன் வந்தது.

செய்தவள், அவளுடைய ஒழுக்கமற்ற கணவனைப் பெற்ற, அவனுடைய உத்தமத் தாயார் சுபத்ரா!

திரையில் எண்ணைப் பார்த்ததும் எடுத்துப் பேச, சுமனசி சற்றே தயங்கினாள்.

மகனுடன் ஆசையாகத் தொடங்கிய வாழ்வு, முழுதாக முடிந்து போயிற்று. அதில் மாற்றம் இல்லாதபோது, இந்தத் தொடர்பு தேவைதானா என்று ஒரு கணம் யோசனை ஓடிற்று.

ஆனால், இரு கரம் நீட்டி, சுமனசியை மருமகளாக வரவேற்ற சுபத்ரா, அந்த மகனோடான உறவை அடியோடு துண்டித்துக்கொண்டு வந்தபோது, சின்னவளைக் கண்டித்து ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை.

“உன் வாழ்வு. நீ முட்டாளுமில்லை. என்ன செய்ய வேண்டும் என்று நிதானமாக யோசித்து முடிவு செய். உறவையும் மீறி, நான் உன் நலம் விரும்பி என்று மட்டுமே கூறியவள்.

அப்படிப்பட்டவள் கூப்பிட்டால், ஃபோனை எடுப்பதா வேண்டாமா என்று யோசிப்பது தப்பில்லை? ஏதாவது ஆலோசனை சொன்னால் கூட, மறுப்பைக் கூடக் காரணம் சொன்னால் ஏற்றுக் கொள்கிறவள்!

எடுத்துப் பேசினால், சுமனசிக்கு உதவக் கூடுமோ என்றுதான், சுபத்ரா ஒரு யோசனை கூறினாள்.

“அங்கே என் ஃப்ளாட்டை வாடகைக்கு விட வேண்டாம் என்று யுகேன் சொல்லிவிட்டான். எதற்காவது நான் மதுரைக்குச் செல்ல நேர்ந்தால், அப்போது பயன் படுமாம். அது அபூர்வம். ஆனால், உன் சித்தி, உங்கள் வீட்டை வாடகைக்கு விட வேண்டும் என்று ரொம்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். நீ அதிலேதானே இருக்கிறாயாம்? அது பிரச்சினையாக இருந்தால், நம் வீட்டில் இருந்து கொள். எனக்கும் வீடு பூட்டிக் கிடக்கிறதே என்று, இல்லாமல் இருக்கும். உன் சித்திக்கும் நிம்மதியாக இருக்கும்.” என்று ஒரு யோசனை சொன்னாள்.

அவளுக்காக யோசித்துச் சொல்வதுதான்.

ஆனால், “அது சரி வராது, ஆன்ட்டி.” என்றாள் சுமனசி. “அத்தோடு, சித்திக்கு நானே வாடகை கொடுத்துவிடுவதாக இருப்பதால், இங்கே பிரச்சினை வராது. அங்கே நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?” என்று அவள் பேச்சை மாற்றவும், சுபத்ரா தொடர்ந்து

வற்புறுத்தவில்லை.

“சரிம்மா. சந்தோஷமாக இருக்க முயற்சி பண்ணு.” என்றதோடு பேச்சை முடித்துக் கொண்டாள்.

சந்தோஷமாக இருக்க முயற்சி பண்ணுவதா? இதுவும் சின்னவளுக்காக யோசித்துச் சொன்னதுதான்.

ஆனால், தன்னை மீறிக் கண்ணீர் வழிந்தது சுமனசிக்கு.

# அத்தியாயம் -2

யுகேந்திரனைப் பற்றித் தெரியுமுன்பே, சுமனசிக்கு, சுபத்ரா அறிமுகம் ஆகிவிட்டாள்.

அவர்கள் வசித்த அடுக்கு மாடிக் கட்டிடத்தில், இன்னொரு தளத்தில், ஆன்ட்டியின் ஃப்ளாட் இருந்தது. எல்லாமே, சற்று வசதியான அமைப்புடன் கூடிய, பெரிய ஃப்ளாட்டுகள்தான்.

இரண்டாம் கையாக வீட்டை வாங்கிக் குடி வந்தாள் அந்தப் பெண்மணி. குடி வருமுன், சுமார் ஒரு மாதம், கொட்டலும் தட்டலுமாக நிறைய வேலை நடந்தது. பாதுகாப்புக்காக நிறையச் செய்திருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால் குடி வந்தபோது, பால் காய்ச்சுவது, மற்றவர்களை அழைத்து டீ, டிஃபன் கொடுப்பது என்று எதுவுமே செய்யவில்லை. யாரோ, தனிமை விரும்பி போலும் என்று சுமனசி எண்ணிக் கொண்டாள்.

ஆனால், வருகிறவர்களுக்கு ஒரு டம்ளர் பால் கூடக் கொடுக்கப் பிடிக்காத பிசுநாரி என்பது, ஆனந்தவல்லியின் அபிப்பிராயம்.

லிஃப்ட் வசதி இருந்ததால், படியிறங்கிப் போவது, அங்கே யாரையாவது பார்த்து நின்று பேசுவது என்பது போல ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகும் வாய்ப்பு, அந்த ஃப்ளாட் வாசிகளுக்கு அதிகம் கிடையாது.

சுபத்ராவும், மெனக்கெட்டு வெளியே வந்து பழகுகிற விதம் இல்லை.

“மெயின்டனன்ஸ்”காகப் பணம் வாங்கப் போன செகரட்டரி மூலமாக, அந்த ஆன்ட்டி தனியாக வசிப்பதும், அதற்காகவே, மகன் இத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்திருப்பதாகவும் தெரிய வந்தது.

ஆனால், தோப்பும் துரவுமாகச் சொந்தப் பண்ணையை விட்டு இங்கே வருவதற்கு, சுபத்ரா மேடத்துக்குப் பிடிக்கவே இல்லை., எப்போது வேண்டுமானாலும், ஊருக்கே  திரும்பிப் போய்விடுவதாகவே இருக்கிறார்கள் என்பதும் வதந்தியில் அறியப்பட்டு, பசுபதி வீட்டில், ஆனந்தாவால் ஒலி பரப் பட்ட கதை.

மகனுக்குத் திருமணம் செய்து இங்கே வாழ வைத்துவிட்டு

ஊரோடு போவதாகவும் ஓர் விளக்கம் அறிவிக்கப் பட்டது.

உண்மையாகவும் இருக்கலாம். அல்லாமலும் போகலாம். ஆனால், இது போன்ற எல்லாமே ஆனந்தவல்லி குழுவினரால் எப்படியோ சேகரிக்கப்பட்டு, பொருத்தமான வண்ணங்கள் தீட்டி, பரபரப்புத் தகவல்களாக மற்றவர்களுக்கு அறிவிக்கப் படுகிறவைகளே.

“உலக வம்பிகள் மகா சபையால் கதை வசனம் எழுதப்பட்டது” என்று பையன்கள் வீட்டில் கிண்டல் செய்வார்கள். தாயை விட்டுத் தள்ளிப் போய் நின்றுகொண்டுதான். பக்கத்தில் இருந்தால், முதுகில் பட்டென்று விழுந்து விடுமே!

டீவி செய்தி வாசிப்பில் பாதி கவனத்தை வைத்துக்கொண்டு கேட்கும் பசுபதி, பாதி கேட்கும்போதே தூங்கி விடுவார். அல்லது, “சீதைக்கு ராமன் சித்தப்பாவா” என்பதுபோல எதையாவது நேர் மாறாகக் கேட்டு, மனைவியின் ரத்த அழுத்தத்தை ஏற்றி வைப்பார்.

வேலைக்குப் போய்விட்டு வரும் சுமனசிக்கும் பெரும்பாலும் கற்பனையான இந்தக் கதைகளில் ஆர்வம் கிடையாது. எனவே, வந்ததும் சாப்பாட்டு மேஜை மேல் இருக்கும் சிற்றுண்டி எதுவானாலும் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, அவளுக்கென்று கொடுக்கப் பட்டிருக்கும் அறைக்குள் போய் விடுவாள்.

அப்புறம், உடம்பு முகம் கழுவி, ஏதாவது பாடல்களைக் கேட்டபடி சிற்றுண்டி அருந்தி, மறு நாளைக்கு வேண்டியதை எடுத்து வைத்துவிட்டு வெளியே வரும்போது, வேலை முடிந்து தந்தையும் விளையாட்டுகள் முடிந்து தம்பிகளும் வந்திருப்பார்கள். சற்று நேரம் பொதுவான பேச்சும் உணவும் முடிந்தால், படுக்கிற நேரம் ஆகிவிடும்.

அந்தப் பேச்சிலும்கூட, முழுதாகக் கலந்துகொள்ள முடியாமல், அவளுக்குச் சற்றுச் சங்கடமாகவே இருக்கும். ஆனந்தவல்லியின் கைங்கர்யம்!

எனவே, அடிக்கடி மீனாட்சி அம்மன் கோயிலில் போய் உட்கார்ந்திருந்துவிட்டு, சுமனசி தாமதமாகவே வீட்டுக்கு வருவாள். பிரகாரத்துச் சிலைகளை ரசித்துவிட்டு, குளத்துப் படியில் அமர்ந்து, இந்தக் குளத்தில் தங்கத் தாமரை ஓலைச் சுவடியோடு எப்படி உயரே எழுந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பாள். அப்போது எல்லோரும் எப்படி உணர்ந்திருப்பார்கள்!

இது போன்ற கற்பனைகளில், தாமதமாக வீடு திரும்புவதும் உண்டு. ஆனால், முதலிலேயே வீட்டில் சொல்லி விடுவாள் என்பதால்,

அதனால் பிரச்சினை ஏற்படாது.

சொல்லப் போனால், சுமனசி இப்படி ஒதுங்கிப் போனால், ஆனந்தவல்லிக்கு மகிழ்ச்சிதான்.

இப்படி ஒருநாள் கோயிலில் சற்று நேரம் இருந்துவிட்டுத் திரும்பி வரும்போதுதான், சுபத்ராவை, சுமனசி சந்தித்தாள்.

அன்று ஏதோ காரணமாக ஒரு ஃபேசில் மின்சாரம் வராததால், லிஃப்ட் இயங்கவில்லை போலும்.

சுமனசி என்றைக்குமே லிஃப்டைப் பயன்படுத்துவதில்லை. படிகளில் ஏறி இறங்குவது ஆரோக்கியத்துக்கு நல்லது என்று, படிகளிலியேயேதான் ஏறிப் போவாள்.

அன்றும் அப்படிச் சென்றால், அவளது வீட்டுக்குத் திரும்பும் இடத்தில், படிக்கட்டிலேயே சாய்ந்தாற்போல சுபத்திரா ஆன்ட்டி உட்கார்ந்திருந்தாள்.

எல்லோரும் நடக்கும் படிக்கட்டில் உட்காருவானேன்? அதுவும் இப்படிச் சாய்ந்து?

என்னவோ சரியில்லை என்று, சுமனசிக்குத் தோன்றியது.

நேர்ப்பட அறிமுகம் இல்லாதபோதும், அவள் இன்னார் என்று அங்கே எல்லோருக்குமே தெரிந்துதான் என்ன என்று கேட்க அருகில் நெருங்கியபோது, அவளை நோக்கி சுபத்திரா நீட்டிய கை இடையிலேயே தொப்பென்று விழவும், பெரியவளுக்கு உடம்பு சரியில்லை என்று சுமனசிக்குப் புரிந்தது. அதுவும் பெரிதாக!

பெரியவளைக் கூப்பிட்டுப் பார்த்தால், அதற்குள்ளாகவே அந்தப் பெண்மணி கிட்டத்தட்ட மயக்கமாகி இருந்தாள். மூச்சு வேறு இரைத்தது.

ஒரு கணம் திகைத்த சுமனசி உடனேயே விரைந்து செயல்பட்டாள்.

அந்தக் குடியிருப்பிலேயே ஒரு மருத்துவரும் இருந்தார்.

அவர் வீட்டில் இருக்க வேண்டுமே என்று வேண்டிக்கொண்டபடி, முதலில் டாக்டருக்கு ஃபோன் செய்தாள்.

அவரும் வீட்டில் இருந்ததோடு, சில வினாடிகளிலேயே அங்கே வந்தும்விட்டார். வந்ததும் ஒரே பார்வையிலேயே ஆம்புலன்சுக்குச் சொல்லும்படி அவளைப் பணித்துவிட்டு, நோயாளிக்கு முதல் உதவியைச் செய்யத் தொடங்கினார்.

லேசான மாரடைப்பு!

விவரம் அறிந்ததும் ஓடி வந்த செகரட்டரி, சுபத்ராதேவியுடைய மகனுக்கு ஃபோன் செய்தார். ஆள் நேரே கிடைக்காததால், அவனது எண்ணுக்கு “மெஸேஜ்” அனுப்பிவிட்டு, அவரும் கூடச் சேர்ந்து “சுபத்ரா மேடத்”தை, மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றார்கள்.

உடனடி சிகிச்சையில் லேசாகக் கண் விழித்த சுபத்திரா, அருகில் இருந்த சுமனசியின் கைகளை ஏதோ பெரும் துணை போல இறுகப் பற்றிக்கொண்டாள்.

அவ்வளவுதான். சின்னவளுக்கு மனம் உருகிவிட்டது.

பாவம்! அவளை விடவும் வயதான வேலைக்காரி தவிர, உறவென்று யாரும் இல்லாமல் தன்னந்தனியாக வசிக்கும் பெண்மணி. மாரடைப்பு என்றால் சும்மாவா?

தனியாகக் கிடந்து நெஞ்சில் வலியோடு மூச்சுக்குத் தவித்தபோது எப்படி இருந்திருக்கும்!

பெரியவளின் பிடியை அவளும் சிறு அழுத்தத்துடன் திருப்பவே, ஆறுதலாக உணர்ந்து புன்னகை புரிய முயன்றவாறே, சுபத்ரா மறுபடியும் விழிகளை மூடிக் கொண்டாள்.

அரவம் கேட்டு வெளியே வந்த ஆனந்தா , விவரம் புரிந்ததும், “நீ இன்னும் முகம் கூடக் கழுவவில்லையே, செல்லம்! வந்து, காஃபி குடிம்மா.” என்று, கொஞ்சிக் குலாவிப் பெண்ணைத் தனியே அழைத்தாள்.

ஆனால் அவளது கை, சுபத்ராவின் பிடியில் இருக்கவே, தானே அருகில் சென்று, “இதோ பார், இந்தம்மாவோடு மருத்துவமனை வரை கூடப் போய், அங்கே பணம் கட்டுகிற பொறுப்பில் மாட்டிக் கொள்ளாதே.” “ என்று கிசுகிசுத்தாள்.

சுமனசி சங்கடமாக உணரும்போதே, ஆனந்தவல்லியின் பேச்சைக் கேட்டுவிட்ட செகரட்டரி, “பயப்படாதீர்கள் மிசஸ் பசுபதி. யுகேந்திரன் சார். . . அவர்தான் இந்தம்மாவுடைய மகன், என்னிடம் பணம் கொடுத்து வைத்திருக்கிறார். தாயாருக்கு எப்போது என்ன தேவை என்றாலும், அதிலிருந்து கொடுக்கச் சொல்லியிருக்கிறார். தனியாக வசிப்பதால், அவர்கள் கையில் அதிகப் பணம் இருப்பது நல்லதல்ல என்று கருதித் தந்தது. அதுவும் நல்லதாகிப் போயிற்று. எங்கே அந்த வேலைக்காரம்மா? அவசரத்துக்குத் துணிமணி, பேஸ்ட் பிரஷ் எடுத்து வரப் போனாளே . . “ என்று அவர் தேடும்போதே, அவர்

சொல்லியனுப்பிய பொருட்கள் அடங்கிய கூடையோடு, வேலைக்காரத் தாயம்மாள் வந்து சேர்ந்தாள்.

கூடவே ஆம்புலன்சும் வந்துவிட, சுபத்ராவை அதில் ஏற்றிக் கூட்டிப் போனார்கள்.

பெரியவள் பரக்கப் பரக்க விழிக்கவும், சுமனசியையும் கூடவே ஏறிக் கொள்ளும்படி, டாக்டர் கூற, அவளும் உடன் சென்றாள்.

“மற்ற மனிதர்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் எனக்குத் தாங்காது. அதனால்தான் என் பெண்ணைக் கூடவே போகச் சொன்னேன். . “ என்று ஆனந்தவல்லியின் குரல் தொடர்ந்து வந்தது.

முகம் கன்ற, சங்கடத்துடன் சுமனசி செகரட்டரியைப் பார்த்தாள்.

சிற்றன்னை முன்பு சொன்னதையும், அவர் கேட்டிருந்தாரே!

லேசாக முறுவலித்தார், அவர். “விடம்மா. இதை விட மோசமாக எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நல்லவேளை! நீ சரியான சமயத்தில் வந்து, உடனே நம்ம டாக்டரையும் கூப்பிட்டு, நம்மிடையே ஒரு பெரிய துக்கம் நேராமல் காப்பாற்றி இருக்கிறாய். அதுவும், அவர்களுடைய மகன் அருகில் இல்லாமல் தனியாக இருக்கிற நேரத்தில்! சங்கத்து செகரட்டரி என்ற முறையில் ரொம்பத் தாங்க்ஸ்மா!” என்றார் அவர்.

அந்த மகன் எப்போது, தாயின் அருகில் இருந்தானாம்?

இந்த ஃப்ளாட்டை வாங்கி . வாங்கியது கூட யார் பணமோ? இங்கே அந்த அம்மாவைக் குடி வைத்ததோடு, ஆள் அம்பேல்! இங்கே யார் கண்ணிலும் பட்டதே இல்லை!

துணை என்ற பெயரில், இன்னும் வயதான ஒரு வேலைக்காரி!

இப்படி ஒரு உடல்நிலையை வைத்துக்கொண்டு, இந்த இருவருக்குமாக என்ன சமைத்து, என்ன சாப்பிடுகிறார்களோ?

மகனுக்குக் கடமை உணர்வு ரொம்பத்தான் இருக்கிறது! அதற்குக் குறையாத பாசமும் இருக்கும் போல என்று, ஏளனமாக எண்ணினாள் சுமனசி.

நல்லவேளையாக, மருத்துவர் உடனே வந்து சிகிச்சையும் அளித்ததால், ஆன்ட்டி உயிர் பிழைத்தாள். இல்லையென்றால், மகனைப் பார்க்கக்கூட, இந்தத் தாய்க்குக் கொடுத்து வைத்திராதே!

எரிச்சலை அடக்கிக்கொண்டு, “சுபத்ரா மேடத்துடைய மகனை நீங்கள் எப்போதேனும் பார்த்திருக்கிறீர்களா, அங்கிள்?” என்று உணர்ச்சி காட்டாத குரலில் சுமனசி வினவினாள்.

ஆனால், அந்தக் குரலே ஏதோ சொன்னதோ? அவளை லேசாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, “ம். நாலைந்து முறை பார்த்திருக்கிறேன். இந்த இடத்தை வாங்கும்போது சில முறை. அப்புறம் தாயாரைக் குடி வைத்துவிட்டுச் செல்லும்போது ஒரு தரம். அப்போதுதான் பணம் கொடுத்துத் தாயாரைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.” என்றவர், சிறு அமைதியின் பின் அவராகவே, “அவரது வேலை அப்படிப்பட்டது, சுமனசா. இடையிலே விட்டுவிட்டு வர முடியாதது.” என்று விளக்கம் போலச் சொன்னார்.

ஹூம்! மனிதருக்கு அந்த மகனாரைப் பிடித்துவிட்டது போல! பெரும் பணத்தை நம்பிக் கொடுக்கிறவர்களை, எப்படிப் பிடிக்காமல் போகும் என்று உள்ளூர இளக்காரமாக எண்ணியவளுக்கு உடனேயே மனம் சுட்டது.

இந்த செகரட்டரி, பணத்தாசை பிடித்தவர் அல்ல! அதனாலேயே, ஆண்டுதோறும் அவரையே திரும்பத் திரும்ப, செகரட்டரியாக, சங்கத்தில் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். இநத மாதிரி மனிதரைப் போய்ச் சட்டென்று, மனம் என்னென்ன நினைத்துவிட்டது!

மாடிப்படியில் சாய்ந்து கிடந்த சுபத்ரா ஆன்ட்டியின் தோற்றம், அவள் மனதை அதிகம் பாதித்திருக்கும் போலும்!

அந்த மாதிரி நிலையில், அவள் யாரையும் பார்த்தது இல்லை! அந்தக் குடியிருப்பிலேயே ஒரு ஜிம் இருந்ததால், அதைப் பலரும் பயன்படுத்தவும் செய்ததால், பெரும்பாலும் எல்லோரும் ஆரோக்கியமாகவே இருந்தார்கள் எனலாம்.

பெரிதாக எதுவும் இல்லாமல், கடவுள் இந்த ஆன்ட்டியையும் காப்பாற்ற வேண்டும என்று சுமனசியின் எண்ணம் ஓடிற்று!

எப்படியோ! மெய்யாகவே, சுபத்ராதேவிக்கு ரொம்பப் பெரிதாக எதுவும் இல்லை. சும்மாவே மூச்சிரைப்பு வருவதுண்டாம். அன்றும் பிரச்சினை இருந்திருக்கிறது. “லிஃப்ட்” இல்லாமல் படியேறியதும், இரைப்பு அதிகரித்துவிட்டது.

இதயத்துக்கு ரத்தம் செல்லும் குழாய்கள் இரண்டில், ஓரளவு அடைப்பும் இருக்கவே, அங்கேயும் பிரச்சினை ஆகிவிட்டது என்பது, மருத்துவ மனைப் பரிசோதனையில் தெரிய வந்தது.

அவளது ரத்தக் குழாய்களின் அடைப்பைக் கூட, மருந்திலேயே கரைத்துவிடலாம் என்று மருத்துவமனை “ஸ்பெஷலிஸ்ட்” வைத்தியர்கள் அபிப்பிராயப் பட்டார்கள்.

ஒரு வாரம் மருத்துவமனையில் இருந்து, எல்லாப் பரிசோதனைகளும் செய்து முடித்து, சில சிறு சுகவீனங்களையும் குணப்படுத்திக்கொண்டு, சுபத்ரா மறுநாள் டிஸ்சார்ஜ் ஆகி, நல்லபடியாக வீடு திரும்பலாம் என்கிற நிலை வந்தது.

ஆனால், அன்று வரை, அருமை மைந்தனுக்கு அன்னையைப் பற்றிய எண்ணமே இருந்ததாகத் தெரியவில்லை!

இதற்குள், தினமும் காலையும் மாலையும் நோயாளியைப் போய்ப் பார்த்த சுமனசிக்கும் சுபத்ராதேவிக்கும் ஒருவரை ஒருவர் மிகவும் பிடித்துப் போய் விட்டது. தன்னை முன்னிறுத்தி, யாரிடமும் ஒட்டிக் கொள்கிற பழக்கம் சுமனசிக்குக் கிடையாது என்றாலும், வேலையாள் தவிர, உறவு நட்பு என்று யாரும் இல்லாமல் தனியாக இருந்த சுபத்ராவிடம், அவளுக்குத் தனிப் பரிவு ஏற்பட்டிருந்தது.

செய்தி அனுப்பியிருந்தும், பெற்றவள் எப்படி இருக்கிறாளோ என்கிற அக்கறையே காட்டாத மகனிடம் உள்ளூரப் பெருகிக்கொண்டே வந்த கோபம் வேறு, அந்தப் பரிவை எதிர் விகிதமாக, மிகுதியாகப் அதிகரிக்கச் செய்தது.

மகனின் அலட்சியத்தை ஈடு கட்டுகிறவள் போலத் தினமுமே, அந்தத் தாயைப் போய்ப் பார்த்து, அன்போடு நலம் விசாரித்து மேலும் சற்று நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதை, அவள் வழக்கமாக்கினாள்.

சுபத்ராவின் கூடவே துணையாக இருக்கும் தாயம்மாவும், அந்த நேரத்தில் சற்று வெளியே சுற்றிவிட்டு வருவாள்.

தினமும் போய் நிற்பது, சுபத்ராவுக்குத் தொல்லையாக இருக்கக் கூடுமோ என்று சின்னவளுக்கு எழுந்த சிறு சந்தேகத்தையும், “இப்படித் தினசரி இரண்டு வேளையும் வருவது, உன் அன்றாடச் செயல்பாட்டுக்குப் பிரச்சினையாக இருக்குமோ என்று கொஞ்சம் கவலையாகத்தான் இருக்கிறது. ஆனால், தயவுபண்ணி அதைச் சமாளித்துக்கொண்டு, கட்டாயம் வாம்மா. உன்னைப் பார்க்கிறபோது, மனதுக்கு ரொம்ப இதமாக இருக்கிறது. ஆனால், இந்தப் பழம், சத்து பிஸ்கட் எதுவும் வேண்டாம். டாக்டர் சொல்படி நான் சாப்பிடத் தேவையான எல்லாம், இங்கேயே தருகிறார்கள். தாயம்மாவுக்கும் சாப்பாடு வந்து விடுகிறது. அதனால், எதுவும் கொண்டுவர வேண்டாம். நீ சும்மா வந்தாலே, யானைப் பலம் வந்த மாதிரி, தெம்பாக இருக்கிறது!” என்று சொல்லி, சுபத்ரா தீர்த்து வைத்தாள்.

முன் பின் பழக்கமற்ற யாரோ ஒருத்தி! அவள் கொஞ்ச நேரம் வந்து

இருந்தாலே தெம்பாக இருக்கிறது என்றால், இந்தப் பெண்மணி, துணைக்காக வெகுவாக ஏங்குகிறாள் என்றுதானே பொருள்!

இதுவே, உறவாக . . அதுவும் பெற்ற மகனே வருவதாக இருந்தால், எவ்வளவு சந்தோஷப் படடக் கூடும்! இந்தத் தாயைப் பற்றி எண்ணிக் கூடப் பாராமல், எங்கேயோ ஜாலியாகச் சுற்றிக்கொண்டு இருக்கிறானே! இவனையெல்லாம் கட்டி வைத்து உதைக்க வேண்டும் என்று, தனக்குள்ளே அவனைத் திட்டித் தீர்த்தாள் சுமனசி.

வெளிப்படையாக எதுவும் சொல்லாவிட்டாலும், இளம் வயது ஆண்களை, அந்தத் தாயின் கண்கள் ஏக்கத்துடன் தொடர்வதைக் காணும்போது, அவளுக்கு இன்னும் அதிகமாக எரிச்சல் வரும்.

அந்த உதவாக்கரை மகனின் அலட்சியத்துக்கு ஈடு கட்டுகிறவள் போல, தினமும் அங்கே பார்த்தது, இங்கே கேட்டது என்று, சிரிக்கச் சிரிக்க ஏதாவது சொல்லுவாள்.

அம்மா பிடிக்குமா, அப்பா பிடிக்குமா என்று கேட்ட பெற்றோரிடம், ரெண்டு பேரையும் பிடிக்காது. ஐஸ்கிரீம் வண்டிக்காரனைத்தான் பிடிக்கும்., எவ்வளோ ஐஸ்கிரீம் வச்சிருக்கான் என்று மழலையில் பதில் சொன்ன குழந்தையைப் பற்றி, உரிய விதத்தில் சுவாரசியம் கூட்டி, சுமனசி சொல்ல, பெரியவள் வாய்விட்டு நகைக்கும்போது, அதைக் கேட்டுப் புன்னகை செய்தபடி மருத்துவர் உள்ளே வந்தார்.

" "வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்பது நிஜம்தான். ஆனால், இப்படிச் சிரிக்க வைத்து, எங்கள் வருமானத்தைக் கெடுத்து விடுவாய் போலிருக்கிறதே!" என்று வேடிக்கையாகக் கேட்டபடி, சுபத்ராதேவியின் நோய், சிகிச்சை சார்ட்டை எடுத்துப் பார்த்தார்.

"ம், குட்! எல்லாம் நார்மல். ரத்தக் குழாய் அடைப்பு ஒன்றும் பிரமாதம் இல்லையே! அன்று அப்படி ஆக வேண்டிய தேவையே இல்லை. ஏதேனும் மனதை அலட்டிக் கொண்டீர்களா?" என்று சரளமாகப் பேசிவாறே மருத்துவர் கேட்க, "ஆமாம், டாக்டர். மமகனைப் பற்றிக் கொஞ்சம் கவலையாக இருந்தது. பெரியவர்கள் கவலை, பிள்ளைகளுக்கு எங்கே தெரிகிறது? கோவிலுக்குப் போய்விட்டு வந்தால் மின்சாரம் இல்லாமல் படியேற நேர்ந்தது. எல்லாம் சேர்ந்து கொண்டது என்று நினைக்கிறேன்." என்று, சின்னக் குரலில் சுபத்ரா கூறவும், மருத்துவர் லேசாகச் சிரித்தார்.

"என் தாயார் கூட, என்னைப் பற்றி இப்படித்தான் அலட்டிக்

கொள்வார்கள். வேளைக்குச் சாப்பிடாமல் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறேனாம். நானே ஒரு வைத்தியன். வயது ஐம்பதை நெருங்குகிறது! என் உடல் நலம் பேண எனக்குத் தெரியாதா என்று யோசிக்காமல், கவலைப்பட்டுப் பட்டு, தன் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்வார்கள்! உலகில் எல்லா அம்மாக்களும் ஒரே மாதிரிதான். ஆனால் அம்மாக்களின் உடல்நிலை கெடும்போது, அது மக்களாகிய எங்களுக்கும் கவலைதானே? அதை யோசித்து, உங்கள் உடம்பை, நீங்கள் ஆரோக்கியமாக வைத்துக் கொண்டு, எங்களைக் கவலை இல்லாத மனிதர்களாக வாழச் செய்ய வேண்டும்., சரியாம்மா?" என்று அவர் கேட்ட விதத்தில், சுபத்ராவின் முகத்தில் சற்று அசட்டுத்தனம் கலந்த புன்னகை தோன்றியது!

ஆனால், தாய்க்காகக் கவலைப்படும் மகன்களில் தன்னோடு அந்த யுகேந்திரனையும் டாக்டர் சேர்த்துக் கொண்டாரே, அதில் சுமனசிக்கு உடன்பாடே இல்லாது போயிற்று. முழு மறுப்பு! நூறு சதவீதமாய் அவள் மனம் அதை மறுத்தது!

திடீரென எங்கிருந்தோ வந்து, தாமரைக் குளத்தை யானை கலக்குவது போல, மருத்துவர்களின் முடிவுகளைத் தூக்கி எறிந்து, அந்த யுகேந்திரன் செய்த தடபுடல், மற்றவர்களுக்கு எப்படியோ, அவளது கருத்தை இன்னமுமே உறுதிப்படுத்தியது!

# அத்தியாயம் -3

அன்று சுபத்ரா வீடு திரும்புவதாக இருந்ததால், முந்திய நாளே, அந்த ஃபளாட்டை சுத்தம் செய்து வைத்தாள்.

கைப்பணம் செலவு பண்ணாமல், சுமனசி யாருக்கு என்ன உழைத்தாலும், ஆனந்தவல்லிக்கு ஆட்சேபனை கிடையாது.

காலையில் பாலை வாங்கி ஃப்ரிட்ஜில் வைத்துவிட்டு, மருத்துவமனைக்குப் போனால், பில்லைக் கட்டி சுபத்ராவை டிஸ்சார்ஜ் செய்து அழைத்துப் போக வேண்டிய செகரட்டரி சாரையும் காணவில்லை!

அதை விட அதிசயமாக சுபத்ராவையும் அறையில் காணவில்லை. கடைநிலைப் பணியாளர்கள் வந்து, மெத்தை விரிப்பு, தலையணை உறை முதலியவற்றை அகற்றிக் கொண்டிருந்தார்கள்.

வியப்பும் திகைப்புமாகச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அந்தத் தளத்தின் பொறுப்பை நிர்வகிக்கும் அலுவல் அறைக்குப் போய், சுமனசி விவரம் கேட்டாள்.

“அவர்கள் காலையிலேயே. . ஏழு மணிக்கே கிளம்பி விட்டார்களே!” என்றார்கள் அங்கிருந்தவர்கள்.

“ஏழு மணிக்கா? அந்த நேரத்தில் கணக்கு முடித்து அனுப்புவீர்களா?” என்று வியப்புடன் சுமனசி வினவினாள். குழப்பமாகவும். ஏனெனில், காலை பத்து மணிக்குத்தான், பண விவகாரம் பார்க்கும் அலுவலர்கள் வேலை தொடங்குவார்கள். எனவே அதன்பின்தான் சிகிச்சை பெற்றவரை “டிஸ்சார்ஜ்” செய்ய முடியும் என்று மருத்துவமனை அலுவலகத்தில் சொல்லி, அதற்காகவே சுமனசியும் அவளது அலுவலகத்தில் அரை நாள் விடுப்பு கேட்டு வந்திருந்தாள்.

இப்போது ஏழு மணிக்கே சுபத்ராதேவி கிளம்பி விட்டார்கள் என்றால், எப்படி?

ஆனால், இரவுப் பணி நேரம் முடிந்து, காலையில் பொறுப்பேற்றிருந்த புது அலுவலர்களுக்கும் முழு விவரம் தெரியவில்லை. காலையில் ஏழு மணிக்குக் கிளம்பி விட்டார்கள் என்று மட்டுமே சொன்னார்கள்.

சுமனசி குழப்பத்துடன் நின்றபோது, நல்லவேளையாக, இரவுப்

பணி முடித்து, உடை மாற்றி அங்கே வந்த நர்ஸ் மலர்மதி சுமனசியைப் பார்த்ததும், புன்னகையோடு முன்னே வந்தாள்.

இந்த ஒரு வாரத்தில் நன்கு பழகிவிட்ட உரிமையோடு, “என்ன சுமனசி, மேடத்தைத் தேடி வந்தாய் போல. அவர்களுடைய மகன் இரவே வந்து, செலவான கணக்கையெல்லாம், அதிகமாக அட்வான்ஸ் பணம் கட்டிக் காலையிலேயே கூட்டிப் போய்விட்டாரே! “ என்று விவரம் சொன்னாள்

“ஏழு மணிக்கே என்றால், வீட்டுக்கு வரவில்லையே! “ என்று சுமனசி மறுபடியும் குழம்பினாள்.

“சரிதான் போ.சுபத்ரா மேடத்தை வீட்டுக்குக் கூட்டிப் போவதாக நான் எப்போது சொன்னேன்? “ என்று, கண்ணால் சிரித்து மற்றவள் கேட்கவும், சுமனசி இன்னமும் குழம்பினாள்.

வாய்விட்டுச் சிரித்து, “ஏய் வாப்பா. போய்க்கொண்டே பேசலாம். “ என்று சுமனசியோடு கைகளைக் கோர்த்து, “லிஃப்டை” இழுத்துப் போனாள்.

செல்லும்போதே, “மேடத்துடைய மகனுக்கு, இங்கே அளிக்கப்படும் சிகிச்சை திருப்தி இல்லையாம். அதனால், பெரிய்ய கார்ப்பரேட் நிறுவனத்தின் மருத்துவனைக்கு அழைத்துப் போயிருக்கிறார். இரண்டாம் கருத்துக் கட்டாயம் தேவையாம். இங்கே உள்ளவர்களை விடப் பெரிய மருத்துவர்களிடம் காட்ட வேண்டுமாம்! என்னென்ன சிகிச்சை நடந்திருக்கிறது? எந்தெந்த டாக்டர்கள் சிகிச்சை கொடுத்தார்கள்? என்ன சிகிச்சை செய்தார்கள்? அப்பாடியோவ்! அவரது கேள்விகளுக்கு முடிவே கிடையாது என்று தோன்றிவிட்டது!” என்றாள் நர்ஸ்! “கடைசியாக, இன்னும் பேர் வாங்கின பெயர் பெற்ற டாக்டரிடம் காட்டி, அபிப்பிராயம் கேட்கக் கூட்டிப் போயிருக்கிறார். அவரது ஆசைக்கு ஏதோ செய்து பார்க்கட்டுமே!” என்று சிரித்தாள். “ஆனால், என்ன ஒரு தடபுடல், தெரியுமா? என்னவோ, இங்கே எதுவுமே சரியில்லை என்பது போலப் பேசி அலட்டியதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. இங்கே யாரும் வேலையில் குறை வைப்பது கிடையாது என்பது உனக்கே தெரியும்.” என்று தொடர்ந்து சிறு எரிச்சலுடன் கூறி முடித்தாள். .

“லிஃப்டை” விட்டு வெளியேறி, அடுத்திருந்த வரவேற்பை அடைந்து, மலர்மதி பணி நேர ரிஜிஸ்டரை வாங்கிக் கையெழுத்திட்டாள்

கூடவே நின்ற சுமனசி பொருமினாள். “ஆன்ட்டி மயக்கமுற்று

விழுந்து கிடக்கும்போது, “மெஸேஜ்” அனுப்பியும் அருமை மகன் வரவில்லை. மனிதருக்குக் காசு வேலை பெரிதாக இருந்தது போல! இப்போது, வேலை முடிந்ததும், அம்மா நினைவு ஒரு வழியாக வந்து, ஓடி வந்துவிட்டார்! கிட்டத் தட்டக் குணமான பிறகு, இங்கே வந்து, இரண்டாம் அபிப்பிராயம், பெரிய பெரிய மருத்துவர்கள் என்று, பந்தாக் காட்ட வந்துவிட்டார்! இதைப் பார்த்து, தாயாரிடம் இவருக்கு மிகுந்த அன்பு என்று எல்லோரும் எண்ண வேண்டுமாமோ? நல்ல வேடிக்கை! காமெடி தாங்கலை, மலர்! ஆனால், உண்மை நடப்புத் தெரிந்தவர்கள் இதை நம்புவார்களா என்கிற யோசனையே இல்லை, பாரேன்!” என்றாள் ஏளனமாக.

“நம்புகிறவர்களும் இருப்பார்கள்ப்பா. நிஜமாகச் சொல்வதானால், அவர் பரபரத்தது, நடிப்பு மாதிரி எனக்கே தோன்றவில்லை. ஆனால். . . யார் கண்டது? எதுவாகவும் இருக்கலாம். நாம் என்ன, மனதுக்குள்ளே போய்ப் பார்க்கவா முடிகிறது? ரைட். நான் கிளம்புகிறேன், சுமனசி. நீ எப்படி? இங்கே சுபத்ரா மேடம் கூட இல்லையே! என்னோடு வருகிறாயா? “ என்று மலர்மதி கேட்டாள்.

“இல்லைப்பா. நான், இங்கே ஆன்ட்டிக்குச் சிகிச்சை கொடுத்த டாக்டரிடம் போய், ஏதாவது விவரம் கிடைக்கிறதா என்று பார்த்துவிட்டுப் போகலாம் என்று இருக்கிறேன். நீ கிளம்பு.” என்றாள் சுமனசி.

“ஓகே, பைப்பா!” என்றுவிட்டு அவள் வெளியேற, அவளுக்குக் கை ஆட்டி விடை கொடுத்துவிட்டு, சுபத்ராவுக்குச் சிகிச்சை கொடுத்த மருத்துவர் இருக்குமிடம் செல்வதற்காக, சுமனசி மறுபடியும் உட்புறம் செல்லத் திரும்பினாள்.

ஆனால், “மன்னிக்க வேண்டும், சுமனசி. உங்களிடம் ஒரு வார்த்தை பேச வேண்டும்.” என்று நெடுநெடுவென்று உயரமான ஒரு வாலிபன், அவளது வழியை மறித்து நின்று கூறவும், திகைத்து விழித்தாள்.

அது ஒன்றும், ஆள் நடமாட்டம் இல்லாத இடமல்ல. ஒரு புறம் வரவேற்புப் பகுதி. மறுபுறம், ஏதோ காரணமாக மருத்துவமனைக்கு வந்தவர்கள் உட்காரும் பகுதி. பணம் கட்ட, விவரம் கேட்க என்று ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்குமிடம். எனவே, அவன் யாரானாலும், கெட்ட நோக்கத்துடன் அவளை வழி மறித்தான் என்று சொல்ல முடியாது.

அதே சமயம், முன்பின் அறிமுகம் இல்லாதவன் என்பதும்

நிச்சயமே! ஆனால், பெயரை வேறு தெரிந்து வைத்திருக்கிறான்!

எப்படியும், இவன் அவளிடம் பேச, என்ன இருக்கிறது?

சந்தேகமும் மறுப்புமாக, அவள் பக்கவாட்டில் நகரவும், அவன் அவசரமாகப் பேசினான். "என்னைத் தவறாக எண்ண வேண்டாம். நான், உங்களுடைய சுபத்ரா ஆன்ட்டியுடைய மகன். பெயர் யுகேந்திரன். பில் கட்டிய ரசீதுக்காக, இங்கே அமர்ந்து காத்திருந்தபோது . ." என்று கையால் அங்கே கிடந்த சோஃபாக்களை காட்டி, "இதோ, இங்கே உட்கார்ந்து காத்திருந்தபோது, நீங்கள் பேசியது முழுவதையுமே, கேட்க நேர்ந்தது. . ." என்றவன், அவளது முகம் கன்றிச் சிவப்பதைக் கண்டு, சற்று பேச்சை நிறுத்தி, அவளது முகத்தை வியந்து பார்த்தான்.

கால் பெருவிரலை அழுந்த ஊன்றி, முகச் சிவப்பை சமாளிக்க முயன்றாள் சுமனசி.

சே! இப்படி ஒருவன் காதில் விழக் கூடும் என்ற எண்ணமே இல்லாமல், என்னவெல்லாம் பேசிவிட்டாள் என்று குன்றும்போதே, அவள் பேசியதில் என்ன தப்பு இருக்கிறது என்று மனம் நிமிரவும் செய்தது.

வருமானம் பெரிதென்று பெற்ற தாயை அலட்சியம் செய்கிறவன், இது போன்ற கருத்துக்களை எப்போதேனும் கேட்டுத்தானே ஆக வேண்டும்.? அவனுக்குப் புத்தி புகட்டும் பணியைத்தானே செய்திருக்கிறாள்! நல்லது செய்துவிட்டுக் குன்றிக் குறுகுவானேன்?

தனக்குத் தானே வக்காலத்து வாங்கி நிமிர்ந்தவள், "சாரி. நீங்கள் இங்கே இருந்தது எனக்குத் தெரியாது. ஆனால் . . . நான் மனதில் எண்ணியதைத்தான் சொன்னேன். அதில் எந்த வித மாற்றமுமில்லை." என்றாள், உணர்ச்சி காட்டாத குரலில் .

"அதைத்தான், உங்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் உங்களிடம் பேச வேண்டும் என்றேன்." என்றான் சத் புத்திரன்.

எப்படியும், அரை நாள் விடுப்பு இருக்கிறது. இவன் என்ன விதமாகக் காதில் பூ சுற்ற முயற்சிக்கிறான் என்றுதான் பார்க்கலாமே!

அவளது முகத்திலேயே ஒப்புதலை உணர்ந்து, "இங்கே கான்டீன் இருக்கிறதாம். அங்கே போய் ஒரு காஃபி அருந்தியபடியே பேசலாமா?" " என்று அழைத்தான் அவன்.

அங்கே கான்டீன் இருப்பது, சுமனசிக்கும் தெரியும். சுபத்ராவைப் பார்க்க வரும்போது, சில சமயம், மூவருக்குமாக, அங்கிருந்து டீ வாங்கி

வந்திருக்கிறாள். தாயம்மாவுக்குத் தனியாக ஏதாவதும் வாங்கி வருவதுண்டு.

பொதுவாக, நோயாளிகளின் அறைகளுக்கே ஆர்டர் பண்ணி விடுவதால், உட்கார்ந்து சாப்பிட ஆட்கள் அதிகம் இல்லாத இடம் அது. மூலை பார்த்து ஓரிரு ஜோடிகள் அமர்ந்து பேசப் பார்த்திருக்கிறாள். தனியே இவனோடு அங்கே அமர்ந்து பேசுவதா?

அவளை, இவன் என்னவென்று நினைத்துக் கொண்டான்?

மறுபடியும் அவள் முகத்தைப் படித்து, “பாருங்கள், நான் டெல்லியில் வசித்து, அங்கேயே தொழில் நடத்துகிறவன். அங்கே பெரும்பாலும் சற்று இலகுவாகப் பேசிப் பழகுகிற வழக்கம். இங்கே அப்படியில்லை என்று தெரியாமல், காஃபி அருந்தக் கூப்பிட்டு விட்டேன். மறுபடியும் சாரி. நீங்கள் ஒத்துக்கொள்ளுகிற இடத்தில் உட்கார்ந்து பேசலாம்.” என்றான் அந்த யுகேந்திரன், பதவிசாக.

அவன், தன்னைப் பார்த்துச் சிரிக்கிறானோ என்ற சந்தேகம் வந்தது அவளுக்கு.

இவன் வசிக்கும் டெல்லி என்ன மகா நாகரீகம்? இந்தத் தமிழ்நாட்டு மதுரை என்ன முழுப் பட்டிக்காடு? மூன்று சங்கம் வைத்து மொழி வளர்த்த இந்த மதுரையின் புகழ் பெற்ற தமிழர் நாகரீகம் பற்றிப் பெற்ற தாயைப் பற்றிய நினைவு கூட இல்லாமல் எங்கேயோ, அவனே சொன்ன மாதிரி “இலகுவாகப் பழகி” வாழும் இவனுக்கு என்ன தெரியும்?

ஆத்திரத்தை வெளிப்படையாகக் காட்டி, பட்டிக்காடு பட்டத்தை உறுதி செய்துவிடக் கூடாது என்று எண்ணி, “இங்கே கூட, ஆணும் பெண்ணும் சேர்ந்து காஃபி குடிப்பதை யாரும் தப்பாகக் கருதுவது இல்லை, சார். ஆனால், அன்னியர்களோடு சட்டென்று நான், அந்த மாதிரி எங்கேயும் போவதில்லை. அவ்வளவுதான். விஷயம்.” என்றாள் மிகவும் நயந்த குரலில்.

“ஆனால், நான் உங்களுக்கு மிகவும் தெரிந்த சுபத்ரா ஆன்ட்டியின் மகன்தானே?” என்று அவன் புரியாத அப்பாவி போலப் புருவம் உயர்த்திக் கேட்கவும் “மாட்டினாய் மகனே” என்று மனதிற்குள் குதூகலித்து, “ஆனால், அப்படி நீங்கள்தானே சார், சொல்லிக் கொள்கிறீர்கள்?” என்று மடக்கினாள் அவள்.

ஒரு கணம் திகைத்துவிட்டு, “மறுக்க முடியாத விஷயம்!” என்று முறுவலித்தான் அவன். “நமக்குள் உரியவாறு அறிமுகம் செய்விக்க

இப்போது யாரையும் கொண்டுவர முடியாது என்பதால், காண்டீனை ரத்து செய்து விடலாம். ஆனால், ரொம்பவும் பொது இடமான இங்கேயே, இந்த சோஃபாக்கள் எதிலாவது உட்கார்ந்து பேசலாமா? அதில் ஒன்றும் பிரச்சினை இல்லையே?”

நிச்சயமாகக் கிண்டல்தான் செய்கிறான்.

ஆனால் ஒன்று. ஆன்ட்டிக்கு நிஜமாகவே பெரிதாக ஒன்றும் இல்லை என்று தெளிவாகியிருக்க வேண்டும்! மற்றபடி, இவனால், இவ்வளவு இலகுவாகப் பேச முடியாது!

ஆனாலும், இவனை அளவில் நிறுத்தியாக வேண்டும்!

யோசனையோடு, வரவேற்பில் மேலே மாட்டியிருந்த பெரிய கடிகாரத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு, “இன்னும் இருபது நிமிஷங்களில் நான் கிளம்பியாக வேண்டும். என்ன சொல்லுவதானாலும், நீங்கள் அதற்குள் முடித்தால் நல்லது! “என்று கறார்க் குரலில் கூறிவிட்டு, விடுவிடுவென்று இருக்கைகளில் காலியாக இருந்த இடத்தை நோக்கி நடந்தாள். “இங்கே உட்கார்ந்தே பேசலாம். பொது இடத்தில் ஒருவர் அருகே அமர்ந்து பேசுவதைத் தவறாக நினைக்கும் அளவுக்குத் தமிழ்நாடோ, அதிலே மதுரையோ பட்டிக்காடு அல்ல.” என்று, அவனுக்கு இடம் விட்டு அமர்ந்தாள்.

இயன்ற அளவு, அவளிடமிருந்து ஒதுங்கி அமர்ந்தவனின் கண்ணோரம் சுருங்குவதைக் கண்டவள் வேறு எதையோ ஆர்வத்துடன் பார்க்கிற பாவனையில் அவசரமாகப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

ஆனால், கிட்டத்தட்ட ஒருநிமிஷமே கடந்த பிறகும், அவனிடமிருந்து சத்தமே எழாது போகவும்,ஓரக் கண்ணால், அவனை நோட்டம் விட்டாள்.

நேர் எதிரே வெறித்திருந்து அவனது பார்வை, அவளைத் திகைக்க வைத்தது!

அப்படி என்ன பிரச்சினை, இவனுக்கு? அல்லது, நடிப்பா?

எதுவானாலும், இவன் வாயிலிருந்து எப்போது முத்து விழும் என்று அவளால் காத்திருக்க முடியாதே!

லேசாகத் தொண்டையைச் செறுமி, “என்னவோ சொல்ல வேண்டும் என்றீர்கள்?” என்றாள் அவள்.

ஒப்புதலாகத் தலையாட்டி, “உண்மை!” என்றான் அவன்.

“ஆனால், எதிலிருந்து தொடங்குவது என்றுதான்  யோசனையாக இருக்கிறது . . .” என்றவனை இடைமறித்து, “யோசிக்க அதிக நேரம் எடுத்துக் கொள்ளாதீர்கள். அப்புறம், உங்கள் விளக்கத்தைக் கேளாமலே, நான் கிளம்ப வேண்டி நேரலாம்.” என்று எச்சரித்தாள் அவள்.

“போயேன்” என்று கூறினான் என்றால்?

சற்று அளவு மீறி விட்டோமோ என்று அவள் எண்ணும்போதே, அவன் தன் விளக்கத்தைத் தொடங்கிவிட்டான்.

ஒரு மணி நேரம் பயணம் செய்தால், குற்றாலத்தை அடைந்து விடலாம். அங்கேதான் ஒரு சிற்றூரில், யுகேந்திரன் குடும்பத்தாரின் பூர்வீகச் சொத்தும் வீடும்.

குற்றால மலையால் வாபம், நஷ்டம் இரண்டும் இருந்தது. மழை மறை பிரதேசம் என்பதால், தேவையான மழை இராது. ஆனால், நிலத்தடி நீர் ஒரேயடியாக வற்றாது. வீட்டை ஒட்டி, ஓரளவு கிணற்றுப் பாசனம் செய்ய முடியும்.

யுகேந்திரன் ஒரு ஜர்னலிஸ்ட். டெல்லி வாசி. சற்றுத் துணிந்து வேலை செய்கிறவன். பெரும்பாலும், அவைகளை உண்மைச் சம்பவங்கள் என்று குறும் படங்கள் தயாரிப்பதும் உண்டு.

தாயாருக்கு ஊர்தான் பிடித்தம். முக்கியமாக டெல்லி பிடிக்கவில்லை. கொஞ்ச காலம், அங்கே கூட்டிப்போய் வசிக்க வைத்தது, அவளுக்குக் கொஞ்சமும் சரிவரவில்லை. எனவே, மகனிடம் பிடிவாதம் பிடித்து, மறுபடியும் சொந்த ஊருக்கே போய்விட்டாள்.

நடைமுறைப் பிரச்சினைகளால், ஓரளவு மகனுக்கும் அதுவே வசதியாகத் தோன்றிவிடவே, அவ்வப்போது வந்து பார்ப்பதோடு, தாயின் விருப்பம் போல விட்டுவிட்டான்.

ஆனால், கடைசித் தடவை வரும்போது, சுற்று வட்டாரத்தில் கொள்ளை, கொலைச் சம்பவங்கள் பெருகியிருப்பது தெரிய வர, தனித்து வாழும் அன்னையின் நிலை குறித்து, அவனுக்குப் பெருங் கவலை உண்டாயிற்று.

தாயம்மா, அன்னையின் நிழல்தான். ஆனால், அவனுடைய தாயை விடவும் ஏழெட்டு வயது மூத்தவளான அவள் என்ன பெரிய துணை? இன்னும் இரண்டு ஆட்களை வைத்தாலுமே, போதுமான பாதுகாப்பாக இராது என்று யுகேந்திரனுக்குத் தோன்றியது.

எனவே, தாயார் அங்கே இருப்பது நல்லதல்ல என்று, அவன்

உறுதியாக நினைத்தான்.

ஆனால், டெல்லிக்கு வரவோ, சுபத்ரா ஓரேயடியாக மறுத்தாள்.

எனவே, பூர்வீகச் சொத்துக்கு ஓரளவு பக்கமாக, அவ்வப்போது அங்கே போய்ப் பார்வையிட்டுவிட்டுத் திரும்பி வர வசதியாக, மதுரையில் ஒரு பெரிய வசதியான ஃப்ளாட் வாங்கி, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பக்காவாகச் செய்து, அதிலேயே அன்னை வசிக்க ஏற்பாடு செய்தான்.

மதுரையும் தாயாருக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால், மகன் இந்த விஷயத்தில் உறுதியாக இருந்தான்.

" "நான் அங்கே, நிம்மதியாக வேலை செய்ய வேண்டாமா? வேலை நடுவில், நீங்கள் நல்லபடியாக இருக்கிறீர்களா என்ற கவலையிலேயே, அவ்வப்போது எவ்வளவு நிலை குலைந்து போகிறேன், தெரியுமா? என் வேலை, அரைகுறைக் கவனத்துடன் செய்யக் கூடியது அல்ல. இப்படியே போனால், இவ்வளவு நாள் மிகவும் சிரமப்பட்டு அடைந்திருக்கும் இடத்திலிருந்து, என்னை அப்படியே தூக்கி எறிந்து விடுவார்கள்." என்று நான் சொன்னபோது கூட, அம்மா கேட்கவில்லை. "மற்றவர்கள் எறிவானேன்? நீயே வந்துவிடு. உன் வேலையே எனக்குப் பிடிக்கவில்லை." என்று வேறு கூறத் தொடங்கி விட்டார்கள். மிகவும் கடுமையாக உழைத்து, இந்த உயரத்துக்கு வந்துவிட்டு, அவ்வளவு இலகுவாக அதை விட்டுவிட முடியுமா?" என்றுரைத்துப் பெருமூச்சு விட்டான் யுகேந்திரன்.

அப்படி என்ன, அவன் அன்னைக்கே பிடிக்காத மகா வேலை அவன் செய்வது என்று தோன்றினாலும், சுமனசி அது பற்றி எதுவும் கேட்கவில்லை.

என்னவோ, அவளுக்குத் தெரியும் போல அவன் பேசிய விதம், அவளைத் தயங்க வைத்தது. அப்படி என்ன அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டிய வேலை, அது?

ஒருவேளை, அவனுடைய தாயுடன் உள்ள நெருக்கத்தை அதிகப்படியாக மதிப்பிட்டு, தாயார் எல்லாவற்றையும் சுமனசியிடம் சொல்லியிருப்பாள் என்று எண்ணிப் பேசுகிறானோ?

அப்படி நெருக்கம் எதுவும் இல்லை என்று சொல்ல அவள் எண்ணும்போதே, யுகேந்திரன் மேலே பேசத் தொடங்கினான்.

"எனவே, அம்மாவின் கருத்தை என்னால் ஒப்ப முடியவில்லை. உள்ள நிலைமையைச் சொல்லி, அவர்களிடம் வெகுவாக வாதாடினேன்.

பல ஆண்டு காலமாகப் பலப்பல காரணங்களால் நாம் இழந்த அனைத்தையும், இப்போதுதான் மீட்டிருக்கிறோம். அதை நிலைப்படுத்த வேண்டுமானால், இன்னும் நாலு ஆண்டுகள் மழை பொய்த்தாலும், வெள்ளம் அழித்தாலும் தாங்கும் அளவு சேமித்தாக வேண்டும் என்பதுதான் நம்  நிலைமை. அப்படிச் சேமிக்கும் வரையிலேனும் என்னை நிம்மதியாக வேலை செய்ய விடுங்கள் என்று எடுத்துச் சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடி, இந்த மதுரை ஃப்ளாட்டுக்குக் குடிவரச் செய்தேன்.

"சொல்லுங்கள் சுமனசி, நான் செய்ததில் ஏதாவது பிழை இருக்கிறதா?" என்று சிறு வருத்தத்துடன், அவளையே கேட்டான் யுகேந்திரன்.

ஒரு கணம் திடுக்கிட்டாள் சுமனசி.

என்ன இது! இருந்திருந்து, தன்னிடம் போய் பெரிதாக அபிப்பிராயம் கேட்கிறானே என்று மனம் இளகியது அவளுக்கு!

சேச்சே, நீங்கள் எந்தத் தப்பும் செய்யவே இல்லை என்று சொல்ல எண்ணிக் கிட்டத்தட்ட வாயைத் திறந்தவள், ஒரு கணம் தயங்கினாள்.

யுகேந்திரன் இப்படி இறங்கிப் பேசுவதே, அவனைப் பற்றி, சுமனசி கூறியதுதான் பிழை என்று அவள் வாயாலேயே ஒப்புக்கொள்ள வைக்கும் முயற்சியாக இருக்குமா?

சுற்றி வளைத்துப் பேசி, அவளது காதுகளில் பூவை வைத்தே விட்டானா?

அவசரமாக யோசித்தாள் அவள்.

# அத்தியாயம் -4

சுமனசி வேக வேகமாக யோசிக்கும்போதுதான், மலர்மதியிடம் பேசியபோது, அவனைப் பற்றி, அவள் குற்றம்சாட்டிய விஷயமே வேறு என்பது, அவளுக்கு நினைவு வந்தது.

யுகேந்திரன் உருக்கமாகச் சொந்தக்கதை பேசிய விதத்தில், அவளது குற்றச்சாட்டு என்ன என்பதையே மறக்கடித்துவிட்டானே! கெட்டிக்காரன்தான்!

“உங்கள் அம்மாவுக்காக நீங்கள் எவ்வளவோ யோசித்து, இவைகளைச் செய்ததெல்லாம் சரிதான், யுகேந்திரன் சார். ஆனால், ஆன்ட்டிக்கு உடம்பு சரியில்லாமல் போய், உங்களுக்குச் செய்தி அனுப்பியும், இந்த ஒரு வாரமாக உங்களிடம் இருந்து தகவலே இல்லையே! ஆன்ட்டி, உங்களுக்காக எவ்வளவு ஏங்கினார்கள், தெரியுமா? அதுதான், எனக்கு வருத்தம்!” என்று தன் பேச்சுக்குக் காரணம் சொன்னாள் சுமனசி.

அழகாகப் பழங்கதை சொல்லி, கிட்டத்தட்ட மன்னிப்புக் கேட்கும் அளவுக்கு அவளைக் கொண்டுபோனவன், இப்போது என்ன கதை சொல்லி சமாளிக்கப் போகிறான்?

எந்தப் பொய்யையும் உடனே கண்டுபிடிப்பதற்காகக் கண்களோடு காதுகளையும் தீட்டிக்கொண்டு அவள் காத்திருந்தால், “அந்தத் தகவலே எனக்கு, நேற்றுதான் கிடைத்தது.” என்றான் அவன், கோபமும் வருத்தமுமாக.

உண்மை போலவே அவன் சொன்னபோதும், சொத்தென்று ஆகிப் போனது, சுமனசிக்கு.

இந்த செல்ஃபோன் யுகத்தில், இப்படியொரு சொத்தைக் காரணத்தை யாராவது நம்புவார்களா? அவளை முழு முட்டாள் என்றே கருதிவிட்டானா? இன்னும், இவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தால், அவள் முட்டாளேதான்.

ஏமாற்றமும் எரிச்சலும் மண்ட, அவனை நிமிர்ந்து பார்க்கக் கூட, அவளுக்குப் பிடிக்கவில்லை. ஏன்? அமர்ந்திருக்கும் ஆசனம் கூடத் தணலாய்ச் சுடுவது போல உணர்ந்து, வரவேற்புப் பகுதிக் கடிகாரத்தில் ஓரக்கண்ணால், மணி பார்த்தாள்.

அந்தப் பார்வையையும் அவன் விட்டு விடவில்லை. “நீங்கள் சொன்ன இருபது நிமிஷங்கள், இன்னமும் ஆகவில்லை, சுமனசி!

இதோ, முடிந்தவரை சுருக்கமாகவே சொல்லி முடித்து விடுகிறேன். அம்மாவின் உடல்நிலை பற்றி, உங்கள் சங்கத்து செகரட்டரியின் செய்தி வந்தபோது, நான் வேலை காரணமாக வெளியூரில் இருந்தேன். செல்ஃபோன் டவர் இல்லாத ஒரு காட்டுப் பகுதி. அது போன்ற இடங்களுக்குச் செல்லும்போது, என் செயலாளரிடம், இங்குள்ள . . அதாவது, டெல்லி வேலைப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் போவேன். என் செல், அலுவலக மேஜையறையில்தான் இருக்கும். தினமும் அதைப் பார்த்து, அன்றன்றே தேவையானதைச் செய்ய வேண்டியது, அந்தப் பெண் சுரய்யாவின் பொறுப்பு. ஆனால், வீட்டில் சில பிரச்சினைகளால், அதாவது, அவளுடைய கணவனுக்கு ஒரு மோசமான விபத்து நேர்ந்து, மருத்துவமனையே கதியாகக் கிடந்ததில், அவள் அலுவலகத்துக்கே செல்லாமல் இருந்திருக்கிறாள்.

“கடைசியாக, அந்த மலைப் பகுதியில் ஷூட்டிங்கை முடித்துக்கொண்டு, கிளம்பி வந்தால் . . . “

ஷூட்டிங்? சுமனசியின் மூளைக்குள் ஏதோ பளிச்சிட்டது!

வடக்கே உள்ள செய்திச் சேனல்களில் யுகி . . யூகி நல்ல மதியூகிதான் என்று தந்தை அடிக்கடி குறிப்பிடுகிற செய்தியாளன் . . . அந்த யூகி இவன்தானா?

அப்படியானால், இவன் பேச்சும் எல்லாமே மெய்தானோ?

சங்கத்து செகரட்டரி இவன் காலடியில் கிடக்கிறார் என்றால், அதன் காரணமும், இதுவாகவே இருக்குமா?

சமீபத்தில் கூட, மிகவும் ஆபத்தான வேலையில் ஈடுபட்டிருப்பதாக . . .ஏதோ பயங்கரவாதிகள் சம்பந்தப்பட்ட வேலையில் இவன் . . . கடவுளே! அந்தக் கவலையில்தான், சுபத்ரா ஆன்ட்டி கோயிலுக்குப் போய்விட்டு வந்திருக்கிறார்கள்! வந்து, படிகளில் வேறு ஏறி . . .

அவன் குரல் தொடர்ந்து கேட்டது!

“ . . .      சே! செல்லைப் பார்த்ததும் எப்படி இருந்தது, தெரியுமா? அம்மாவுக்கு இப்போது ஒன்றுமில்லை என்று செகரட்டரி சொல்லும்வரை, எனக்குப் பைத்தியம் பிடிக்காத குறைதான். உடனே, ஒரு விமானத்தைச் சார்ட்டர் பண்ணிக்கொண்டு ஓடி  வந்தேன். என்னவோ, இந்த மருத்துவமனையின் “ஒன்றுமில்லை”யை என்னால் முழு மனதாக ஒத்துக்கொள்ள முடியவில்லை. அந்தத் துறையில் ரொம்பவும் புகழ் பெற்றவரிடம், அம்மாவைக் கூட்டிப் போனேன். இதிலே ஏதும் தப்பு இருக்கிறதா?”

இதற்கு மேல், எப்படித் தப்புக் காண்பது?

எந்த நாணயத்துக்குமே இரண்டு பக்கங்கள் இருக்கும். அதனால்தான் விசாரணை நடத்தி, இரு பக்கத்து நியாயங்களையும் கேட்பது என்று, நீதிபதி ஒருவர் சொல்ல, அவள் கேட்டிருக்கிறாள்.

விசாரணை, விசாரணை என்று நீதி மன்றத்து நேரமும், மக்களின் பணமும் எப்படி விரயமாகிறது என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலாக, அவர் இப்படிக் கூறினார். அவரே ஜட்ஜ் என்பதால் வெறுமனே சப்பைக்கட்டுக் கட்டுகிறார் என்று, அப்போது சுமனசியே நினைத்தாள்.

ஆனால் இப்போது வேறு விதமாகத் தோன்றியது.

பாவம்! செல்லில் மெஸேஜைப் படித்ததும், எப்படிப் பயந்து கலங்கியிருப்பான் என்று, அவளது மனம் உருகியது.

அந்த உருக்கத்தில், ஒரு வழியாக வீட்டுக்கு வந்து சேர்ந்த சுபத்ராவிடம், “யுகேந்திரன் சார், உங்கள் பிள்ளை. ஒரே மகன். அவர் அன்போடு கூப்பிடும்போது, டெல்லிக்குச் சென்று  அவரோடு கூட இருந்தால் என்ன? உங்களைப் பற்றிய கவலைகள் இல்லாமல், அவருக்கும் நிம்மதியாக இருக்கும் அல்லவா?” என்று வாதித்தாள்.

ஆனால், யுகேந்திரனைப் பெற்றவள் வேறு சொன்னாள். “அங்கே டெல்லியில் மட்டும் யுகன் என்னோடு கூடவேயா இருக்கிறான்? காலை போய் மாலையில் திரும்பி வந்தால் பரவாயில்லை. ஆனால், வேலை வேலை என்று மாதம் இரண்டு நாட்கள் என்னோடு அந்த வீட்டில், அவன் இருந்தால் அதிசயம்! அவன் செய்கிற வேலை எவ்வளவு ஆபத்தானது என்று, இப்போது உனக்குத் தெரிந்திருக்கும். போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்புகிற பிள்ளை, திரும்பி வந்த பிறகுதான் நிச்சயம். அது வரை பதைப்புதான்.

“போகட்டும். கெட்டிக்காரப் பிள்ளை., எப்படியும் கட்டாயமாகத் திரும்பி வந்துவிடுவான் என்று, அதுகூடஒரு மாதிரிப் பழகி விடுகிறது என்று வைத்துக்கொள்.

“அவன் ஊரில் இருக்கிற அந்த இரண்டு நாட்களுமே கண்ட கழுதைகளின் கூட்டம், வீட்டுக்கே வந்து மொய்ப்பதையும், அதுகள், அவன் மேலே விழுந்து பழகுவதையும் பார்த்தாலே, பார்த்த பாவம் தீரக் கங்கையில் தினமும் இரண்டு தரம் நான் குளிக்க வேண்டும்! அவ்வளவு மோசம்!

“என் பிள்ளையிடம் கேட்டால், இந்தத் தொழிலில், இந்த ஊரில், இதில் பெரிதாக நினைப்பதற்கு ஒன்றுமே கிடையாதும்மா என்கிறான்.

“போதும்டா சாமி என்று, மனது வெறுத்துப்போய்விட்டது. பாஷை புரியாத ஊரில், எதையெதையோ நினைத்து வருந்தியபடி மொட்டு மொட்டென்று மோட்டைப் பார்த்து விழித்துக்கொண்டு தனியே கிடப்பதை விட, எங்கள் செய்யூரில், காய்ந்து வறண்ட நிலத்தைப் பார்த்துக்கொண்டு இருப்பது, எவ்வளவோ மேல் என்றுதான் திரும்பி வந்துவிட்டேன்.

“இனி, யுகன் கூடப் போய் இருப்பது எனறால், பேரப் பிள்ளைகள் பிறந்த பிறகுதான். அதுகள் முகத்தையாவது பார்த்துக்கொண்டு இருக்கலாம் அல்லவா?” என்று பொருமித் தீர்த்தாள் பெரியவள்!

“ஹூம், யார் கண்டது? அந்தப் பேரப் பிள்ளைகளைப் பத்து மாதம் சுமந்து பெற்றவள், அதற்கெல்லாம் அனுமதிப்பாளோ? அல்லது, என் புருஷன் தனியாக இருந்தபோது, கூட இருந்து சோறு பொங்கிப் போடவில்லை., கூட்டு, குழம்பு, அவியல் பொரியல் செய்து கொடுக்கவில்லை., நான் கஷ் . .டப்பட்டுப் பிள்ளை பெற்றால், அதைக் கொஞ்ச மட்டும் வந்து விடுவீர்களோ என்று விரட்டுவாளோ? அது, அப்புறம்தான் தெரியும்!” என்று சுமனசி கேலிக் குரலில் பரிகசிக்க, “நீ சும்மா மிரட்டாதே, தாயே! அப்புறம் எனக்கு மறுபடியும் நெஞ்சு வலி வந்துவிடப் போகிறது! ஹா!” என்று சுபத்ரா நடிக்க, இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது.

ஒன்றிலிருந்து ஒன்றாகப் பழங்கதைகளை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த அப்போது, சுமனசிக்கு ஏதோ சுரீலென்றது.

மகனுக்குத் திருமணம் ஆனதுமே, அவர்களோடு கூடப் போய்ச் சேர்ந்து வசிப்பேன் என்று, சுபத்ரா ஆன்ட்டி சொல்லவில்லை. அதைத் தாண்டி, பேரப்பிள்ளைகள் என்பானேன்? மகன் குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை, அப்போதே அவர்களுக்கு இல்லையோ என்ற சந்தேகம், காலம் கடந்து, அவளுக்கு இப்போது வந்தது!

ஆனால், அப்போது இந்தச் சந்தேகங்கள் எதுவுமே வரவில்லை!

பேரக் குழந்தைகள் பிறந்து, அந்தக் குழந்தைகள்தான், கணவனையும் மனைவியையும் இணைக்கிற பாலமாக இருக்கப் போகிறார்கள் என்று, அன்று ஆன்ட்டி கருதியிருப்பார்கள் போல!

ஆனால், ஒரு குழந்தை உருவாகும் காலம் கூட, ஒருத்தியால் அவனோடு சேர்ந்து வாழ முடியாது என்று, அப்போது யாருக்குத் தெரிந்தது?

இன்றைக்கு எதைஎதையோ யோசிக்கிற மனது, அன்றைக்கு  இது

போல எந்தக் கேள்வியையுமே கேட்கவில்லை.

சுபத்ரா ஆன்ட்டிக்காக அவன் மீது ஏற்பட்ட கோபம், அவனுடன் ஒரு முறை பேசியதுமே காற்றிலிட்ட கற்பூரமாகக் காணாமல் போனபோதே, அவன் எப்படிப்பட்ட கெட்டிக்காரன் என்று அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்!

பார்த்தறிவு, படித்தறிவு, கேட்டறிவு, பகுத்தறிவு எனும் பல்வேறு விதமாக அடையக் கூடிய அறிவுகளில், பட்டறிவு . . அதாவது, தானே நேரடியாக அனுபவப்பட்டு அறியும் பட்டறிவுதான் சிறந்தது என்று பெரியவர்கள் சொல்வதுண்டு. அது மெய்யே என்று, பெரும் துன்பம் பட்டுத்தான் சுமனசிக்குப் புரிய வேண்டியிருந்தது.

மற்றபடி, பெற்ற தாயே மகன் வீட்டில் வாழப் பிடிக்காமல் திரும்பி வந்ததும், அதற்காக அவள் சொன்ன காரணங்களும், அவள் மனதில் சற்றும் பதியாமல் போவானேன்?

இத்தனைக்கும், யுகேந்திரனின் தோற்றம் மனதைக் கவர்வதாக இருந்தபோதும், அவனது பேச்சிலும் ஓர் ஈர்ப்பை உணர்ந்தாலும் கூட, சுமனசி அவளாகப் போய், அவன் காலடியில் விழுந்தாள் என்று சொல்ல முடியாது.

நேர் மாறாக, சுபத்ராவின் வீட்டுப் பக்கமே அவள் போகவில்லை. டெல்லியில், இரண்டு நாட்கள் கூடத் தாயாருடன் சேர்ந்திருக்க முடியாமல் வேலை வேலை என்று பறந்த பிரிய மகனுடன், இங்கேனும் ஆன்ட்டி மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கட்டும் என்ற எண்ணம் சுமனசிக்கு.

அதற்காக அவள் ஒதுங்கிப் போனால், அன்று மதியமே யுகேந்திரன் அவளுக்கு ஃபோன் செய்து, “என்ன சுமனசி, அம்மாவைத் தினமும் காலை மாலை இரண்டு வேளையும் மருத்துவமனைக்குப் போய்ப் பார்த்துப் பேசிக் கொண்டிருப்பீர்களாமே, இன்று உங்களைப் பாராமல் ரொம்பவும் ஒரு மாதிரி இருப்பதாக அம்மா ஒரே புலம்பல்! தாயம்மா கூட, “காலையிலே எட்டு அடித்தாக்க, சுமாப் பொண்ணு வந்திடும், இன்னைக்கு அந்த அழகான முகத்தைப் பார்க்காமல் நல்லாவே இல்லை, தம்பி” என்கிறாள். உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால், ஒரு தளம் மேலே வந்து, அம்மாவைப் பார்த்துவிட்டுப் போயிருக்கலாமே?” என்று சிறு வருத்தக் குரலில் கேட்டான்.

அழகான முகமா? அவனுக்கும் அப்படித் தோன்றக் கூடுமா என்று மனம் தானாக நினைக்க, அதை ஒதுக்க முயன்றபடி அவள் பேசினாள்.

“அது . . . அது சார், நீங்கள் வந்திருப்பதால், உங்களோடு பேசிக் கொண்டிருக்க விரும்புவார்கள் என்று நினைத்தேன் . . .” என்றவளைக் குறுக்கிட்டு, யுகேந்திரனே மறுபடி பேசினான்.

“ஆக நான்தான் காரணம் என்று சொல்லுங்கள். ஒரு வேளை என்னைப் பார்க்கப் பிடிக்கவில்லை என்றால், நான் வேண்டுமானால், நீங்கள் வருகிற சமயத்தில் வீட்டில் இல்லாமல் வெளியே சுற்றப் போய்விடுகிறேன்.” என்று, அவளது மறுப்பு இடையீடுகளைக் கவனியாதவன் போல வேகமாகக் கூறி முடித்தான்.

“ஐயோ, என்னசார் நீங்கள்? என்னைச் சொல்ல விடாமல், ஏதேதோ பேசிக்கொண்டே போகிறீர்கள்? நீங்கள் ஆன்ட்டியுடைய ஒரே மகன். வெளியூரில் வேறு இருக்கிறீர்கள். அபூர்வமாக வருகிறவர். தாயாருடன் பேசிக் கொண்டிருப்பதற்கு, நீங்களும் ஆசைப்படலாம். ஆன்ட்டிக்கும் அப்படித்தான் இருக்கும். இடைஞ்சலாக, நான் ஏன் ஊடே வருவது? நீங்களே சொல்லுங்கள்?” என்று, தன் நிலையை எடுத்துச் சொன்னாள் சுமனசி.

சற்றும் தயங்காமல், “ஏனென்றால், அது என் அம்மாவின் விருப்பம்!” என்றான் அவன். “அவர்களது இந்த வீட்டில், மற்றெதையும் விட, அதற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படும். சொல்லுங்கள், மாலையிலாவது வீட்டுக்கு  . .அம்மாவைப் பார்ப்பதற்கு வருவீர்களா? நான் இருப்பது உங்களுக்குச் சங்கடமாக இருந்தால், தயக்கமின்றிச் சொல்லலாம். அம்மாவுக்காக நான் அந்த நேரத்தில் . . . “

“என்ன சார், நீங்கள்? நீங்கள் வீட்டில் இருப்பதில், எனக்கு என்ன கஷ்டம்?  எங்கள் அலுவலகத்தில் பல ஆண்கள் பணி செய்கிறார்கள். எனக்கு ஒரு பிரச்சினையும் ஏற்பட்டதில்லை. நான் மாலையில் வருகிறேன். எனக்காக, நீங்கள் உங்கள் அம்மாவை விட்டுப் போகாதீர்கள். ப்ளீஸ்.” என்று, சற்று மன்றாடியே கேட்டுக் கொண்டாள்.

சுபத்ரா ஆன்ட்டிக்காகச் சொன்னதுதான். அதாவது, அவள் செல்லும் தருணத்தில், அவன் வீட்டில் இருக்கும்படி, அவளே உறுதிப் படுத்திய மாதிரியும்  எண்ணலாமே என்று சுமனசிக்கு லேசாக உறுத்தலாகவே இருந்தது.

ஆனால், தாயும் மகனும், தாயம்மாவும்கூட, அவளை ஆவலாக வரவேற்ற விதத்தில், அந்த உறுத்தல் அடியோடு மறைந்தது.

ஆனால், எல்லாமே இயல்பாக நடந்ததா? அல்லது, அவள் அப்படிக் கூறி, அவளாக வரும் விதமாக, அவன்தான் உரையாடலைக் கொண்டு சென்றானா? தாயின் பெயரைச் சொல்லி, அவன் வீட்டுக்கு

வரவழைத்ததோடு, அவனோடும் பேசிப் பழக வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறான்!

கவனம் உள்ளவளே என்றாலும், இந்த யோசனைகள் எல்லாம் அப்போது கொஞ்சமும் வரவில்லை.

தாயாருடன் கூடவே இருந்து, யுகேந்திரன் அவளை வரவேற்றதாகட்டும், தாயம்மாவுக்கு உதவி செய்யும் பாவனையில் அவளை உபசரித்ததாகட்டும், சின்னச் சின்ன ஜோக்குகள் சொல்லி, உரையாடலில் தொய்வு விழாமல் கவனித்ததாகட்டும், எல்லாமே மனதிற்கு சுகமாகத்தான் இருந்தது. மகிழ்ச்சியாகவும் கூட!

“பாப்பாவுக்கு என்ன பலகாரம் பிடிக்கும்?” என்று தாயம்மா கேட்கவும்தான், நேரம் எட்டு மணியைத் தாண்டிவிட்டதை உணர்ந்து, விடை பெற்றுக்கொண்டு, சுமனசி வீட்டுக்கு விரைந்தாள்.

பசுபதி வழக்கம் போலச் செய்திச் சானலில் மூழ்கியிருக்க, அவளை ஒரு விதமாகப் பார்த்து, “இவ்வளவு நேரம் எங்கே சுற்றிவிட்டு வருகிறாய்? உன் ஸ்கூட்டர் சத்தம் சாயங்காலமே கேட்டதே?” என்றாள் ஆனந்தவல்லி.

“சுபத்ரா ஆன்ட்டி மருத்துவமனையில் இருந்து வந்துவிட்டார்கள் அல்லவா? போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். பேசிக் கொண்டிருந்ததில் நேரமாகிவிட்டது.” என்றபடியே, சுமனசி அவளது அறையை நோக்கிச் செல்லலானாள்.

சாதாரணமாகத்தான் அவள் போனாள்.

ஆனால், முதுகில் குத்துவது போன்ற உணர்வு, சிற்றன்னை அவளை வெறிப்பதை உணர்த்தியது.

என்ன பெரிய தப்பு செய்துவிட்டாள்? சுபத்ரா ஆன்ட்டியைக் காலையும் மாலையும் மருத்துவமனைக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தபோது ஒன்றும் சொல்லவில்லை. இன்றைக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தால், போய் எட்டிப் பார்க்க வேண்டாமா? பெரிதாக என்ன முறைப்பு?

பொருமியவாறே உள்ளே சென்றபோது, “இங்கே எல்லோரும் சாப்பிட்டாயிற்று. நீ உண்டதும், எல்லாவற்றையும் ஒதுங்கவைத்துவிடு.” என்று ஆனந்தா சாதாரணமாகக் கூறியது, ஆச்சரியமாக இருந்தது.

என்ன இது? அவள்தான் எதையும் தப்புத் தப்பாக யோசிக்கிறாளா?

குற்ற உணர்வுடன் திரும்பி, “சரி சித்தி.” என்றால், சித்தியின் முகபாவனை, அவளை மறுபடியும் குழப்பியது.

என்ன சிரிப்பு என்று யோசனை ஓடும்போதே, சுமனசி தன்னைத் தானே உலுக்கி விட்டுக் கொண்டாள்.

ஏன் தப்பாக நினைக்க வேண்டும். தாமதமாகிறதே என்று யோசித்த சித்திக்கு, பெண் வந்துவிட்டது நிம்மதியாயக் கூட இருந்திருக்கலாம். சிற்றன்னை என்றாலும் அன்னை நிலைதானே?

ஆனால், அவள் காலையில் கிளம்பும்போது, “இதோ இந்த டப்பாவில், சத்து மாவு கொஞ்சம் எடுத்து வைத்திருக்கிறேன். கொண்டுபோய் அந்தம்மாவிடம் கொடுத்துக் குடிக்கச் சொல்லு. நோய்ப்பட்ட உடம்புக்குத் தெம்பாக இருக்கும்.” என்று ஆனந்தா கூறவும், இதுதான் பூலோகமா என்று சுமனசிக்குத் தலை சுற்றிவிட்டது.

ஆதாயம் இல்லாமல் சித்தி, எச்சில் கையால் காக்காய் கூட விரட்டமாட்டாளே! முந்திரி, பாதாம், ஏலக்காய் எல்லாம் போட்டு அரைத்த சத்து மாவையே கொடுப்பதானால், இது சும்மா நடக்காதே!

என்ன யோசித்தும் சிற்றன்னையின் ஆழ் மனத் திட்டத்தைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், சத்துமாவைக் கொண்டு போய்க் கொடுப்பதற்கு, சுமனசி மறுக்கவில்லை.

முக்கியமான காரணம் சுபத்ராவின் உடம்பு தேறுவதுதான். அது நிச்சயமே. ஆனாலும், யுகேந்திரனைச் சந்திக்கவும் அவளுக்கு ஆவலாக இருந்தது.

எப்படியும், தாயின் உடல்நிலை நன்றானதும், பழைய மாதிரியே தாயம்மாவிடம் விட்டுவிட்டு, அவன் கிளம்பிவிடப் போகிறான். அதற்குள், அவனது சுவாரசியமாக பேச்சையும் கவர்ச்சிகரமான சிரிப்பையும் கூடுதலாக ஒரு தரம் கேட்டு, பார்த்து ரசிக்கலாமே!

சத்து மாவைக் கொண்டு கொடுத்தால், அவனேதான் கதவைத் திறந்தான்.

அவளைப் பார்த்ததும், அவனது முகம் மலர்ந்த விதத்தில், அவளது உள்ளம் துள்ளியது.

சிறு புன்னகை அளவில் அதை அடக்கி, வந்த விஷயத்தைச் சொல்லி மாவை நீட்டினால், அவன் கைகளைப் பின்னே கட்டிக்கொண்டு சிரித்தான்.

“எ . .என்ன?” என்று திகைத்தாள் அவள்.

“இது, என் அம்மாவுக்கும், அவர்களுடைய சின் . .னத் தோழிக்கும் உள்ள கொடுக்கல் வாங்கல். இதில், நான் எப்படித் தலையிடுவது? உள்ளே வந்து அம்மாவிடமே நேரில் தரலாமே!” என்று மேலும் நகைத்தபடியே வழியை விட்டு ஒதுங்கி நின்றான்.

தன்னை மீறி முறுவலித்தவாறே, சுமனசி உள்ளே செல்ல, அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

“எங்கள் வீட்டுக்கு வந்தவர்களைச் சும்மா அனுப்ப மாட்டோம். எவ்வளவுதான் வயிறு முழுதாக நிரம்பியிருந்தாலும், ஒரு கப் காஃபியாவது குடித்தால்தான் போக விடுவோம். அப்படித்தானே, தாயம்மா?” என்று துணைக்கு வேலைக்காரம்மாவையும் கூப்பிட, அவளும் மகிழ்ந்து “கட்டாயம், தம்பி!” என்று காஃபி போடப் போனாள்.

“தேவையில்லாமல் தாயம்மாவுக்கு இன்னொரு வேலை !” என்றாள் சுமனசி.

“என்ன செய்வது? எனக்கு இன்னொரு காஃபி வேண்டும் என்று கேட்டால், இவ்வளவு காஃபி குடிப்பதா என்று, அம்மா திட்டுவார்கள். அதனால்தான், பக்கத்து இலைக்குப் பாயசம் போடச் சொன்னேன்!” என்று அவன் புன்னகையோடு விளக்க, அவளுக்குச் சிரிப்பு வந்தது.

வரவேற்பாகத் தந்த முறுவல் தவிர, அவ்வளவு நேரம் பேசாமல் இருந்த சுபத்ராவும் சேர்ந்து சிரித்துவிட்டு, “ஆமாமாம். அம்மாவின் திட்டுக்கு ரொம்பப் பயப் படுகிற பிள்ளைதான்! தேவைக்குப் பின்னே காட்ட இதைப் பத்திரமாகக் காற்றிலே எழுதிவைத்து விடலாமா?” என்று கிண்டலடிக்க, “அம்மா, ப்ளீஸ்! “ என்று கரம் குவித்தான் பிள்ளை. “அதிசயமாகக் கிடைத்த அவகாசம்! அனுபவிப்போமே?”

ஒரு கணம் மகன் முகத்தை அசையாது பார்த்த சுபத்ராவின் முகம் மெல்ல இளகியது.

புன்னகையோடு சுமனசியைப் பார்த்து, “பாரம்மா! இந்த வேலையே வேண்டாம் என்கிறேன். இவன் அதிசயமாகக் கிடைத்த அவகாசத்தைக் கெடுக்க வேண்டாம் என்கிறான். இந்தத் தொழிலை விட்டுவிட்டால், அவகாசம் அதிகம் கிடைக்கும்தானே? இந்தச் சின்னக் கணக்கு இவனுக்குப் புரியவில்லையே!” என்றாள்.

“ஊகூம்! கஷ்டப்பட்டுக் கற்று, முண்டியடித்து முன்னுக்கு வந்திருக்கும் தொழிலை விட்டுவிட்டு, நான் வருமானத்துக்கு என்ன செய்வது? உத்தியோகம் புருஷ லட்சணம், அம்மா!” என்று யுகேந்திரன் இலகுவாகவே வாதிட்டான்.

“புருஷ லட்சணமா? ஆகா, இதை ஒத்துக்கொள்ள முடியாதே! நானும் வேலை  பார்க்கிறேனே!” என்றாள் சுமனசியும் அவனைப் போன்று இலகுக் குரலிலேயே.

“போச்சுடா! தப்பான  . .இல்லை, தப்பாக்கப் பட்டுவிட்ட பழமொழி! இன்றைய நிலைக்கேற்ப, உத்தியோகம் இளைய தலைமுறை லட்சணம் என்றிருக்க வேண்டுமோ? “ என்று யுகேந்திரன் தன்னைத் திருத்திக் கொண்டான்.

இதிலும் வாதம் புரிய இடம் இருந்தது. ஆயினும், அவன் தாயை மீறி, தன் தொழிலைத் தொடர்வதின் காரணம் தெரிந்திருந்ததால், சுமனசி மேலும் அவனை மறுத்துப் பேசவில்லை.

அங்கிருந்து கிளம்பும்போது, கீழ்த் தளம் வரை கூட வந்த யுகேந்திரன், “அம்மாவுக்கு சந்தோஷமாக, இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்ததற்கு நன்றி. சற்று அதிகத் தாமதம் ஆகிவிட்டது என்று தோன்றுகிறது. அதற்காக வண்டியை அதிக வேகமாக ஓட்ட வேண்டாம். ப்ளீஸ் . . எனக்காக! ஓகே? “ என்று அவன் தணிந்த குரலில் கெஞ்சுதலாகக் கேட்டபோது, சிறகு முளைத்தது போல, அவளது மனம் வானத்தில் பறந்தது.

அவனுக்காக அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாமே! இவன் என்ன குறிப்புக் காட்டுகிறான்?

கண்டுகொள்ளாதவள் போல, “எனக்காகவுமே, நான் என்னைக் காப்பாற்றிக் கொள்வேன், சார்.” இயன்றவரை மிடுக்காகச் சொல்லிவிட்டு ஸ்கூட்டரைக் கிளப்பினாள் அவள்.

ஆனால், அத்தோடும் நில்லாமல், சுமனசி அலுவலகம் சென்று சற்று நேரத்தில் அவளைக் கூப்பிட்டு, “நீ பத்திரமாக அலுவலகம் போய்ச் சேர்ந்தாயா என்று தெரிந்து கொள்ளத்தான் அழைத்தேன். வைத்துவிடுகிறேன்.” என்று யுகேந்திரன் கூறவும், அவள் மிகவும் பரவசப்பட்டுப் போனாள்!

அவளுக்காக இவன் இவ்வளவு கவலைப்படுகிறானே!

# அத்தியாயம் -5

அத்தோடுமே யுகேந்திரன் நிறுத்திவிடவில்லை.

மாலையில் சுமனசி வீடு திரும்பும் நேரத்தில் எதிரே வந்து, அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது! அடிகிடி பட்டிருந்தால் கூட, ஃபோனில் தெரியாதல்லவா?” என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

கிளுகிளுப்பாக உணர்ந்தபோதும், “யுகேந்திரன் சார், ஆனாலும், இது ரொம்ப அதிகப்படி! எனக்குப் பதினெட்டு வயது ஆனதில் இருந்து, கடந்த ஐந்து ஆண்டுகளாக, இந்த ஸ்கூட்டரை ஓட்டுகிறேன். எனக்கு ஒன்றும் ஆனதில்லை! தெரியுமா?” என்றாள் அவள், சற்று எடுப்பாகவே.

ஆனால், “பதினெட்டும் ஐந்தும், இருபத்து மூன்று. அருமையான வயது!” என்று அவன் வேறு கணக்குப் போட்டுக் கூறவும், முகம் செக்கச் சிவந்து போயிற்று, சுமனசிக்கு.

“நான் . .நான் ஸ்கூட்டரைப் பார்க் பண்ணப் போக வேண்டும்.” என்று உளறியடித்துவிட்டு, வண்டியைத் தள்ளிக்கொண்டு ஓடிப் போனாள்.

வீட்டுக்குப் போய்ப் பார்த்தால், வாயெல்லாம் பல்லாக, ஆனந்தா இருந்தாள்.

பல்வேறு அளவுகளில் சின்னத் தேக்கரண்டியில் இருந்து, பெரிய குழம்பு, சாதக் கரண்டிகள் வரை அடுக்கி மாட்டி வைத்திருந்த பெரிய, மெல்லிசான பெட்டி மேஜை மேல் திறந்து வைக்கப் பட்டிருந்தது. விலை ஆயிரங்களில் இருக்கும்!

“அவர் அம்மாவுக்குச் செய்த உதவிக்காக, நன்றி காட்ட வாங்கி வந்தாராம்! மறுக்கக் கூடாதாம். இதையெல்லாம் எடுத்துப் பயன்படுத்தினால், யுகிக்கு சந்தோஷமாம்.”

யுகி? சித்தி ரொம்ப வழிவது போல சுமனசிக்குத் தோன்றியது. யுகேந்திரனிடம் இன்னும் எவ்வளவு வழிந்தாளோ? “ஏன் சித்தி, நம் வீட்டில் இதுவரை கரண்டிகளே இல்லாமல், கையால் வழித்துப் போட்டா, பரிமாறிக் கொண்டிருந்தோம்?” என்றாள் எரிச்சலாக.

இது போலப் பரிசுகள் தொடரக் கூடாது என்று கருதி, யுகேந்திரனிடமும் அதையே சொன்னாள். “எங்கள் வீட்டிலும், எல்லாத் தேவைகளுக்கும் கரண்டிகள் உண்டு, தெரியுமா? அதனால் . . .”

அவள் முடிக்குமுன் குறுக்கிட்டு, “அதனால் திருப்பி விட வேண்டாம்.” என்றான் அவசரமாக. “உன் சித்தியை நல்ல மூடில் வைத்துக்கொள்ள எண்ணினேன். . . “

இளம் புன்னகையோடு அவள் முகத்தையே பார்த்து, அவன் சொன்னபோது, தன்னை மீறி, அவள் முகம் மலர்ந்தது.

அவன் பார்த்துக் கொண்டிருப்பது புரிய, “இதெல்லாம் இல்லாமலே சித்தி சத்து மாவெல்லாம் கொடுக்கத்தானே செய்தாள்?” என்று, அவசரமாகச் சமாளித்தாள்.

“இன்னும் கொஞ்ச நாள் அப்படியே இருக்கட்டுமே என்றுதான்!” என்றான் அவன் கடைசி வார்த்தையைத் தனதாக்கி.

அவள் புரியாமல் நோக்கியபோது புன்னகை செய்ததோடு வேறு பேசத் தொடங்கிவிட்டான்.

மதுரையின் சிறப்புகள் பற்றிக் கேட்டுவிட்டு, மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தன்னை  கூட்டிச் செல்ல முடியுமா என்று அவளைக் கேட்டான் அவன்.

கோயிலுக்கே என்றாலும், என்னோடு தனியே சுற்ற வா என்று, இதை விடத் தெளிவாக அழைக்க முடியாது! புருவம் நெரிய அவள் ஏதோ சொல்ல முயன்றால், அவன் பேசிக்கொண்டே போனான்.

“இங்கே உள்ள வழிகாட்டிகளிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. நீயானால், அடிக்கடி பக்தி மட்டுமின்றிக் கலைகளை ரசிப்பதற்காகவும், அடிக்கடி அங்கே போவாய் என்று கேள்விப்பட்டேன். என்னைப் பொறுத்தவரை, இரண்டாம் விஷயம்தான் முக்கியம். அதனால்தான் உன்னைக் கேட்டேன். ஆனால் . .சாரி, அது ஒன்றும் தப்பில்லையே? நீயும், நானும் தனியே கோயிலுக்குப் போவது?” என்று விவரம் விசாரித்தான் அவன்.

காஃபி ஷாப்புக்கே தயங்கியவள். இப்போது கோயிலுக்கு என்றால் எப்படி?

அவனோடு செல்லப் பிரியம் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அறிந்தவர்கள் அதிகம் உள்ள இடத்தில், அது வதந்தியைக் கிளப்பி விடக் கூடும் என்ற சஞ்சலம் அவளுக்கு.

ஆனால், அதைச் சொல்லி, அவனிடம் பட்டிக்காட்டுப் பட்டம் வாங்கவு[ம் அவளுக்கு மனமில்லை. எனவே சிற்றன்னையின் பக்கம் கைகாட்டி விட்டாள்.

“சித்தி ஒத்துக் கொள்ள வேண்டும்.” என்றாள்.

அது நிச்சயமாக நடக்கப் போவதில்லை என்று உள்ளூர அவள் உறுதியாக நினைத்தால், “நம்ம மீனாட்சி கோயில்தானே? நீ கரைத்துக் குடித்த கோயில்! எதெது பார்க்க வேண்டும் என்று யூகித் தம்பிக்குக் காட்டிகொடும்மா. எல்லாம் விலாவாரியாக எடுத்துச் சொல்லு. தம்பியோட அடுத்த படத்தை அம்மன் கோயிலிலே கூட எடுக்கலாம்.” என்று மகிழ்ந்தாள், ஆனந்தா.

“கடவுள் காப்பாற்றட்டும்!” என்று வாய்க்குள் முனகினான் யுகேந்திரன்.

காது கேளாத தூரம் சென்றதும், “என்ன?” என்று கேட்டாள்

“உன் சித்தி, செய்தியோடிணைந்த என் படங்களைப் பார்த்ததே இல்லை என்று தெரிகிறது.” என்றான் அவன், சற்று வறண்ட குரலில்.

“சாரிப்பா. நான் கூடப் பார்த்தது இல்லை. அப்பா மட்டும்தான், எப்போதும் செய்திச் சானல்களையே பார்க்கிறவரா, அவர் சொல்லித்தான், நீங்கள் செய்தி சார்ந்த  படங்கள் எடுப்பது எனக்குத் தெரிய வந்தது.” என்றாள் சுமனசி.

“எக்ஸாக்ட்லி. இதே போல உன் சித்தியும் தெரியாது என்று உண்மையைச் சொல்லியிருக்கலாம், அல்லவா? அதை விட்டு, அடுத்த லொகேஷனுக்கு மீனாட்சி அம்மன் ஆலயத்தைச் செல்கிறார்கள்?” என்றான் கோபமாக.

அவள் புரியாமல் நோக்கவும், “என் தயாரிப்புகள், வன்முறையாளர்களை மையக் கருத்தாகக் கொண்டவை. அம்மன் கோயிலை நிலைக்களனாகக் கொள்வதானால், அங்கே வன்முறையாளர்கள் என்ன செய்வதாக எடுப்பது? ஒரு தங்கக் கோயில் விவகாரமே, நாடு இன்னும் தாங்க முடியவில்லை. இங்குமா? “ என்று எரிச்சல்பட்டான்.

விழிகள் விரிய, “வன்முறையாளர்கள் பற்றி . . அந்தந்த இடங்களுக்கே போய் எடுப்பீர்களா? ஆபத்து இல்லையா?” என்று சுமனசி அச்சத்துடன் வினவினாள்.

“பணம் நிறைய அதில்தான் வரும்.” என்றான் அவன் சுருக்கமாக.

யுகேந்திரனுக்கு, அவனது தொழில் பற்றிப் பேச, அப்போது பிடிக்கவில்லை என்று சுமனசிக்குப் புரிந்தது.

ஆனால் . . .

கோயிலுக்குள் சென்றதும், யுகேந்திரன் ஆளே மாறிவிட்டான். ஒவ்வோர் இடமாகப் பார்த்து ரசித்த விதத்தில், சுமனசியின் மனதும் குதூகலித்தது. பொன் மாலைப் பொழுது போன இடமே தெரியவில்லை.

தெரிந்தவர்களைச் சந்திக்கத்தான் நேர்ந்தது.

ஆனால், “இங்கே அம்மாவுக்குக் கீழ் ஃப்ளாட். இந்தக் கோயில் சுற்றிக் காட்டத் துணை வந்தார்கள்.” என்று அவன் கௌரவமாகக் கூறிய விதம் அவளுக்குப் பிடித்தது.

“இனியும் நான் அன்னியன் அல்ல. எனவே, காஃபி குடிப்பதற்கு வந்தேஆக வேண்டும்.” என்று கூறி அழைத்துப் போனவன் மணம் புரியக் கேட்கவும், சுமனசி திகைத்துப் போனாள்.

“என்ன சொல்லுகிறீர்கள்? நாம் சந்தித்து ஒரு வாரம் கூட முழுதாக முடியவில்லை!” என்றாள் அவள்.

“என்னவோ ராமனுக்கும் சீதைக்கும் ஒரு பார்வை .போதுமானதாக இருந்ததாமே! எனக்கும் அப்படித்தான். உனக்கு வேறு காரணம் இருந்தால் சொல். என்னைப் பிடிக்கவில்லையா?”

“அ . .அது பிரச்சினை இல்லை. ஆனால், உங்கள் வாழ்க்கை முறையே வேறு ஆயிற்றே!” என்றாள் சுமனசி.

அப்படியெல்லாம் பெண்கள் வந்து விழுந்தால் அவள் எப்படித் தாங்குவாள்? அதைக் கேட்கும்போதே உள்ளூர எரிகிறதே! பெற்ற தாயே சொல்லும்போது, பொய்யென்று எப்படிக் கொள்வது?

ஆனால், அவன் பதில் வைத்திருந்தான். “அம்மா வேலை என்று தெரிகிறது. ஆனால், அப்படிக் கூத்தடிக்கிறவன் நானில்லை. அங்கே சென்ற புதிதில், விவரம் புரியாமல் ஓரிரு தவறுகள் செய்திருக்கலாம். ஆனால் இப்போதெல்லாம், யாரை எங்கே நிறுத்துவது என்று தெரிந்துதான் நடத்துகிறேன். அத்தோடு, அம்மாவின் தலைமுறை வேறு. நீ அப்படியில்லை என்று எனக்குத் தெரியும். அதுவும், நாம் இருவரும் மனம் ஒத்துப் போகும்போது, வேறு எது பிரச்சினை ஆக முடியும்? சொல்லு? பார் சுமி, உன்னைப் பிரிந்து டெல்லி செல்வதை என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. என்னைப் பிரிவது, உனக்கு சுகமாகவா இருக்கும்? இல்லைதானே?” பதிலை அறிந்தவன் போலவே கேட்டான்.

“தன்னெஞ்சறிய பொய்யற்க”

யுகேந்திரன் இப்படி நேரடியாகக் கேட்கும்வரை, இவ்வளவு ஆழமாக சுமனசி இது பற்றி யோசித்ததில்லை. யோசிக்காமல் ஒதுக்கி

வைத்திருந்தாள் என்றே சொல்லலாம். ஆன்ட்டியிடைய பிள்ளை. வந்திருக்கிறான். அவனுடன் பேசுவது நன்றாக இருக்கிறது. ஒரு வாரம் பத்து நாட்களில், அவன் கிளம்பிப் போய்விடுவான். அதுவரை சிரித்துப் பேசலாம். அதற்கு மேல் எதையும் நினைக்கக் கூடாது!

இந்த அளவில் இருந்தவளுக்கு, அவன் கேட்ட பிறகுதான் தன்னையே புரிந்தது. பிரிவது, அவளாலும் நிச்சயமாக முடியாதுதான்.

உள்ளூரசிறு கலக்கத்துடனேயே வீட்டில் விஷயத்தை வெளியிட்டபோது,, சிற்றன்னை உடனே சம்மதித்ததோடு, சற்றே யோசித்த பசுபதியோடு பெண்ணுக்காக வாதாடி ஒத்துக்கொள்ள வைத்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால், பிரச்சினையே இராது என்று நினைத்த சுபத்ராவின் சம்மதம் எளிதில் கிடைக்காதது, சுமனசியை ரொம்பவும் திகைக்க வைத்தது.

என்னதான் பிரியமாக இருந்தாலும், பேரும் புகழுமாக இருக்கும் மகனுக்கு ஏற்றவள் இல்லை என்று, பெரியவள் கருதுகிறாளோ என்று வருத்தம் வந்தது.

ஆனால், “நான் உனக்காகப் பார்க்கிறேன்.” என்றாள் யுகேந்திரனைப் பெற்றவள். சின்னவள் வியந்து நோக்கவும், “ஆமாம்மா. இந்த ஒரு வாரத்தில், அவனைப் பற்றி, உனக்கு என்ன தெரியும்? மேலும், அங்கே எல்லாமே உனக்கு வேறாகத் தெரியக் கூடும். “ என்று எதையோ குறிப்பால் உணர்த்த முயன்றாள், அவள்!

ஆனால் ரொம்பத் தெரிந்த மாதிரி, “எல்லாமே மாறினாலும், இதே உங்கள் பிள்ளைதானே, அங்கேயும் இருப்பார்? எனக்கு அது போதும்!” என்றாள் சுமனசி திடமான குரலில்.

ஒரு கணம் யோசித்துவிட்டு, “நீ மருமகளாக வருவது எனக்கு ரொம்ப சந்தோஷம், சுமனசி.” என்றாள் அந்தப் பெண்மணி.

அடுத்த பத்து நாட்களில், திருமணம் முடிந்து, சுமனசியும் யுகேந்திரனும் டெல்லிக்கே கிளம்பிவிட்டார்கள்.

“இவ்வளவு அவசரமாக எப்படி முடியும்?” என்று பசுபதி திகைத்தபோது, மறுபடியும் உதவிக்கு வந்தது, ஆனந்தவல்லியே.

“இந்தக் காலத்தில் அடுத்த நாளே கூடச் செய்யலாம். ஒரு நல்ல ஹோட்டலில் உரிய பணத்தைக் கட்டினால் போதும்.” என்றாள் அவள் எளிதாக.

முன்பே பேசி வைத்தது போல, பணத்தைக் கட்டிவிட்டதாக யுகேந்திரன் சொன்னான்.

இந்த வேகத்தில் சற்றுத் திணறி, “இல்லை, நானே . .” என்று அவர் இழுக்கும்போது குறுக்கிட்டு, “என்குத்தான் அவசரம், மாமா. நான்தான் கட்டவேண்டும்.” என்று சின்னவன் முடித்தேவிட்டான்.

திருப்திப் புன்னகையோடு, “இன்னும் ஒன்று. வேலையோடு வேலையாக, வீட்டுக்கு வாடகைக்குச் சரியான ஆள் பார்க்க வேண்டும். அதிக அவகாசம் இல்லாததால், பத்திரிகையில் விளம்பரம் போடலாம்.” என்று ஆனந்தவல்லி சொல்வதைக் கேட்டபோதுதான், சித்தியின் சத்துமாவுத் தாராளமும் மற்றதும், சுமனசிக்கு நன்கு புரிந்தது.

ஒரு மாதிரிப் பார்த்தால், சுமனசியை வீட்டிலிருந்து, நோகாமல் வெளியேற்றி இருக்கிறாள்

ஆனால் அவளுக்குக் கோபம் வரவில்லை. பெரியவள் பக்கத்து நியாயம் பற்றி யோசிக்கத் தோன்றியது.

தாய் வீட்டில் சிரம நிலையில் இருந்த சிற்றன்னை, அதை விடச் சற்றேனும் வசதியான வாழ்க்கைக்காகத்தானே, இரண்டாம் தாரமாகப் பசுபதியை மணந்ததே. அவள் பணக்கணக்குப் பார்ப்பது இயல்புதானே?

இதற்கிடையே, சுபத்ரா அம்மாளும் பிடிவாதம் பிடித்து, சொந்த ஊருக்கே சென்று வாழப் போவதாக, மகனிடம் கூறிவிட்டாள்.

முக்கியமான காரணம், இந்த ஊரில், அவளுக்குப் பொழுதே போக வில்லை என்பதே. அவ்வப்போது வெளியே எங்கேனும் போய்ச் சுற்றி வருவதற்கு வயது, மனம்  இரண்டுமே சரிவரவில்லை. அங்கே பெரிய பூமியில் அரசிபோல் வாழ்ந்தவள் . . அரசி என்றால், அதிகாரம் மட்டுமல்ல. பண்ணை ஆட்களின் நல்லது கெட்டதில் பங்கெடுத்து, தேவையானதைச் செய்து கொடுத்து, அது போல வாழ்ந்தவள். இடையிலே பண்ணை சுருங்கியபோதும், அந்தப் பண்பும் பழக்க வழக்கங்களும் மாறியதில்லை.

இப்போது மகன் பண்ணையைப் பழைய அளவுக்குக் கொண்டு வந்தபின், அதை விட்டு வெளியே வாழ, சுபத்ராவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

எஜமானியின் மனம் அறிந்தவள் தாயம்மா. வயல் வேலை செய்யும் தன் மகனைக் கொண்டு, இரவு பகல் காவலிருப்பதற்குத் தேவையான ஆட்களை ஏற்பாடு செய்வதாகத் தாயம்மா கூற, அதன் பிறகு யுகேந்திரனும்  ஒருவாறு ஒத்துக் கொண்டான்.

இருவருமாகச் சேர்ந்து சென்றே, சுபத்ராவைப் பண்ணை வீட்டில் விட்டுவிட்டு வந்தார்கள்.

அவன் நல்லதென்று எண்ணிச் செய்ததே, அன்னைக்குத் துன்பமாகத் தோன்றினால், அதைத் தொடர்ந்து வற்புறுத்துவது தவறுதானே என்று அவன் காரணம் சொன்னபோது, சுமனசிக்குப் பெருமையாக இருந்தது.

அவளுடைய கணவன், அவன் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று முரட்டுப் பிடிவாதம் பிடிக்காமல், பெற்றவளின் மன உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கிறான்.

நாளைக்கு, மனைவிக்கும், இது போன்ற சலுகைகள் கிடைக்கும்!

இப்படிப் பல நம்பிக்கைகளோடுதான், கணவனோடு டெல்லிக்குச் செல்ல சுமனசி  விமானமேறினாள். இருவரும் மட்டுமாகத்தான்.

இடையில் இரண்டு நாட்கள் குலுமணாலியில் தேனிலவுக்குப் போவதாகத் திட்டம் இருந்ததால், கூட யாரும் கிளம்பவில்லை. அது மட்டுமில்லாமல், சிங்கப்பூருக்குச் சீக்கிரமே கிளம்ப வேண்டியிருக்கும் என்பதால், அது பற்றிய வேலைகளிலேயே பசுபதி ஓடும்படியாகவும் இருந்தது.

“உன்னோடு வர முடியாமல் இருக்கிறதேம்மா!” என்று அங்கலாய்த்தது தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தார். பையன்களுக்கு, டெல்லியைவிட, சிங்கப்பூரின் கவர்ச்சி அதிகமாக இருந்தது.

ஆனாலும் அவ்வப்போது “அக்கா, இங்கே போல அங்கேயும் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு சுற்றாதே! ஜாக்கிரதை!” என்பார்கள்.

அவள் பதில் சொல்லு முன்பாகவே, அவர்களது பழைய ஹாக்கி ஸ்டிக்கை என்ன விலைக்குக் கொடுக்கலாம் என்று கணக்குப் போடத் தொடங்கி விடுவார்கள்.

ஆனந்தவல்லிக்கோ, மகள் எதையும் பீராய்ந்துகொண்டு போய்விடக் கூடாதே என்று அதிலேயே கவனமாக இருந்தாள்.

ஆனால், இது போன்ற எந்தச் சலனமும் இல்லாமல், கணவனோடு கிளம்புவதில் முழு மகிழ்ச்சியோடு வளைய வந்தவள், சுமனசிதான்.

குலுமணாலி பற்றிக் கேட்கவே வேண்டாம். பூவுலக சொர்க்கம் அதுதான்!

டெல்லிக்குப் போய், சினிமா செட்டிங் போல இருந்த அவர்களது

அலங்கார ஃப்ளாட்டைப் பார்த்தபோதும், அப்படித்தான்.

தேவலோகத்து இந்திராணி போலவே உணர்ந்தாள்.

ஆனால், அந்த இந்திரனிடம் சில மோசமான குறைபாடுகள் இருந்ததாகப் படித்ததைத்தான் அவள் அப்போது

ஆனால், படித்தது அடியோடு மறக்குமா, என்ன? சிலர், அதை மறக்க விடுவதாகவும் இல்லை.

விழித்து எழுந்ததும் கணவன் செய்த சிலுமிஷங்களை எண்ணிக் கிளுகிளுத்தவாறே சுமனசி குளித்து முடிக்கும்போது, வாயிலில் அழைப்பு மணி ஒலிக்கும் ஓசை கேட்டது.

யாரோ, காஃபி எதுவும் போட்டுத் தர வேண்டியிருக்குமோ என்று அவசரமாக உடை மாற்றிக்கொண்டு ஓடி வந்தால், முன்னறையில் பேச்சுக் குரல் கேட்டது. யாரோ, பெரிதாகக் குறைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

“ . . நீ வந்ததை செக்யூரிடியிடம் கேட்டுத்தான் நான் தெரிந்துகொள்ள வேண்டுமா? ஊருக்குப் போனால் எத்தனை நாள், யூகி? ஒரு  தகவல் கூடவா, கொடுக்கமாட்டாய்? இங்கே அடித்த போரில், நான் தற்கொலை செய்யலாமா என்று கூட யோசித்தேன் . . “

தற்கொலையா? என்ன வார்த்தை இது என்று சிறு கலக்கத்துடன் எட்டிப் பார்த்தால், அவளுக்கு இன்னொரு “ஷாக்” அடித்தது. இது, சற்று பலமாக “ஷாக்.”

ஏனெனில், குறைப்பட்ட குரலுக்குச் சொந்தக்காரி, அவளுடைய கணவனின் உடலில் கண்டபடி மேனி உரச, எட்டி அவன் சிகையைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தாள்.

அப்படியே அவனது முகத்தைத் தன்னதற்கு நேராகக் கீழே இழுத்துக் கொண்டிருந்தாள் என்றும் கூறலாம்!

யுகேந்திரனும், அந்தப் பெண்ணைத் தூர விலக்கி நிறுத்த முற்படவும் காணோம்!

நெஞ்சுக்குள் பயங்கரமாக வலிக்க, வந்ததே தெரியாமல் அப்படியே பின்னடித்து, போய்விடலாமா என்று ஒரு தரம் எண்ணிய சுமனசி, உடனே அந்த எண்ணத்தை உதறித் தள்ளினாள்.

அவள் ஒன்றும், எதையும் பொறுத்துப் போக வேண்டிய  நிழல் உறவு அல்லவே! தாலி கட்டி முறையாக அழைத்து வரப்பட்ட மனைவி. இது பற்றி, அவளுக்கு அவன் பதில் சொல்லியாக வேண்டும்!

லேசாகத் தொண்டையைச் செறுமி, தான் இருப்பதை அறிவித்த வண்ணம் அறைக்குள் வந்தபடியே, “யுகன், யார் இந்தப் பெண்?” என்று விசாரித்தாள்.

விசாரணைதான். உள்ளே நேர்ந்திருக்கும் அதிர்ச்சியை வெளிக் காட்டாத அழுத்தமான குரல்!

யுகேந்திரன் அவளை விலக்கி நிறுத்த முயன்றானோ, என்னவோ, உரியவளுக்கு மேலாக அதிர்ந்து, அந்தப் பெண் விருட்டெனத் திரும்பி சுமனசியைப் பார்த்தாள்.

அவள் உள்ளிருந்து வந்ததையும், பனி விழுந்த மலர் போன்ற குளித்து வந்த தோற்றத்தையும் பார்த்தவள், முகம் கன்றிக் கறுக்கக் கிரீச்சிட்டாள். “யார் இவள்? இரவு முழுவதும் இவளோடு கூத்தடித்திருக்கிறாய் போல? கேட்க யாரும் இல்லை என்று நினைத்தாயா? அப்பாவிடம் சொல்கிறேன், பார்!” என்று மிரட்டினாள்.

யுகேந்திரன் இந்த மிரட்டலைப் பெரிதாக எடுத்துக் கொண்டதாகவே தெரியவில்லை. லேசாக முறுவலித்து, அந்தப் பெண்ணின் கைப்பையை எடுத்து, அவளிடம் கொடுத்தான். “அப்பாவிடம்தானே? நானே சொல்வதாக இருந்தேன். இப்போது அந்த வேலை மிச்சம். போய், யூகி சுமனசி என்ற பெண்ணை மணந்துகொண்டு வந்திருக்கிறான் என்று சொல்லு. நான் அப்புறமாக வந்து, அவரைச் சந்திப்பதாகச் சொல்லு! “

“முடியாது, சொல்லமாட்டேன்!” என்று மறுபடியும் கத்தினாள் அந்தப் பெண். அப்புறம்தான் அவன் சொன்னது புரிந்தது போல, “எஎன்னது? மனைவியா? என்ன தைரியம் உனக்கு? பத்து நாள் வெளியூர் போனால், கல்யாணமே பணணிக்கொண்டு வருவாயா? போ! போடா, நீ சுத்த மோசம்! “ என்று உரக்க அலறியபடியே . . அல்லது கதறியபடியே அவள் வெளியேறினாள்.

வெளிக்கததவைப் படார் என்று சாத்திக்கொண்டு அவள் செல்லவும், தோளைக் குலுக்கிக் கைகளைத் தூசி தட்டிவிட்டு, முறுவலோடு யுகேந்திரன் மனைவியை நெருங்கினான்.

முதல் முறையாக அந்த முறுவல் அவளுள் கிளர்ச்சியை ஏற்படுத்த இயலாது தோற்றது!

அவனது நீட்டிய கைகளைக் கவனியாதது போல, ஒரு சோஃபாவில் அமர்ந்தவள், “என் கேள்விக்கு இன்னமும் நீங்கள் பதில் சொல்லவில்லையே!” என்று கேட்டாள்.

“என்ன கேள்விடா?” என்று கொஞ்சலாகவே கேட்டபடி, அவள் அதே சோஃபாவில் கையில் அமர்ந்து, அவளைத் தழுவ முயன்றான் யுகேந்திரன்.

“ப்ளீஸ்!” என்று எழுந்துவிட்டாள் சுமனசி. “நான் குளித்து சுத்தமாக இருக்கிறேன். நீங்கள் இரவு அழுக்கோடு தொடாதீர்கள். அத்தோடு, என் கேள்வி உங்களுக்கு மறந்திருக்க வாய்ப்பில்லை. சொல்லுங்கள், யார் அவள்?” என்று எரிச்சலை மறையாத குரலில் கேட்டாள்.

“பரவாயில்லை! என்னை விட, உனக்கு ஞாபக சக்தி அதிகமாகத்தான் இருக்கிறது. அவள் . . இப.போது வந்து, அநாகரீகமாகக் காச்சு பூச்சென்று கத்திவிட்டுப் போனாளே, அவளைத்தானே கேட்கிறாய்?” என்று சந்தேகம் கேட்டான் அவன்.

அநாகரீகமாகக் கத்தினாளாமா? அது போல, நீ குரலை உயர்த்திப் பேசாதே என்று ரொம்ப நாகரீகமாக எச்சரிக்கிறானாக்கும்! கெட்டிக்காரன்தான்!

“பரவாயில்லையே!” என்றாள் அவள் மெச்சுதலாக. “நான் என்ன கேட்கிறேன் என்று, இவ்வளவு சீக்கிரமாகக் கண்டுபிடித்துவிட்டீர்களே! புத்தி அதிகம்தான்! இதே புத்திசாலித்தனத்தோடு, அந்தப் பெண் யாரென்றும் சொல்லி விடுங்கள், பார்ப்போம்!”

மக்கு மாணவனைத் தட்டிக் கொடுத்துக் கேட்கும் பாணியில் அவள் கேட்கவும், அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

அவள் தன்னை மறந்து நோக்கவும், சட்டெனத் தாவி, “உன் சுத்தமும் நீயும்! வேணுமானால், நானே உன்னை மறுபடியும் குளிப்பாட்டி விடுகிறேன்!” என்று, அவளை இறுக அணைத்து முத்தமிட்டான்.

தன் பிடியிலேயே அவளை நிறுத்தி, “அவள் வேறு யாரும் இல்லைடா, செல்லம். என் படங்களுக்கு ஃபைனான்ஸ் பண்ணுகிறவருடைய மகள். பெயர் ரேணு. நான் பார்க்க வளர்ந்த பெண். அவள் அடிக்கடி பார்ப்பது, அப்பாவின் செல்வநிலை! எல்லாமாகப் பெரிய சாம்ராஜ்ஜியத்து இளவரசி என்கிற மாதிரி எண்ணிக் கொள்வாள். என்ன? விவரம் போதுமா? எனக்குப் பேச்சே போதும் போல இருக்கிறதே!” என்று அவன் கூறிய விதத்தில், அவளுக்கும் அதே போலவே தோன்றலாயிற்று!

காலை உணவு முடிந்ததும், வெளியே செல்ல உடையணிந்து

வந்து, “அலைச்சலின் அலுப்புத் தீரப் படுத்து ஓய்வெடு, கண்மணி. என் அடுத்த வேலைக்கான நிதிக்காக, ஃபைனான்சியரைப் பார்த்துப் பேசிவிட்டு, நான் சீக்கிரமே வந்து விடுகிறேன். “ என்றான் யுகேந்திரன்.

அன்பு மனைவியாக வழியனுப்பிவிட்டு வந்து அமர்ந்தவளுக்குச் சட்டெனச் சுரேலென்றது. அவனுடைய ஃபைனான்சியருடைய மகள்தானே, அந்தப் பெண் ரேணு?

அங்கே அவளைப் பார்ப்பானா? அல்லது, அவளைப் பார்ப்பதற்காகவே போகிறானா?

சேச்சே! அப்படியெல்லாம் இராது என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, தன் துணிமணிகளைப் பிரித்து அடுக்கத் தொடங்கினாள் சுமனசி.

# அத்தியாயம் -6

தேடிப் பிடித்துச் செய்த சின்னச் சின்ன வேலைகள் விரைவிலேயே முடிந்து போய்விட, சுமனசிக்குப் போரடித்தது.

மதிய உணவு ஆர்டர் செய்தாயிற்று வரும் என்றிருந்தான். அப்புறம் என்ன செய்வது?

டீவியை ஆன் செய்து, எதைப் பார்ப்பது என்று ஒவ்வொரு சேனலாக மாற்றிக்கொண்டே வந்தவள் திடுமெனக் கணவனின் முகம் போலத் தெரியவும், அதிலேயே நிறுத்திக் கவனித்தாள்.

செய்தி சார்ந்த குறும்படம் என்று தந்தை சொன்னது நினைவு வரக் கூர்ந்து பார்த்தால், அதற்குள் படம் மாறிவிட்டது. பேச்சும் முடிந்திருக்கவே, என்ன ஏது என்று ஒன்றும் புரியாமல் போனது.

“எப்போதாவது என் மகனைப் பார்க்க வேண்டும் போல இருந்தால், டீவியைப் போட்டுப் பார்ப்பேன்.” என்று சுபத்ரா ஆன்ட்டி ஒரு தரம் சொன்னது நினைவு வந்தது.

இந்தச் சானல்தானா?

நல்லவேளையாக யுகேந்திரன் சீக்கிரமாகவே வந்துவிட, அவனிடமே கேட்டாள்.

“அம்மா உன்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையா? மணிக்கணக்காகப் பேசுவீர்களே!” என்று அதிசயித்தான் அவன்.

“நன்றாக இருக்கிறதே! வானம் கூட, இப்போது எல்லை கிடையாது. அதற்குமேல் எத்தனையோ அண்டங்களைக் கண்டு பிடித்தாயிற்று. இந்த அண்ட பேரண்டத்தில், மணிக்கணக்காய்ப் பேசுவதற்கு எத்தனையோ விஷயங்கள்! அதெல்லாம் விடுத்து, உங்களைப் பற்றியே பேசுவானேன்? ஆணாதிக்கச் சிந்தனையா? “ என்று கேலி போலக் குத்தினாள் சுமனசி.

“இதில் ஆணசூதிக்கம் எங்கே வந்தது? உங்கள் இருவருக்குமே நான் முக்கியமானவன் என்பதால் . .”

“என்பதால்? என்பதால் என்ன? நான் கூடத்தான் உங்கள் இருவருக்கும் முக்கியம். என்னைப் பற்றித்தான் ஆன்ட்டியோடு எப்போதும் பேசினீர்களா?”

அந்த ரேணுவின் வீட்டுக்குப் போனான் என்ற எரிச்சலில், ஒரு

சாதாரண உரையாடல், அவளுக்கு வாதாடல் எனகிற நிலைக்குப் போயிற்று.

ஆனால் நல்லவேளையாக யுகேந்திரனுக்கு அது போலப் பிரச்சினை இல்லாததால், மனைவியின் பேச்சில், அவன் திகைத்தான்.

“ஓ!” என்று ஒரு கணம் அதிர்ந்தவன், உடனேயே அவளிடம் மன்னிப்புக் கேட்டான். “நீ சொல்வது சரிதான், சுமனசி. அம்மாவும் நானும் உன்னைப் பற்றியும் பேசினோ . . ம். ஆனால், நான் உன்னிடம் எதிர்பார்த்த அளவு அல்லதான். எனவே, என் எதிர்பார்ப்பு கொஞ்சம் ஆணாதிக்கம் போலத்தான் இருக்கிறது, அல்லவா? சாரிடா!” என்று அவன் மன்னிப்பே கேட்கவும், அவளுக்கு மனம் உருகிவிட்டது.

யாரையோ நினைத்து அவனிடம் முசுட்டுத்தனம் காட்டுவானேன்?

“ “சாரி” எல்லாம் எதற்குப்பா? நாம் சும்மா விவிளையாட்டாகத்தானே பேசிக் கொண்டிருந்தோம்!” என்று அவள் சமாதானமாகப் பேச, அவன் முகமும் மலர்ந்தது.

சுமனசியாகக் கேளாதபோதும், பேச்சினூடே அவனே, அன்று ஃபைனான்சியரிடம் போய் வந்தது பற்றிக் கூறினான்.

“அடுத்த வேலையைத் தொடங்குமுன், முதலில் நம் திருமணத்தை அறிவித்து ஒரு வரவேற்பு ஏற்பாடு செய்துவிடலாம் என்று, திரிபாதி சார் சொன்னார். “ என்றான்.

“யாரவர், அந்த ஒன்றரை . . .மூன்றில் பாதி . . .அதாவது திரிபாதி?” என்று அவள் கேலி பேசவும் கூடச் சேர்ந்து சிரித்தாலும், விரைவிலேயே அதை நிறுத்தி, “அவரை ரொம்பக் கிண்டலடிக்கக் கூடாது, சுமிம்மா. அவரும் அலகாவும் இல்லை என்றால், நான் இந்த அளவு வளர்ந்திருக்கவே முடியாது.” என்றான் அவன்.

அவள் பேசாமல் பார்க்கவும், அவன் அந்த விவரம் சொன்னான்.”துணிச்சல், திறமை எல்லாம் இருந்தபோதும், முதலீட்டுக்கான பணம் இல்லாததால், என்னால், அப்போது ஒன்றுமே செய்ய முடியவில்லை. அம்மாவிடம் பெரிதாகச் சொல்லிவிட்டு வந்தோமே., தோல்வியோடு திரும்புவதா, என்று ஒரே மன உளைச்சல்! அப்போதுதான், அலகா என்னைப் பற்றி, சாரிடம் சொல்லி . . .அப்போது அலகா அவரோடு வசித்தாள். . . . ஊகூம், அப்படி முகத்தைச் சுளிக்காதே. அடுத்தவரைக் குற்றம் சொல்ல, நாம் யார்? ஆனால், அவளது முயற்சி இல்லாவிட்டால், இன்று நானும் இல்லை!” என்றான் யுகேந்திரன்.

அப்படிப்பட்ட ஒருத்தியோடு கூடப் பழக நேருமா என்று, சுமனசியின் மனம் முரண்டியது. ஆனால், இப்படிப்பட்ட உறவுகளே கிடையாது என்று எண்ணுமளவு, அவள் உலகம் அறியாதவளும் அல்ல. எங்கேயோ, யாரோ என்று பேசப்பட்டது, இங்கே வீட்டுக்குள்ளேயே வருமோ?

சற்று யோசித்துவிட்டு, “பொதுவாகப் படம் எடுப்பது, மும்பையில்தானே? இங்கே என்ன ?” என்று சுமனசி கேட்டாள்.

“இங்கேயும் உண்டு. ஆனால் அங்கே போலப் பெரிய அளவில் அல்ல. இது நம் தலைநகரம்.  . . .” என்றவன், அவளது கண்களில் ஒரு பளிச்சிடலைக் கண்டதும் புரிந்து, “சரி . . உனக்கும் இது தெரியும்தான். ஒரு வேளை சின் . .ன வயதில் படித்தது, ஒரு வேளை மறந்திருக்குமோ என்று சொன்னேன். “ என்று பாவனையோடு கூறி நகைத்தான்.

சேர்ந்து சிரித்துவிட்டு, “உங்கள் ஞாபக சக்தி அளவு பற்றி இப்போது புரிகிறது. போகட்டும். மேலே சொல்லுங்கள். நம் தலைநகரத்துக்கும் படத் தொழிலுக்கும் என்ன தொடர்பு?” என்று பேச்சின் தொடர்பு விடாமல் கேட்டாள் அவள்.

“தலைநகரம் என்பதால், எல்லா உயர் மட்ட நடவடிக்கைகளும் அதிகம் நடக்கும இடம். அதற்கு ஆதரவாக, பாதகமாக எல்லா இடங்களிலும் நடக்கும். அமைதி, வன்முறை இருவழிப் போராட்டங்களும் நடக்கும். அவற்றுள் ஏதாவது நூலைப் பிடித்து, உள்ளே போய் விவரம் கண்டுபிடித்தால் அற்புதமான கதைகள் கிடைக்கும். உடனடியாக அவைகளைப் படமாக்கி வெளிட்டால், நிறையப் பணம் கிடைக்கும். செய்தி சார்ந்த குறும்படங்கள். செய்தி பழசாகிப் போகுமுன் சிறு படங்களாக்கி வெளியிட வேண்டும். கூடவே, அதில் தொடர்புள்ள பெரிய மனிதர்களின் கருத்துகளைக் கேட்டுச் சேர்க்க வேண்டும். எல்லாம் வினாடி கூட வீணாகாமல் வேகமாகச் செய்ய வேண்டும் என்பதால், இங்கேயே, அந்தப் படங்களை எடுக்கிறோம்.” என்றவன் ஒரு வினாடி யோசித்தான்.

என்னென்ன ஆபத்தான சூழல்களில் அந்தப் படங்களை எடுக்க நேரும் என்பதைச் சொல்லலாமா என்று யோசித்துவிட்டுத் தேவையில்லை என்று முடிவு செய்தான். தேவைப்படும்போது சொல்லிக் கொள்ளலாம். அம்மாவிடம் போல முழுதாக மறைக்க அவசியம் இராது. . . .

அவள் “என்ன?”என்று கேட்க வாயெடுக்கும்போதே, யுகேந்திரன் மறுபடியும் பேசத் தொடங்கிவிட்டான்.

“செய்திச் சானல்கள் பல இங்கேயே இருப்பதால், இது போன்ற படங்களை

எடுத்து, உடனே கொடுக்க வசதியாக இருப்பதால், இங்கேயே எடுக்கிறோம். இதுதான் படத் தொழிலுக்கும், தலைநகரத்துக்கும் உள்ள தொடர்பாகும், கண்மணி!” என்று முடித்துக் கண் சிமிட்டிச் சிரித்தான் .

அவள் வேறு யோசிக்குமுன், “இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டுப் பேசி, உன் கேள்விக்குப் பதில் சொன்னதில், என் தொண்டையே காய்ந்து போயிற்று. பெண்டாட்டி வந்து தடவிக் கொடுத்தால் கூடப் போதும் என்கிறது. ப்ளீஸ்டா!” என்றான் கொஞ்சலும் கெஞ்சலுமாக.

“வெறுமனே தடவுவதா? அதெப்படிப் போதும்? முழு முயற்சியோடு ஓங்கி ஒன்று கொடுப்பதுதானே, நியாயம்?”

“ஓ. . ‘கி ஒன்று கொடுப்பதா? விட்டு விடுவேனா . . “ என்று விளையாட்டிலும் வேடிக்கையிலும் அப்போதைக்கு நேரம் கழித்தாலும், நேரத்தை இனிமையாகக் கழித்தாலும், வரவேற்பு விஷயத்தை மறக்காமல் திரும்பக் கொணர்ந்து, பேசி முடிவெடுத்தான் யுகேந்திரன்.

யோசித்துப் பார்க்கும்போது, சுமனசியுடன் கலந்து பேசியது போலத் தோன்றினாலும், ஏற்கனவே அவன் செய்த முடிவை, அவளும் ஒத்துக் கொள்ளச் செய்தான் என்றே அவளுக்குத் தோன்றியது.

அதுவும், தனிமையில் கிடந்து, இப்படியோ, அப்படியோ என்று அலசி ஆராயும்போது, சின்னது, சாதாரணம் என்று அலட்சியமாக எண்ணிய அனைத்துமே, இப்போது வேறாகத் தோன்றின!

அவனது விருப்பத்தையே நடத்தினான் என்று சுமனசி கருதக் காரணம், அடுத்த இரண்டாவது நாளிலேயே, அவன் திருமண வரவேற்பை நடத்தியதுதான்.

அவளுடைய குடும்பமோ, அவனுடைய தாயாரோ இலகுவாக வந்து, தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு கலந்து கொள்ள அவகாசம் தராத அவசரம்.

திருமண விவரம் அறிந்து, அவரவராக விசாரிக்க வர இடம் தராமல், விரைவாக வரவேற்பை நடத்துவதாகக் கணவன் கூறியது சரியாகவே, அப்போது தோன்றிவிட, சரிதான் என்று, மிக நன்றாகவே தலையை ஆட்டி வைத்தாள்.

ஆனால், “யாரும் இல்லாமல் தனியாக நிற்க வேண்டுமே!” என்றுதன் கவலையைச் சொல்லவும் செய்தாள்.

டீஷர்ட்டில் இல்லாதக் காலரைத் தூக்கி விட்டு, “நான்தான் பக்கத்திலேயே இருப்பேனே கண்மணி. பிறகென்ன?” என்றான் அவன்.

“இல்லை . . . திருமணத்தைத்தான் அவசர அவசரமாக வைத்தீர்கள். இதையுமா?” என்று நினைத்தேன்!” எனறாள் அவள்.

இப்போது அவன் சீரியசாகப் பதில் சொன்னான். “இந்தத் தொழிலில் நான் கற்றுக்கொண்ட பெரிய பாடம், நேரம் பொன்னானது என்பது, சுமி. போன நேரம் ஒரு போதும் திரும்பி வராது என்பதால், ஒரு வினாடியைக் கூட நாம் வீணாக்கக் கூடாது என்று, நீயும் தெரிந்து கொள்!” என்றான்.

“அவசரக்காரனுக்கு அண்டாவுக்குள் கூடக்கை நுழையாது என்றும் சொல்வார்களே?” என்று புருவம் சுருக்கி, உரக்க யோசித்தாள் சுமனசி.

“அது, திட்டமிடத் தெரியாதவனுக்குச் சொன்னது.” என்று அவனது பதில் உடனே வந்தது. “நான் அப்படியல்ல. கிடைத்த குறைந்த அவகாசத்தில், திருமணம் முடித்து, தேனிலவு கூடப் போய்வந்துவிட்டோமே.” என்றபோது, அதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

அவன் கூறியது போல, அவசரமாகச் செய்த திருமணம் என்றாலும், எந்தக் குறையும் சொல்ல முடியாத திருமணம்தான்! ஆனால், அவசரத்தில் திருமணம் முடித்து அவகாசத்தில் அழு என்றும் சொல்வார்களே!

அதைச் சொல்ல மனம் வராமல், அப்படி ஆகிவிடக் கூடாதே என்ற வேண்டுதலோடு அவள் நிற்கையில், “என்ன?” என்று கன்னத்தை நிமிண்டிக் கேட்டான் அவன்.

“இல்லை . .என்ன உடை அணிவது என்று யோசித்தேன்.” என்று சமாளித்தாள் சுமனசி.

“உன் பட்டுச் சேலைகளில் ஒன்றே பிரமாதமாக இருக்கும். புதிதாக இருக்க வேண்டும் என்று தோன்றினால், காரும் பணமும் தருகிறேன். சுரய்யாவைக் கூட்டிப் போனால், உன் தேவைக்கான கடைவீதி காட்டுவாள்.” என்று எளிதாக விடை கண்டான் யுகேந்திரன்.

சுரய்யா! இன்னொரு பெண்ணா? அதுவே பிடிக்கவில்லை அவளுக்கு.

“என்னிடம் இருக்கும் சேலைகளே, நிறையப் புதிதுதான். அதில் ஒன்று போதுமானது. இங்கே வேறு மாதிரி அணிய வேண்டுமோ என்று

யோசித்தேன். “ என்று ஏதோ வாய்க்கு வந்த காரணம் சொன்னாள்அவள்.

“அதற்கெல்லாம், உனக்கு அவசியமே கிடையாது. நீ எதை அணிந்தாலும், அழகாகத்தான் தெரியும். உனக்குப் பிடிக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.” என்ற கணவனின் வார்த்தைகளில் உச்சி குளிர்ந்து போய், யுகேந்திரன் விருப்பம் போல ஆடினாள் அவள்!

அந்தி வானத்தை நினைவூட்டும் அழகான இரட்டை வண்ணச் சேலை. பொருத்தமான நகைகள். கொடியிடையை எடுத்துக் காட்டுவது போல இடுப்பைச் சுற்றிலும் கண் சிமிட்டிய ஒரு மெல்லிய தங்கச் சங்கிலி!

ரசனையோடு நோக்கி, “பார்த்தவுடன் மேலே பாய வேண்டும் போல இருக்கிறது. உடை கசங்கி விடுமே! அப்புறம்தான் வைத்துக்கொள்ள வேண்டும். வரவேற்பை எவ்வளவு நேரம் பல்லைக் கடித்து சகிக்க வேண்டுமோ, தெரியவில்லை!” என்று அவளைச் சிவக்கடித்துவிட்டு, “சும்மா ஓர் அச்சாரம்.” என்று யுகேந்திரன் அவளை லேசாக முத்தமிட, சுமனசி கிறங்கிப் போய் நின்றாள்.

கிறக்கம், கணவனின் தோற்றத்திலும்மான். பூவேலை செய்த வெண்பட்டு குர்த்தாவில், கட்டான உடலமைப்புடன் உயரமாக அவனது தோற்றம், அவள் மனதில் அழுந்தப் பதிந்தது. இந்த ஆணழகன் என் கணவன் என்று பெருமையாக எண்ணினாள்.

அதுவரைதான், சுமனசி சந்தோஷமாக இருந்தது.

வரவேற்பு ஹாலுக்குள் சென்றதுமே, சுமார் ஐம்பதை ஒட்டிய வயதுடைய உருவர், அவர்களிடம் விரைந்து வந்தார். “வெல்கம் சார். வாழ்த்துக்கள் மேடம்! எல்லாம் உங்கள் விருப்பத்துக்கு ஏற்றபடி இருக்கும் என்று நம்புகிறேன், சார். ஆனால் . . எப்போதும் எளச்சரிக்கையோடு இருங்கள், சார். உங்கள் திருமணத்தால், ஏமாற்றமடைந்த  சில கூட்டங்கள், ஏதோ விதமாகக் கட்டாயமாகப் பழி வாங்க முயற்சிப்பார்கள்.” என்று எச்சரித்தார்.

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு, ஏற்பாடுகளைப் பார்வையிட யுகேந்திரன் போனான்.

“யுகேந்திரன் சார் எப்போதும் இப்படித்தான். தொழில் தவிர, எதையுமே பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. நீங்களாவது, கவனமாக இருங்கள், மேடம்!” என்றதோடு அவர் அகன்றார்.

முறுவலித்துவிட்டுக் கணவனின் பின்னே போனாள் அவள்.

கவனமாக இருப்பது என்றால், என்னத்தில் கவனமாக இருப்பது? தனியே இருந்து பழகியதில், அவனுக்குத்தான், தன்னை நன்றாகக் கவனித்துக் கொள்ளத் தெரிகிறதே!

ஆனால், கவனமாக இருக்க வேண்டும் என்று அவர் எதைச் சொன்னார் என்று புரிந்தபோது, அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை., செய்யத் தெரியவுமில்லை!

கிட்டத்தட்ட வரவேற்புத் தொடங்கும் நேரத்திலேயே அழைக்கப்பட்ட பலரும் வந்துவிட்டார்கள் எனலாம். வந்தாலும், முண்டியடித்துக்கொண்டு மேடைக்கு வராமல், சிறு சிறு குழுக்களாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ஓரிருவராகவே வந்து வாழ்த்திவிட்டுப் போனார்கள்.

அதுவரை, எல்லாம் நன்றாகத்தான் இருந்தது.

ஆனால், சில பெண்கள் நடந்துகொண்ட முறைதான், அவளை ரொம்பவும் பாதித்துவிட்டது.

அப்படியா ஒருத்தன் மேலே விழுந்து, உடல் அழுந்த அழுத்தி, வாழ்த்துவார்கள்?

இதுவும், “ஏமாற்றிவிட்டாயே”, “இரு இரு. எனக்கு ஒரு காலம் வரும், நான் தேவை என்று வருவாயல்லவா, அப்போது வைத்துக் கொள்கிறேன்” , அவளிடம் ஓரக்கண் பார்வையுடன் “ரேணு பயங்கர அப்செட்ப்பா” என்று, இதெல்லாம் சுமனசியைக் குடையத் தொடங்கின.

யாரும் யுகேந்திரனைத் தொடவே கூடாது என்று சுமனசி எண்ணவில்லை. லேசாக அணைத்து வாழ்த்துவதும் இயல்பாகிவிட்ட பழக்கம்தான்.

ஆனால், இந்தப் பெண்களின் அணைப்பை அப்படிச் சொல்ல முடியாது. பக்கத்தில் அப்போதுதான் மணமாகி வந்த மனைவி நிற்கும்போது, இது அநாகரீகம். அத்துமீறலும் கூட!

அவளை மிகவும் பாதித்தது, யுகேந்திரனும் அவர்களை விலக்க முயலாதது. சும்மா நின்று சிரித்து . .சிரித்தே பேசிக் கொண்டிருந்தான்.

கண்ட கழுதைகள், கங்கையில் குளிக்க வேண்டும் என்று மாமியார் சொன்னது, சமயம் பார்த்து நினைவு வந்தது.

எப்படி எப்படிப் பழகியதைப் பார்த்து மனம் வெறுத்தாளோ? அப்போது அதெல்லாம் பற்றி, யோசிக்கவே தோன்றவில்லையே!

இன்னும் யோசித்தால், அவனைப் பெற்ற தாயாக இருந்தாலும், சுபத்ரா ஆன்ட்டியே, இந்தத் திருமணத்தை முழு மனதோடு ஆதரிக்கவில்லை! இங்கே டெல்லியில் எல்லாமே வேறாக இருக்கக் கூடும் என்று குறிப்புக் கூடக் கொடுத்தார்களே!

பெரிதாக, இதே யுகேந்திரன்தானே, அங்கும் இருப்பார் என்று வசனம் பேசியதை எண்ணி, இப்போது மனம் குன்றியது.

அவனைப் பெற்ற அன்னை! இதற்கு மேல், வேறு என்ன சொல்ல முடியும்? இன்னும், சுமனசியிடம் மயங்கி இருக்கும் மகன், இனித் திருந்தி விடலாம் என்று கூட, ஆசைப்பட்டிருக்கலாம் . .என்று எண்ணம் ஓடும்போதே, சுமனசி திடுக்கிட்டாள்.

என்ன இது? யுகேந்திரன் மோசமானவன் என்று முடிவாகிவிட்டது போலவே யோசிக்கிறாளே! அப்படி இல்லாமலும் இருக்கலாமே என்று எண்ணும்போதே, அப்படி அழுத்தமாக அவளால் நினைக்க முடியவில்லை.

எத்தனை பெண்கள்! பொது இடம் என்றும் பாராமல் எப்படி அணைத்தார்கள்!

அதுவும் என்ன சொன்னார்கள்? பெரும்பாலும், “ஏமாற்றி விட்டாயே” என்றுதானே? பெருமையாகக் கூட இருந்திருக்கும். இத்தனை பெண்கள் என்னிடம் மயங்கியவர்கள் என்று!

இத்தனை பேரை விட்டுவிட்டு, உன்னை மணந்திருப்பதற்காக நன்றியோடு இரு என்று கூடச் சொல்வானோ, என்னவோ?

அப்படிச் சொன்னால் . . . சேச்சே, அப்படியெல்லாம் சொல்ல மாட்டான் பலமுறை உள்ளூர உருப் போட்டாலும், அதை ஏற்காமல் சுமனசியின் நெஞ்சு கசங்கிக் கலங்கித் தவித்தது.

சரியாகச் சொல்வதானால், யுகேந்திரனைப் பற்றி, அவளுக்கு என்ன தெரியும்?

பார்த்துப் பதினைந்து நாட்களுக்குள், திருமணம் முடிந்து, அவன் வீட்டுக்கே வந்தாயிற்று! இதில், அவனைப் பற்றி அறிந்து ஆராய, ஏது அவகாசம்?

இனி . . இப்போது என்ன செய்வது? ஒரு வழியும் தெரியாமல், இங்குமங்குமாகச் செல்லுமிடம் தேடி மனதோடு சேர்ந்து, பார்வையும் அலை பாய்ந்தது.

நல்ல வேளையாக, வருகிறவர்கள் கூட்டம் குறைந்திருந்தது.

அருகில் நின்று, மலர்ச் செண்டுகளை வாங்கி வைத்துக் கொண்டிருந்த சுரய்யாவிடம், “அந்தப் பக்கம் போய் வருகிறேன்” என்பது போலத் தலையால் “ரெஸ்ட் ரூம்” பக்கம் காட்டிவிட்டு, அங்கிருந்து விலகிப் போனாள்.

அந்த வரவேற்பு ஹாலின் இரு புறமும் “சிட்அவுட்”கள் இருந்தன. விருப்பம் போலத் தனித் தனிக் குழுக்களாகப் பிரிந்து உரையாட வசதியாக அமைக்கப் பட்டவை.

உடையைச் சீர் செய்துகொண்டு ஒரு ஜோடி ஒரு சிட்அவுட்டில் இருந்து உள்ளே வருவதைப் பார்த்ததும், அவளது முகம் சூடாகிக் கன்றியது.

இதே போல, சற்று முன் ஒன்று நடந்தது. வரவேற்புக்கு வந்த ஒருத்தி, யுகேந்திரனைக் கட்டி அணைத்ததில், அவள் உடையில் உள்ள ஜரி வேலை, அவனது கோட் பட்டனில் மாட்டிக்கொள்ள, அவள் ஓர் அசிங்க ஜோக்குடன் அவனிடம் இன்னும் நெருங்கி நிற்க, அருகே நின்ற எல்லோரும் ஓஹோ என்று சிரித்தனர். கடைசியாக, அந்தச் செயலாளர் பெண் சுரய்யா போய், மாட்டியிருந்த ஜரி நூலைப் பிரித்துவிட, இப்படித்தான் உடையை இழுத்துவிட்டபடி, அந்தப் பெண் போனாள்.

வெறுப்புடன் திரும்பப் போனவள், அங்கே தனிமை கிடைக்கும் என்று புரிய, திரையை ஒதுக்கிக்கொண்டு, உள்ளே போய் நின்றாள்.

அந்த வினாடியில் காமிரா, மற்றும் அடுத்தவர் பார்வையிலிருந்து தப்பியாயிற்று. ஆனால், நெஞ்சுக்குள் எரிந்த தீ போக்கிடமற்று, அங்கேயே கனன்றது.

எவ்வளவு நேரம் நின்றாளோ? ஐந்து நிமிஷங்களோ, அரை மணி நேரமோ?

திரையை விலக்கிக்கொண்டு யாரோ உள்ளே வருவது தெரிய, அவசரமாகக் கண்களைத் தொட்டுப் பார்த்தாள். நல்லவேளை! ஈரமில்லை. கண்ணீரை மிஞ்சிய துன்பம் போலும்!

உள்ளே வந்தவள், அவளது நாற்பதுகளில் இருந்தாள். ஆனால் கட்டான உடல் அமைப்பு.அதற்கேற்ற அலங்காரம்.

உள்ளே வந்ததும் சுமனசியை ஒரு தரம் ஆழ நோக்கிவிட்டு, “இது போன்ற பார்ட்டிகள் பற்றி, யூகி உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லையா?” என்று கேட்டாள்.

சுமனசி பேசாமல் நிற்கவும், “அவன் செய்திகளை சேகரிப்பதோடு, அவைகளைப் படமாகத் தயாரிப்பவனும் கூட. இதில் நடித்தால்,

சின்னத்திரை, திரைப்படங்களில் நடிப்பதற்குக் குறுக்கு வழியாக அமையக் கூடும். ஒருத்தி அப்படி ஆகியும் இருக்கிறாள். அதனால், நான்தானே கதாநாயகி என்று பலரும் மேலே போய் விழத்தான் செய்வார்கள். எந்த விசுவாமித்திரனும் கொஞ்சம் தடுமாறத்தான் செய்வான். யோசி. இந்தக் கூட்டத்தில் எந்த ரதியை வேண்டுமானாலும் அவன் தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆனால், அவன் உன்னைத்தான் மணந்திருக்கிறான் அதை நினைத்துப் பார். அவனது மனதைத் தொட்டவள் நீ மட்டும்தான். " என்றாள் அந்தப் பேரிளம் பெண்.

முன் பின் அறியாதவளே என்றாலும், சுமனசிக்கு அவளை நம்பத் தோன்றியது.

"ஆனால் . .மற்றபடி?" என்று மேற்கொண்டு விவரம் கேட்கவும் தோன்றியது.

"அதுதான் விசுவாமித்திரன் பற்றிச் சொன்னேனே. நிச்சயமாக இப்படித்தான் என்று யுகேனாகச் சொன்னால் ஒழிய, யாருக்கும் எதுவும் தெரியாது. இதை அவனிடம் கேட்டு, அவன் சொல்லும் பதிலை நம்புவதா இல்லையா என்று குழம்புவானேன்? எனவே பழசை நினைத்து, வாழ்வைக் கெடுத்துக் கொள்ளாதே. ஆனால், எதிர்காலத்துக்கு உறுதி பெற்றுக்கொள்." என்றாள் அவள்.

மீண்டும் திரை விலகியது. இப்போது வந்தவன் யுகேந்திரன். இரு பெண்களையும் ஒரு சேரப் பார்த்ததும், அவனது கண்கள் இடுங்கின.

உள்ளே நின்ற இருவரையும் ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு, "இங்கே என்ன மந்திராலோசனை நடக்கிறது? யாரைக் கவிழ்ப்பதற்கு? " என்று கேலியாகக் கேட்ட குரலில், மிக லேசாகப் பிசிர் அடித்தது.

# அத்தியாயம் -7

யுகேந்திரனின் கேள்வி, சுமனசியைக் காயப்படுத்தி, வலிக்கச் செய்தது.

அவள், அவனுடைய மனைவி. அவனைக் கவிழ்ப்பதற்கு, யாரோடேனும் சதி செய்வாளா? அதுவும், முன் பின் அறியாத யாரோ ஒருத்தியோடு சேர்ந்து?

இதை, அந்த யாரோ ஒருத்தி முன்னிலையில் எப்படிக் கேட்பது?

பதில் சொல்லப் பிடிக்காமல், தரையைப் பார்த்து நின்றாள் அவள்.

ஆனால், அது போன்றத் தடைகள் ஏதும் அந்த ப் பெண்ணுக்கு இல்லை போலும்! அத்தோடு, இந்த நாற்பது வயதை அடையுமுன், எத்தனை பார்த்தாளோ?

அழகாகத் தோளைக் குலுக்கி, “இங்கென்ன ஆட்கள் வரிசையாக நிற்கிறார்களா, ஒவ்வொருவராகப் பிடித்துக் கவிழ்ப்பதற்கு? ஆனால், இங்கே தப்பு செய்தவர் யாரேனும் இருந்தால், அது நீ மட்டும்தான். புலிக் குகைக்குள் புள்ளிமானைக் கூட்டி வந்திருக்கிறாய்.” என்று குற்றம் சாட்டினாள், பெரியவள்.

“அவள் ஒன்றும் பச்சைக் குழந்தையில்லை. சென்னையில் படித்து, வளர்ந்தவள். மதுரையில் வெளியே போய் வேலை பார்க்கிறவள். அதுவும் ஒன்றும் கிராமப்புறம் அல்ல. கேட்டால், டெல்லிக்குக் குறைவில்லை என்று அவளே சொல்வாள்.” என்று திருப்பினான் யுகேந்திரன்.

“ஆனால், இந்த இடத்துக்கு? “ என்று விடாமல் கேட்டாள் அந்தப் பெண்.

எரிச்சலுற்று, “நீ கொஞ்சம் வாயை மூடிக் கொண்டிருந்தால், நன்றாக இருக்கும். அலகா! வேறு வேலை இல்லை என்றால் சாப்பிடவேனும் போகலாமே! உனக்குப் பிடித்த காடை முட்டை காளான் பிரட்டல் இருக்கிறது. அப்புறம், எனக்கு இல்லாமல் எல்லோரும் காலி பண்ணிவிட்டார்கள் என்று மூக்கால் அழாதே!” என்றான் யுகேந்திரன்.

“இங்கே நில்லாமல் போ என்கிறாய். அதுதானே?”

“உன் கனத்த மண்டையோட்டைத் தாண்டி, உள்ளே இருப்பதை, ஒரு வழியாக விஷயம் எட்டினால் சரி! “ கேலி போல யுகேந்திரன்

வைத்தது பலமான குட்டுதான் என்றாலும், அந்த அலகாவின் முகம் மலர்ந்தே இருந்தது.

“புது மணத் தம்பதி. தனித்திருக்க ஆசைப்படுவீர்கள். நீ இவ்வளவு சொன்ன பிறகும், இங்கே உட்கார்ந்திருப்பது, அநாகரீகம். அங்கே போய், என் காடை முட்டையையாவது கபளீகரம் செய்கிறேன்.” என்று இலகுவாகப் பேசி, விலகிப் போனாள், அந்த அலகா!

அலகா சென்றதும், யுகேந்திரன் மனைவி பக்கம் திரும்பினான்.

இவ்வளவு நேரம், அவள் ஒரு வார்த்தை பேசவில்லை., நிமிர்ந்து அவனைப் பார்க்கவுமில்லை.

அவள் அருகில் வந்து, அவளது கரத்தைப் பற்றி, “சுமி . .” என்று அழைத்தபோதும், அப்படித்தான்.

கீழ்க் கண்ணால் கைக்கடிகாரத்தை நோட்டம் விட்ட யுகேந்திரன் கண்களை ஒரு தரம் மூடித் திறந்து, “சுமி, இது வேறு உலகம். நம் மனது சுத்தமாயிருந்தால் போதும். மற்றதைப் பெரிதாகக் கருதக் கூடாது. . .” என்று கூறியவாறே, மனைவியின் முகத்தை நிமிர்த்தினான்.

நேராக அவனைப் பார்த்து, “மற்றதை என்றால் எதை?” என்று கேட்டாள் சுமனசி. “அவர்கள் அப்படி ஒட்டுகிறார்கள், நீங்களும் யாரையும் விலக்கவில்லையே! “

“எப்படி விலக்குவது? பிடித்துத் தள்ளவா? நாலு பேர் பார்க்கும்போது, அது அநாகரீகமில்லை?”

“அவர்கள் செய்தது ரொம்ப நாகரீகம் என்கிறீர்களா?”

“இல்லைதான்.” என்று அவனும் ஒத்துக்கொண்டான் அவன். கூடவே தொடர்ந்து, “அதற்காக அத்தனை பேர் முன்னிலையில், காமரா வேறு ஓடிக் கொண்டிருககும்போது, அவர்களைப் பிடித்துத் தள்ளுவதோ, கண்டிப்பதோ சரியாகத் தோன்றுமா? அப்படி நான் ஒழுக்க சிகரம் போலக் காட்டிக்கொண்டால், யாராவது நம்புவார்களா? இப்போதானால், ஆசை, ஏமாற்றம், முன்னேறுவதற்காக எதற்கும் துணிந்தவர்கள் என்று தெரிந்தே பொருட்படுத்தாமல் இருப்பதாகக் கருதுவார்கள். மற்றவர்கள் என்ன? என் அன்பை உணர்ந்தவள், நீயும் அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும்.” என்றான் அவன் சற்று கண்டிப்பான குரலில்.

கடைசியாக அவளையே குறை கூறுகிறானா?

ஆனால், ஒரு வேளை அப்படித்தான் நினைத்திருக்க வேண்டுமோ?

அவனது “அன்பை உணர்ந்தவள்” பதப் பிரயோகம் வேறு, அவளை நெகிழ வைத்தது. அவனை நம்பாமல் இங்கே வந்து நின்று . . .

கணவனிடம் மன்னிப்புக் கேட்க வாயைத் திறந்தவளுக்கு இன்னொன்று நினைவு வந்தது.

“சரி, அப்படியே வைத்துக் கொள்வோம். ஆனால், நேற்று வீட்டில் ? அப்போதும் இப்படிச் சும்மாதானே இருந்தீர்கள்?”

வெளிப்படையாகவே கைக்கடிகாரத்தைப் பார்த்தான் யுகேந்திரன். பார்த்துவிட்டு வேகமாகப் பேசினான். “பார் சுமி, ரேணு என் ஃபைனான்சியருடைய மகள்.தகப்பனிடம் இருக்கும் பணத்துக்காக, அவளைச் சுற்றியுள்ள உலகமே அவளது காலடியில் கிடக்க வேண்டும் என்று எண்ணுகிறவள். நிறையப் பேர் அப்படிக் கிடக்கிறார்கள்தான். அவளை மணந்தால், சில ஆயிரம் கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் சொந்தமாகுமே என்கிற ஆசை! அதனால், எல்லோரிடமும் அந்த அடிமைத்தனத்தை எதிர்பார்ப்பவள். அத்தோடு, இந்த ஒட்டல் உரசல்களுக்கு இந்த இடங்களிலெல்லாம் அர்த்தமே கிடையாது.”

இடைமறித்து, “இதே போல நான் வேற்று மனிதனோடு . . . நான் இப்படிச் சொன்னால் ஒப்புவீர்களா?” என்று கேட்டாள் அவள்.

பொறுமையற்ற வேகத்துடன், “இந்த சூழ்நிலையில் வளர்ந்திருந்தால், நீயே வேறு பேசமாட்டாய்.” என்றான் யுகேந்திரன்.

“அவர்களுள் ஒருத்தியை மணப்பதுதானே?”

“என்ன பேச்சு இது? மனைவி என்று உன்னைத்தான் நினைக்கத் தோன்றியது. உனக்கும் அதே உணர்வுதான் என்று எனக்குத் தெரியும். ஒருவருக்கொருவர் அந்த நேசம் இருக்கும்போது, வேறு எது முக்கியம்? பார், நேரமாகிறது. ஓரளவு நேரம் நாம் தனியே பேசிக்கொண்டிருப்பதை யாரும் தவறாகக் கருத மாட்டார்கள். அதற்கு மேல் நன்றாயிராது. வா, உள்ளே போகலாம்.” என்று அழைத்தான் கணவன்.

“எனக்கு . .எனக்குத் தலை வலிக்கிறது  வீட்டுக்குப் போக வேண்டும்.”

“நன்றாக இருக்குமா? நாம் இருவரும் விருந்து கொடுப்பவர்கள். வாம்மா.” என்று மறுபடியும் அழைத்தான் அவன்.

அவனுக்குப் பணிந்து, அந்த நேரத்தில்  அவனோடு சேர்ந்து விழா ஹாலுக்குள் செல்ல சுமனசிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

ஒரேயடியாக மறுக்க முடியாது என்று உணர்ந்தவளாய், “நீங்கள்

முதலில் போங்கள் ஐந்து நிமிஷம் கழித்து வருகிறேன்.” என்றாள், எங்கோ பார்த்ததபடி.

உடல்மொழி என்கிற “பாடி லாங்வேஜ்” படிப் பார்த்தால், அவளது பதில் அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது தெளிவு.

அதற்காகக் கணவனின் விருப்பம் போலெல்லாம் சுமனசி ஆட மாட்டாள் என்று யுகேந்திரனுக்குத் தெரிய வேண்டும்தானே?

பிடிவாதமாகப் பார்வையை அவனிடம் திருப்பாமல் அப்படியே நின்றாள் அவள்.

ஓரிரு கணங்களின் பின், பொறுமையிழந்த ஒரு வேக மூச்சின்பின், “ரொம்ப நேரம் ஆக்காமல், சீக்கிரமாக வந்துவிடு. விருந்துண்டு முடித்தவர்கள் விடை பெற வருவார்கள்.” என்றதோடு, அங்கிருந்து வெளியேறினான் அவன்.

என்னவோ, பெரிய போரில் ஜெயித்துவிட்ட மாதிரி ஓர் உணர்வு உண்டாயிற்று அவளுக்கு.

ஆனால், யாரை வென்றாள்? கணவன் மனைவிக்குள், வெற்றியென்ன? தோல்வியென்ன?

சற்று முன் இருந்த பெருமிதம் மறைய, சுமனசி முன்னிலும் சோர்ந்தாள்.

ஆனால்,  அதற்காக இங்கேயே ஒளிந்து மறைந்து நிற்கவும் முடியாது. உண்டு ழுடித்தவர்கள், விடைபெற வருவார்கள். அவனது மேலான பாதியாக, அவனோடு கூட நின்று விடை கொடுக்க வேண்டும்!

சட்டென்று, இன்னொரு விஷயம் அவளுக்கு உறைத்தது. விடை பெறுவது என்றால், வந்தது போலவே கொஞ்சல்கள், தழுவல்கள், அசிங்க ஜோக்குகள் எல்லாம் இருக்கும்தானே? அத்தனையும், அவன் அருகே முகம் மாறமல் நின்று சகிக்க வேண்டுமா? கடவுளே! என்ன மாதிரி உளைக்குள் வந்து மாட்டிக் கொண்டாள்!

நிற்க நிற்கத் தாமதம் ஆகக் கூடும். சீக்கிரமாகப் போனால், கிளம்புகிறவர்களும் சீக்கிரமாகப் போய்த் தொலைவார்கள்!

இந்த ஒரு காரணத்துக்காக மட்டுமே, மீண்டும் வரவேற்பு ஹாலுக்குள் செல்ல, சுமனசி முடிவெடுத்தாள்.

வேண்டா வெறுப்பாகத்தான்!

முன்னேற மறுத்த கால்களைப் பிடிவாதமாக அவள் எடுத்து

வைத்தபோது, இன்னும் ஒரு தரம் "சிட்அவுட்"டின் திரை விலகியது.

இப்போது வந்தவன், முப்பதிலிருந்து ஐம்பது வரை எந்த வயதாகவேனும் இருக்கக் கூடிய ஓர் ஆண் மகன். டியோவில் குளித்திருந்தான். உச்சந் தலையிலிருந்து பாதம் வரை, பார்லர் உபயம் என்று சற்றும் யோசியாமலே சொல்லி விடலாம்.

குச்சி குச்சியாக நின்ற தலைமுடி. சீர்ப் படுத்தப்பட்ட புருவங்கள். மீசை கோடாகத் தாடை வரை வழிய, கூர்மையான முனையுடன் குறுந்தாடி வேறு!

ஜிலுஜிலுவென்று ஒவ்வோர் அசைவிலும் ஒளியை வாரி இறைத்த துணியில் தைத்த தொளதொள ஜிப்பா! சாடின் மாதிரி பளபளத்த பைஜாமா! அவன் எங்கே இருந்தாலும், இருக்கும் இடத்தை, ஒரே பார்வையில் கண்டுபிடித்து விடலாம். அவ்வளவு பளபளா!

கழுத்தில் சங்கிலி, கையில் பிரேஸ்லெட், பெரிய பெரிய மோதிரங்கள்.

அந்த மனிதனைப் பார்த்ததும், சுமனசிக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது. விழுந்து விழுந்து வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போல எழுந்த உந்துதலை அடக்கி, லேசாக முறுவல் செய்தாள் அவள்.

"சற்று முன் இங்கே மின்னலடித்ததே! நீங்கள் சிரித்தீர்களா, மிசஸ் யுகேந்திரன்? " என்று கூசாமல் புகழ்ந்தான் அவன்.

தன்னை மீறி, மறுபடியும் அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

முகமலர்ச்சியுடனேயே, " என்னை உங்களுக்குத் தெரிகிறது. ஆனால் சாரி, நீங்கள் . . ." என்று அவசரமாக யோசித்தபடியே மெல்லக் கேட்டாள் அவள்.

அவளது முயற்சி புரிந்தவனாக, "ரொம்ப யோசிக்காதீர்கள். நினைவு வருவது கஷ்டம். நான் மேடைக்கு வந்தபோது, ஒரு காரணமாக நீங்கள் முகத்தைத் திருப்பி, சமாளித்துக்கொண்டு இருந்தீர்கள். " என்றான் அவன் குரலில் பரிவுடன்.

திடுமென, மின்சாரம் தாக்கியது போல இருந்தது, அவளுக்கு. முகத்தைத் திருப்பி நின்று சமாளிப்பது என்றால்? எவளோ ஒருத்தி, யுகேந்திரனிடம் அதிகப்படியாக உரிமை பாராட்டிய நேரமாக இருந்திருக்கும்!

அவள் சிரமப்பட்டு சமாளித்தாள் என்பதை, இப்படி ஒருவன் கண்டு சொல்லும்படி ஆயிற்றே! யுகேந்திரனுக்குத் தெரிந்தால், "நீ முகம்

திருப்பியதால் வந்தது” என்று அவளையே குற்றம் சொல்லக் கூடும் . .

அவளது எண்ணத்தினூடே, அவன் குரல் குறுக்கிட்டது. “வேண்டாம், மிசஸ் யூகி. அந்தப் பெண்களின் மயக்கத்துக்கு,, யுகி என்ன செய்வார்? வெற்றி மேல் வெற்றி பெற்றவர். ஆளும் நன்றாக இருக்கிறார்! தீபத்தின் ஒளியைப் பார்த்து விட்டில் பூச்சி மயங்கினால், அதில் தீபத்தின் தப்பு என்ன? யுகேந்திரன் மீது கோபமோ வருத்தமோ கொள்வது . . வந்து, நியாயமல்ல. சாரி. குடும்ப விஷயத்தில் தலையிடுகிறேன் என்று தோன்றினால் மன்னித்து விடுங்கள். உங்கள் அழகான முகம் வாடினால், என்னால் தாங்க முடியவில்லை!”

பரவாயில்லை. அன்னியனே என்றாலும், அவளிடம் அக்கறை காட்டவும் ஒருவன் இருக்கிறான்!

ஆனால், இதற்கு மேல் தாமதிக்க முடியாது. யுகேந்திரன் சொன்னது போல விருந்து கொடுக்கிறவள், எங்கோ போய்விட முடியாது.

ஒரு தயக்கமான முறுவலுடன் அவனைப் பார்த்து, “சாரி, நான் போக வேண்டும். விருந்தாளிகள் கிளம்பும்போது, நான் அவரோடு நின்று விடை கொடுக்க வேண்டும். . “ என்று கிளம்பினாள்.

“ஒன் மினிட்!” என்று அவளைத் தடுத்து நிறுத்தியவன், அவசரமாக முன்னே சென்று, அவள் செல்ல வசதியாகத் திரையை ஒதுக்கிப் பிடித்துக்கொண்டு நின்றான்.

ஒரு கையால் திரையை ஒதுக்கி, லேசாக உடலை வளைத்து, மறு கையால் அவள் செல்ல வழியைக் காட்டி அவன் நின்ற தினுசில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

“தாங்க்ஸ்” என்று அவள் முன்னே நடந்தால், கூடவே நடந்தபடி, “நறநறவென்று யார் யாரோ , என்னவோ கடிக்கிற சத்தம் கேட்கிறதா, சுமனசி மேடம்? ஒரு பேரழகியின் பக்கத்தில் நடந்து வரும் பாக்கியம், இருந்திருந்து இவனுக்குப் போய்க் கொடுத்து வைத்திருக்கிறதே என்று கோபத்தில், நிறையப்பேர் பல்லைக் கடிக்கிறார்கள் மேடம். கண்ணால் எரிக்கிற சக்தி இருந்தால், இப்போது நான் சாம்பலாகத்தான், உங்கள் பக்கத்தில் கிடப்பேன்!” என்று அவன் மிகைப்படுத்திப் பேசிய விதம், அவளுக்கு இன்னமும் சிரிப்பூட்டியது.

அந்தச் சிரிப்புடனே கணவன் பக்கத்தில் போய் நின்றால், அவளை, அவன் பார்த்த பார்வையில் கடுப்பு தெரிந்தது.

என்ன என்று யோசித்தவளுக்கு, வினாடிக்குள் விஷயம் புரிந்தது.

அந்தப் "பளபளா"வோடு பேசியபடி அவள் வந்தது, துரைக்குப் பிடிக்கவில்லை!

இவன் மட்டும் என்னென்னமோ . . . பண்ணலாம். அதை சகித்து, அவன் பக்கத்தில் அவள் பிடித்து வைத்த பொம்மை மாதிரி, "ஈ" என்று இளித்தபடி நிற்க வேண்டுமாக்கும்! அவள், இன்னொருவனோடு சும்மாப் பேசிக்கொண்டு வந்தால் கூட, இவன் முகம் சுளிப்பானாக்கும்!

சே! அந்தப் பளபளாவின் பெயரைக் கூடத் தெரிந்து கொள்ளவில்லையே! தெரிந்திருந்தால் கூப்பிட்டுக் கையாட்டவேனும் செய்யலாம்!

சுமனசி எதிர்பார்த்தது போலவே, விடை பெறும் சாக்கில், அடுத்தொரு சித்ரவதையைச் சகிக்க வேண்டியிருந்தது.

திரும்பி வரும்போது, "பார்ட்டி பெரிய வெற்றி என்று திரிபாதி சாருக்கு ரொம்ப சந்தோஷம்." என்று காரை ஓட்டியபடியே மகிழ்ச்சியோடு யுகேந்திரன் கூறினான். "அழைத்த முக்கியமானவர்கள் எல்லோருமே வந்திருந்தார்கள். பொழுதுபோக்குத் துறையில், முழு இலாகாவுமே வந்திருந்தது. இன்னும் இந்தத் துறையில் . . . " என்று தொடங்கியவன் "சாரிம்மா. உனக்கு இந்தக் கும்பலில் யார்யார் முக்கியமானவர்கள் என்று எதுவும் தெரியாதல்லவா? போகட்டும். இன்னும் இரண்டு பார்ட்டிகளுக்குப் போய் வந்தால், எல்லோரும் அறிந்த முகமாகி விடுவார்கள்." என்றான் அவளுக்கு ஆறுதலாக.

இன்னும் இரண்டு பார்ட்டி! அப்புறம் எல்லோரும் அவளுக்கு தெரிந்தவர்கள் ஆகிவிடுவார்களாமே!

என்னவோ சொல்வார்களே, "இன்னும் கொஞ்ச நாள் கஷ்ட காலம், அப்புறம் அது பழகிவிடும்" என்று. ஆனால், அதற்குள் அவள் மூச்சு முட்டிச் செத்துவிட மாட்டாளா?

இப்படி யோசிப்பது, கொஞ்சம் அதிகப்படிதான். அப்படி யாரும் சாக மாட்டார்கள். அவளும் சாகப் போவதில்லை.

ஆனால், இது போல நாலைந்து மணி நேரத்துச் சித்ரவதையை, அடிக்கடி சகிப்பது மிகமிகக் கஷ்டம்! நிச்சயமாக முடியாது!

"முக்கியமோ, முக்கியமில்லையோ? எனக்கு அவர்கள் எல்லோரும் ஒரே மாதிரிதான் தோன்றினார்கள். அதிலும், உங்கள் திரிபாதி சாரை நான் பார்க்கவே இல்லையே!" என்றாள் அவள் விட்டேற்றியாக.

"அவர் "தண்ணி" அறையில் இருந்தார். அதை மேற்பார்வை பார்த்துக் கொண்டு." என்றான் அவன், சர்வ சாதாரணமாக.

இருவரின் பின்னணியில் இருந்த வேற்றுமை, அவளை முகத்திலேயே அறைந்தது. "குடி"யைப் ப்றி எவ்வளவு இயல்பாகப் பேசுகிறான்!

ஓரளவு பழக்கமாகிவிட்டதுதான். ஒரு நல்ல கதாநாயகன் கூட, "இம்"மென்றால் மது அருந்துவது, பல்வேறு ஊடகங்களின் மூலம், ஓரளவு ஏற்கப்பட்டுவிட்ட நிலைதான். ஆனாலும், சுமனசியின் மனம் முரண்டியது.

"தண்ணி போடத் தனி அறை வேறா? அதுதான், தட்டுகளில் கிண்ணங்களை அடுக்கிக் கொண்டு வந்துகொண்டே இருந்தார்களே?" என்று கேட்டாள் அவள்.

என்ன முயன்றும், குரலில் சிறு ஏளனம் தொனிப்பதை, அவளால் தவிர்க்க முடியவில்லை.

அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், யுகேந்திரன் இயல்பாகவே பதில் சொன்னான். "அது, சாதாரணமாகக் கொடுப்பது. சிலர் பார்ட்டி என்றாலே, இதை மட்டுமே நினைத்துக்கொண்டு வருவார்கள். அதுவும், அதிகார வர்க்கம் என்றால், தனியாகக் கவனித்துத்தான் தீர வேண்டும். கூடவே, கம்பெனியும் தந்தாக வேண்டும். திரிபாதி சாருக்கும் குடிக்கப் பிடிக்கும் என்பதால், என் பார்ட்டிகளில் இந்தப் பொறுப்பை , அவர் எடுத்துக் கொள்வார்." என்று, அவளுக்கு விளக்கினான்.

ரொம்பப் பெரிய உதவிதான். ஒரு குடிகாரனுக்கு இவ்வளவு பாராட்டா? பணம், பெண் இரண்டையுமே வைத்திருப்பதாலா? ஒன்றும் பிடிக்கவில்லை அவளுக்கு.

ஆனால், அதைச் சொல்லவும் மனமில்லை.

அந்த மனிதரை, ஒரு "காட்ஃபாதர்" போல எண்ணுகிறவன் யுகேந்திரன். வீணே தகராறு வரும்.

கணவனோடு தகராறு கூடாது என்று அவள் ஒதுங்கிப் போனால், அவனுக்கு அந்த மாதிரி எண்ணமே தோன்றவில்லை போலும்.

வீட்டை அடைந்து, அவள் பட்டைக் களைந்து, குளித்து உடை மாற்றி வந்தபோது, அவனும் இரவு உடைக்கு மாறியிருந்தான்.

இதில்கூட, என்ன கம்பீரமாக இருக்கிறான் என்று அவள் கண்கள் மயங்கும்போது, அருகில் அமர வைத்து, அவன் சொன்னான்.

"இன்றைய பார்ட்டி பற்றி உன்னிடம் முக்கியமாக ஒன்று சொல்ல

வேண்டும், சுமி.” என்று தொடங்கி, நேராக விஷயத்துக்கு வந்தான். “அந்த ஜெயபாலோடு பழகுவது நல்லதில்லை, செல்லம்.” என்றவன், அவளது புரியாத பார்வையைக் கண்டு, “ஓ, அவன் பெயர் கூட, உனக்குத் தெரியாதா? அவன்தான், அந்த பளபளா, ஜிலுஜிலு! உனக்குக் கூடத் திரையை ஒதுக்கி விட்டு, இடுப்பு வரை வளைந்து போஸ் கொடுத்து, அடுத்த கையால் மேடைக்கு வர வழி காட்டினானே? என்னவோ, என்னிடம் வருவதற்கு, உனக்கு வழி தெரியாத மாதிரி! அவன்தான். அவன் பெயர்தான் ஜெயபால். அனேகமாக யாரும் அவனை உனக்கு அறிமுகம் செய்து வைத்திருக்க மாட்டார்கள். இதிலிருந்தே எவ்வளவு மோசமானவன் என்று புரிந்துகொள்.” என்றான்.

ஒருவன் பழைய நாகரீகப்படி, தலை உடல் தாழ்த்தி வழி காட்டினால், போஸ் கொடுக்கிறானாமா? அதனால், அவனுக்கு மோசமானவன் என்று பட்டமா?

“இல்லை. எனக்குப் புரியவில்லை. அவரைப் போலவே, இன்னும் சிலரையும் யார் என்ன என்று யாரும் எனக்குச் சொல்லவில்லை. ஏன், உங்களைக் கடித்துத் தின்று கொண்டிருந்தார்களே, அந்தப் பெண்களில் பலரும் கூட அப்படித்தான். அந்த ஜெயபால் மட்டும் எதனால் மோசம் என்கிறீர்கள்?” என்று கணவனை நேரே பார்த்து, நிதானமாகக் காரணம் கேட்டாள் சுமனசி.

யுகேந்திரனின் கண்களில் கவனம் கூடிற்று. அவளது கை விரல்களை வருடியபடி மெதுவாக, “அவன் ஒரு மோசமான பெண்பிள்ளை போறுக்கி, சுமனசி. பக்கா உமனைசர்.” என்று எடுத்துச் சொன்னான்.

“ “ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை!””

“எ என்னது?” என்று புரியாமல் கேட்டான் கணவன்.

“ஈயம் . . அது உங்களுக்குப் புரிய வாய்ப்பில்லை. “பாட் காலிங் த கெட்டில் பிளாக்” என்று சொல்வார்களே, அதேதான் அர்த்தம். அத்தனை பேர், பெண்கள் உங்களைத்தானே மொய்த்தார்கள்?” என்று அவனையே கேட்டாள் சுமனசி.

“ஏன் என்று யோசித்தாயா? என்னால் அபாயம் இராது என்று தெரியும். ஆனால், அவன் அப்படியில்லை. . . உனக்கு . .உனக்குப் புரிவது கஷ்டம். சொன்னால் ஏற்றுக்கொள், சுமி.”

சட்டென எழுந்துவிட்டாள் அவள். “ தமிழ்நாடு ஒன்றும் நீங்கள் நினைப்பது போலப் பட்டிக்காட்டு கிராமம் அல்ல. “

“இதை நீ முன்பே சொல்லியிருக்கிறாய். ஆனால், மனதளவில், நீ அறியாப் பெண்தான். இந்த உலகம் உனக்குப் புரிவது கஷ்டம்!”

இன்னும் விலகிச் சென்றபடி, “அடியோடு தெரியாமலே போயிருந்தால், எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்!” என்றாள் சுமனசி, முணுமுணுப்பாக.

“என்ன சொன்னாய்?” என்று ஆத்திரத்துடன் எழுந்தவன் முகத்தில் கோபம் ஜொலித்தது.

சுமனசி திகைத்து நோக்கும்போதே, அவன் முகம் மாறியது.

அமைதியான குரலில், “அலகா சொன்னது சரிதான். இந்த வாழ்க்கைக்கு நீ இன்னமும் தயாராகவில்லை. அவகாசம் இல்லாததால் நான் அவசரப்பட்டு விட்டேன் போலத் தெரிகிறது. வெளித் தோற்றத்தைப் பார்த்துத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன். உனக்கு அசதியாகவும் இருக்கும். நீ போய்த் தூங்கு. நாளை எல்லாம் வேறு மாதிரி தோன்றும்.” என்றவன், சிகரட் பாக்கெட்டை எடுத்துக்கொண்டு முன்னறைக்குச் சென்றான்.

இதை எப்படி எடுத்துக் கொள்வது?

இந்தப் பேச்சு முடிந்தது என்றா? அல்லது, அவளுடன் பேசப் பிடிக்கவில்லை என்றா?

பின்னதோ என்று நினைத்து, அவளுக்கு அழுகை வந்தது.

ஆனால், அதற்காக அவன் பின்னே போய்க் கெஞ்சிக் காலில் விழுவதற்கு, அவள் ஒன்றும் ரோஷமற்றவள் அல்ல!

அத்தோடு, தப்பு வேறு, அவன் பக்கம் இருக்கிறது!

செய்வது அறியாமல், சுமனசி சற்று நேரம் அங்கேயே நின்றாள்.

முன் அறையில் ஏதோ அரவம் கேட்டது.

அவன் திரும்பி வருகிற நேரம், அங்கேயே நின்றால், அவனுக்காக ஏங்கி நிற்பது போலத் தெரியுமே என்று தோன்றவும், விழுந்தடித்துக்கொண்டு உள்ளே போய்ப் படுத்தாள்.

ஆனால், அவன் அப்போது உள்ளே வரவில்லை. காரணம் தெரிவிப்பது போல, முன்னறையில் இருந்து, மென்மையான சங்கீதம் இனிமையாக ஒலித்து, இறுக்கத்தைத் தளர்த்தியது.

வெகு நேரம் கழித்து, யுகேந்திரன் உள்ளே வந்து விளக்கை அணைத்தபோது, சுமனசி அயர்ந்து தூங்கிவிட்டிருந்தாள்.

மறுநாள்  காலையில் எழுந்தபோது, அவன் சொன்னது போலவே, எல்லாம் வேறாகவே தெரிந்தது. முந்திய நாளைய வேறுபாடு, புத்தகத்தின் புரட்டிய பக்கம் போலக் கண்ணுக்கு மறைந்து, அடியோடு காணாமல் போயிருந்தது.

குளித்துவிட்டு வந்தவன் ஈரத் தலையை அவளது கன்னத்தில் தேய்த்து எழுப்ப, அவள் கிளுகிளுப்புடன் எழுந்து காஃபி கலந்தாள்.

அந்தப் பணக்காரக் குடியிருப்பிலேயே ஒரு குடும்பம் “கேட்டரிங்” செய்தது. யார் யாருக்கு என்ன வேண்டும் என்று முன் தினமே கேட்டு, செய்து அனுப்புவார்கள். அங்கேயும் போய்ச் சாப்பிடலாம். தரமும் சுவையுமாக இருந்ததால், அந்தக் குடியிருப்பில் நிறையப் பேர் வீடுகளில் சமைப்பதே கிடையாது.

யுகேந்திரனைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! இப்போது மனைவிககும் சேர்த்து அனுப்பச் சொல்வதில், அவனுக்குப் பிரச்சினை இருக்கவில்லை!

சுமனசியும், இங்கே ஏதாவது வேலை தேடலாமா, அல்லது வீட்டிலிருந்து தன் சமையல் திறமையை வெளிப்படுத்தலாமா என்று இருமனமாக யோசனையில் இருந்தாள்.

யுகேந்திரனும், “நீ வேலைக்குப் போய்ச் சம்பாதித்துத்தான் ஆக வேண்டும் என்று இல்லை. அதே போல, உணவும் பிரச்சினை கிடையாது. பொழுது போவதற்காக என்ன செய்வது என்று உன் விருப்பம் போல நீயே முடிவு செய்.” என்று கூறிவிட்டான்.

அவளது விருப்பம் என்றது, அவளுக்கு சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனால், அவளது விருப்பம் அவனையும் பொறுத்து இருந்ததுதான், பெரும் பிரச்சினையாக இருந்தது.

முதலாவதாக, அவன் வீட்டில் இருக்கும் நேரம் வெகுவாகக் குறைந்துபோயிற்று.

காலையில் கிளம்பிப் போனால், திரும்பி வருவதற்குக் கிட்டத்தட்ட நள்ளிரவு ஆயிற்று.

அவள் முகம்சுளித்தபோது, “உன்னோடு இருக்க எனக்கு மட்டும் ஆசை இல்லையா?” என்று கேட்டு, தன் பிரச்சினை பற்றி அவன் எடுத்துச் சொன்னான்.

“அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று வந்ததில் இருந்து கணக்கிட்டால், கிட்டத்தட்ட ஒரு மாதம் வேலையே நடக்கவில்லையே, சுமிம்மா. அதை ஈடுகட்ட வேண்டும். முடிக்கும் தறுவாயில் ஒன்றை

விட்டுவிட்டு ஓடி வந்தேன். இப்போது சற்றுக் காலம் தாழ்ந்ததாகி விட்டபோதும், அதற்குரிய மார்க்கெட் தேடிப் பணமாக்க வேண்டும். அதையும் தூக்கி நிறுத்துகிற மாதிரி இன்னொன்றைத் தயாரிக்க வேண்டும்! நிறைய வேலைகள், செல்லம்!

"உனக்குப் பொழுது போக . . .ஒரு வழிகாட்டி மாதிரி, இந்த ஊர் மற்றும் சுற்று வட்டாரத்தை அறிந்த டிரைவரும் காரும் தருகிறேன். வீட்டில் இருப்பதானால், வீடியோ, ஆடியோ சிடிக்கள் முன்னறையை ஒட்டி அலமாரியில் அடுக்கி வைத்திருக்கிறேன். . . "

இவையெல்லாம், உன் அருகாமைக்கு ஈடு ஆகுமா என்று அவளது நினைப்பு ஓடும்போதே, அவன் மேலும் பேசினான்.

"ஷாப்பிங் போவதானாலும் போ. பணம் தருகிறேன் . ."

"வேண்டாம். பணம் என்னிடமே இருக்கிறது." என்றாள் அவள் இடையிட்டு.

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, சட்டென அவளை இழுத்து அணைத்தான் யுகேந்திரன். "கண்மணி, ப்ளீஸ்டா! ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேன் அல்லவா? நேரம் பொன்னானது. அதுவும், செய்தி தொடர்பான இந்தத் தொழிலில் சரியான சமயம் பார்த்துக் காய் நகர்த்துவது மிகமிக முக்கியமானது. அதுவும் ஒன்று தவங்கி நிற்பதால், அடுத்ததில் இன்னமும் வேகமாகச் செயல்படவேண்டும்! வரட்டுமா?" என்று, ஓர் அவசர முத்தத்துடன் விரைந்தோடிப் போனான்.

அந்த வினாடி மயங்கியபோதும், தனித்திருந்து யோசிக்கும்போது, ஐயோ பாவம் என்று ஆறுதல் பரிசா என்று ஆத்திரம்தான் வந்தது அவளுக்கு.

ஆனால் இரவுகளில், அவனது ஆசையும் அன்பும் உலகத்தையே மறக்கடித்தன. அவனது கைகளுக்குள் அடங்குவதற்காகவே, பிறந்து வளர்ந்தது போல உணர்ந்தாள்.

அவன் அருகில் இல்லாத வேளைகளில், வேறு மாதிரி . . .மற்ற பெண்கள் அவனைச் சுற்றுவதும் அதனால்தானோ என்று தரம் இறங்கி நினைத்துப் புழுங்குவாள்.

தரம் குறைந்தது என்று அவள் ஒதுக்க முயன்றாள்தான்.

ஆனால், அடுத்த "ப்ராஜெக்டு"க்குப் பூஜை போடும் நாள், தொடக்க நாள்., என்று அடுத்தடுத்த விழாக்களும், கிடைத்தது சாக்கு என்று, அந்தச் சில பெண்கள் யுகேந்திரனை ஒட்டியதுமாக, சுமனசி

ஒதுக்க முயன்ற மட்டமான கருத்தே, மீண்டும் மீண்டும் அவளுக்கு வலியுறுத்தப் பட்டது.

இதற்கிடையே, அந்த அந்த ரேணு வேறு! யுகேந்திரனோடு, அவன் தொடர்பான அனைத்துமே அவளுக்குச் சொந்தம் என்பது போல அவளது பாவனையும் பேச்சுமாக, சுமனசியைப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தாள்.

கடைசியாகக் கணவனைப் பிரிந்து செல்ல சுமனசி முடிவெடுக்கக் காரணமானவளும் அவளேதான்!

# அத்தியாயம் -8

அன்று வேலை நிறைய இருப்பதால், ரொம்பவும் தாமதமாகத்தான் வீடு திரும்ப முடியும்., அதனால் சாப்பிட்டுப் படுத்துத் தூங்கிவிடும்படி யுகேந்திரன் செய்தி அனுப்பியிருந்தான்.

கூப்பிட்டு ஒரு வார்த்தை சொல்லக் கூட முடியாதாக்கும் என்று எரிச்சல் பட்டவளுக்கு, இப்படி நாள் முழுதும் கணவனுக்காகக் காத்துக் கிடப்பதும், அவன் வரத் தாமதமாகும்போது ஆத்திரப்படுவதும் அழுவதும், ஆரோக்கியமான வாழ்க்கை அல்ல என்று புரிந்தது.

அவளும் ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டால், இப்படி ஏங்குகிற பொழுது வெகுவாகக் குறைந்து போகுமல்லவா?

வீடு சிறை போலத் தோன்ற எங்காவது போய் வரலாமா என்று சுமனசி யோசித்தபோது, “கேட்டரிங்” வீட்டுப் பெண் ஒருத்தி, அங்கே சுமனசியோடு நன்றாகப் பழகி விட்டவள், தன்னோடு வெளியே வரமுடியுமா என்று அவளைக் கேட்டாள்.

“நீ சொன்னது போல, என் பேஸ்டல் கலர் டிசைனுக்கு அடர்த்தியான வண்ணத்தில் பார்டர் மாதிரி ஏதாவது தேவைப் படுகிறது, சுமனசி. இன்றே போய் வாங்கி வந்துவிட்டால், உடனே தைத்து, என் பிறந்த நாளில் அணிந்து கொள்வேன்.” என்று அவள் கூறவும் சரிதான் என்று சுமனசி கிளம்பிவிட்டாள்.

வீட்டில் இருந்துதான் என்ன பண்ணப் போகிறாள்? யுகேந்திரன் நள்ளிரவுக்கு முன் வரப் போவதில்லை!

கணவனைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டுமோ என்று யோசித்துவிட்டு, வேண்டாம் என்று முடிவு செய்தாள்.

அவனே, பேச நேரம் இல்லாமல்தானே, மெஸேஜ் அனுப்பியதோடு நிறுத்திக் கொண்டான்! இப்போது அவள் அழைத்தால் மட்டும் இனிக்குமா? ஏதாவது கடுமையாகச் சொன்னான் என்றால், அது வேறு வருத்தமாக இருக்கும்! போய்விட்டு வந்து, அப்புறமாகச் சொல்லிக் கொள்ளலாம் என்று சுமனசி தீர்மானித்தாள்.

அவர்கள் செல்ல வேண்டிய கடை, ஒரு பெரிய காம்ப்ளக்சில், உட்புறமாக இருந்தது. பின்புறத்தில் “பார்க்கிங்.”

வேண்டியதை வாங்கிக்கொண்டு, வாங்கிய பொருட்களோடு சுமனசி ஓரமாக நிற்க, காரை எடுத்துவர, சோனு பின்புறம் சென்றாள்.

சும்மா பராக்குப் பார்ப்பது என்பார்களே, அது போலப் பார்த்ததுதான். அல்லது, அந்தக் கீச்சுக் குரல் சிரிப்புதான் காதில் விழுந்து ஈர்த்ததோ, சாலைக்கு நேர் எதிர்ப்புறமாக, இருந்த ஒரு கட்டிடத்திலிருந்து இறங்கி வந்து காரில் , யுகேந்திரனின் சில்வர் கிரே காரில் ஏறியவர்கள் ரேணுவும் அவனும்தான்!

என்னமோ, நிறைய்ய வேலை இருப்பதாகச் சொன்னானே! அந்த உயர் ரகத் துணிக்கடையிலா, அந்த வேலை நடக்கிறது?

நேரே போய், யுகேந்திரனிடம் கேட்க வேண்டும் போல நெஞ்சு கொதித்தது.

ஆனால், தெரு முனையில் பச்சை விளக்கு எரிய, மற்ற வாகனங்களோடு, அவனது காரும் சென்று மறைந்தது.

எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை! இதை எப்படிப் பொறுப்பது?

"மேடம் . ." என்ற அழைப்புக் குரல் கேட்ட பிறகுதான், செக்யூரிடி ஆள் வந்து சாமான் பைகளைப் பின் சீட்டில் வைத்துவிட்டு, அவளுக்காகக் கார்க் கதவைத் திறந்து, வைத்துக் கொண்டிருப்பது புரிந்தது.

"தாங்க்ஸ்" சொல்லி, ஒரு பத்துரூபாய்த் தாளை அவனிடம் கொடுத்துவிட்டுக் காரில் ஏறி, சோனுவுடன் சரியாக உரையாடி, எப்படி வீட்டுக்கு வந்து சேர்ந்தாளோ? அவளுக்கு எதுவும் நினைவில்லை.

காரை நிறுத்தி, கூடவே வீட்டுக்குள் வந்து, "அன்றைக்கு சர்மா வீட்டு விருந்தின்போது, தயாரிக்கும் விதம் பற்றிக் கேட்டாயே, அந்த இனிப்பு." என்று  சுமனசியின் கையில் கொடுத்துவிட்டு, சோனு விடை பெற்றுச் சென்ற பின்னரே, நடந்த சம்பவத்தின் முழுத் தாக்குதலை, சுமனசி உணர்ந்தாள்.

யுகேந்திரன் அவளிடம் பொய் சொல்லிவிட்டான். அவன் சொன்னது பொய் என்று, கண்ணெதிரே நிரூபணம் ஆகிவிட்டது.

வெறும் ஒரே ஒரு மாதமே நிரம்பிய பச்சைக் குழந்தை, அவர்களது திருமண வாழ்வு.

இதில் எத்தனையோ நடந்திருக்கிறது.

வேலை வேலை என்று யுகேந்திரன் சென்றுவிட, நாளின் பெரும்பான்மை நேரம், சுமனசி தனித்தேதான் இருக்க நேர்ந்திருக்கிறது.

பார்ட்டி என்றாலே, பாம்பாய் அவன் மீது படரும் பெண்களை, அவள் சகித்திருக்கிறாள்.

கூடவே, அந்தப் பெண் ரேணு வேறு.

எல்லாவற்றுக்கும் கணவன் கொடுத்த விளக்கத்தை அவள் முழுதாக ஏற்றிருக்கிறாள்.

பெரும்பான்மை நேரம், அவளைப் பிரிந்திருக்கச் செய்த வேலையின் காரணம் பற்றி அவன் சொன்னதை, அப்படியே ஏற்றிருக்கிறாள்.

அந்தத் தழுவல் பெண்களின் செயலுக்கு அவனைப் பொறுப்பாளியாக்க முடியாது., பொது இடத்தில், உத்தமபுத்திரன் போல, அவர்களைப் பிடித்துத் தள்ளுவது, அவர்கள் போலவே அநாகரீகமாக நடப்பதாகும் என்றால், அதையும் ஒத்திருக்கிறாள்.

ரேணு! காட்ஃபாதர் போன்ற ஃபைனான்சியருடைய ஒரே பெண். அவன் பார்க்க வளர்ந்த சின்னப் பெண் என்றானே அதையும் சரிதான் என்று கேட்டுத்தானே இருக்கிறாள்!

இது எல்லாமே, அவன் மீது உள்ள நம்பிக்கையால்தானே? அவன் பொய் சொல்ல மாட்டான் என்ற நிச்சயம்! அதிலும், அவளிடம் உண்மைதான் பேசுவான் என்கிற உறுதி!

அவளது முன்னிலையிலேயே நடந்த  பலதும் அவளைக் கலக்கமுறச் செய்தபோதும், கடைசியில் இந்த நம்பிக்கைதானே தாரக மந்திரமாக, அவனோடு இணைந்து அவளை மகிழ்ச்சியுடனே வாழ வைத்தது.

இப்போது, அவளது கண்ணெதிரே, அவன்  பொய்த்துப் போனானே!

இனி அவனை எப்படி நம்புவது?

இனிமேல்தானா? இது வரையுமே, அவன் சொன்னதெல்லாம் பொய்யில்லை என்று என்ன நிச்சயம்?

அவன் சொன்ன வார்த்தைகள்! அவனது விளக்கங்கள்! அவளிடம் கிசுகிசுத்த காதல் மொழிகள்! எல்லாமே பொய்யாக இருந்தால்?

கால்கள் துணியாய் மடிவது போலத் தள்ளாடின. அதன்பிறகே, அவ்வளவு நேரமும்  அந்தப் பெரிய ஹாலில் குறுக்கும் நெடுக்கும் நடந்திருப்பது, அவளுக்குப் புரிந்தது.

இன்னோர் எட்டு எடுத்து வைத்தால் விழுந்து விடுவாள் போலத் தோன்றவே, அவசரமாக சோஃபாவில் உட்கார்ந்து கொண்டு யோசித்தாள்.

அவன் சொன்னதில் ஒன்று பொய்யென நிரூபணம் ஆகிவிட்டது. பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றால், இதற்கு மேல் அவள் நிரூபணம் தேட வேண்டிய தேவையே கிடையாது!

ஆனாலும், இன்னும் . . இன்னும் மிச்சமிருப்பதும் தெளிவாகிவிட்டால், அதற்கு மேல், அவள் இங்கே இருந்து, இப்படிச் சூடும் குளிருமாக அலைபாய்ந்து அவதியுறத் தேவையில்லை!

ஆனால் எப்படி?

அவள் எப்போது தேவை என்றாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று, வீட்டில் ஒரு கார் நாள் முழுதும் நின்றது. கூப்பிட்டால், பத்தே நிமிஷங்களில் காரோட்டி, அவனது பைக்கில் வந்து விடுவான்.

ஆனால், அவன், யுகேந்திரனுடைய காரோட்டி. அவனுக்கு ஊதியம் கொடுக்கிறவன், யுகேந்திரன்! இப்போது எந்த அளவுக்கு, சுமனசிக்கு அவன் பயன்படுவான்? அதாவது, அவனை எந்த அளவுக்கு நம்ப முடியும்?

செல்லுமிடம் தெரிந்ததும், சம்பளம் கொடுக்கிற முதலாளியை ஏதோ ஒரு வகையில் எச்சரித்துவிட்டால்?

அவனுடைய முதலாளியைப் போலவே, அந்தக் காரோட்டியையும் நம்ப முடியாது! பின்னே என்னதான் செய்வது?

மூளை மரத்துப் போனது போல, யோசனை ஓடாமல், சற்று நேரம் சுமனசி பரக்க விழித்தாள்.

ஐயோ, பெரிய அதிர்ச்சியில் மூளை செயலிழந்து போய்விட்டதோ? அதுதான் யோசிக்க முடியவில்லையோ என்று, அவள் சட்டெனப் பயந்து போனாள்.

மூளை வேலை செய்யாவிட்டால், அவளது கதி என்ன ஆகும்? சாவி கொடுத்த பொம்மையைப் போல, யுகேந்திரனின் விருப்பம் போல ஆடப் போகிறாள். ஐயோ!

“ஓ” என்று உரக்க அழுவதற்காக வாயைத் திறந்தவள் சத்தம் வெளி வருமுன்பே, வாயை மூடிக்கொண்டாள்

யோசிக்கக் கூட முடியாமல் மூளை செயலிழந்து போயிற்று என்றால், இப்போது அவள் செய்ததெல்லாம் என்ன? இப்படியா, அசடு போல நிலை தடுமாறுவது?

மேலும் யோசித்துவிட்டு, பெரிய, நம்பகமான டாக்சி சர்வீஸ் ஒன்றிலிருந்து, டாக்சி தருவித்தாள். குறிப்பிட்ட இடம் வரை ஓட்டச்

சொன்னாள். அங்கே அவள் தேடி வந்த ருசு, மிக எளிதாகவே கிடைத்தது.

இந்த ஏமாளி எங்கே வந்து பார்க்கப் போகிறாள் என்று எண்ணி அலட்சியமாகத் தன் சில்வர்கிரே காரை, திரிபாதியின் வீட்டுக்கு வெளியிலேயே நிறுத்தியிருந்தான், அவளுடைய ஆசைக் கணவன்.

வேலையாம் வேலை! எல்லாம் முடிந்துவிட்டது!

அவ்வளவு நேரம் இருந்த பரபரப்பு, பதைபதைப்பு மாறி, சுமனசியிடம் ஓர் அமைதி பரவியது.

இழப்புதான். அதனால் வருத்தம்தான். ஆனால்,  முடிவு இதுதான் என்று தெரிந்துவிட்ட அமைதி. ஆமாம். என்ன செய்வது என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது.

வீடு சென்றதும், அவளது பொருட்களை எல்லாம் பிரித்து எடுத்து, கொண்டு வந்தது போலவே, பெட்டிகளில் அடுக்கி வைத்தாள்.

அவன் வாங்கிக் கொடுத்தவைகளை, அவன் காணும் விதமாகத் தனியே அலமாரியில் அடுக்கி வைத்தாள் எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டுப் பார்த்தால், அவன் நிறையத்தான் வாங்கிக் கொடுத்திருந்தான்.

ஆசைக் கணவனின் காதல் பரிசு என்று அக மகிழ்ந்தவை எல்லாம், இப்போது குற்ற மனப்பான்மையை மறைக்கத் தந்த லஞ்சங்களாகத் தோன்றி வெறுக்க வைத்தன.

அலமாரிக் கதவை இறுகச் சாத்திவிட்டு, அவனுக்காகக் காத்திருக்கலானாள்.

இரவு எந்நேரமானாலும் வீடு திரும்பியதும் குளித்துவிட்டுத்தான், யுகேந்திரன் அவள் அருகே வருவான். சோப்பின் மணமும் லேசான ஈரமுமாய் . . . சே! இதையெல்லாம் நினைத்துப் பார்க்கவே கூடாது!

எங்கெங்கோ ஓடிய மனதை அடக்கவென்று ஒரு கார்ட்டூன் படத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

யுகேந்திரன் திரும்பி வருவதற்கு, அன்று ஒரு மணிக்கும் மேலே ஆகிவிட்டது.                அவன் உள்ளே வரும்வரையும் அவள் அசையவில்லை.

டீவியைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவளைச் சிறு வியப்புடன் நோக்கி, “தூங்கவில்லையா, செல்லம்?” என்று, அவள் பக்கமாக ஓர் எட்டு எடுத்து வைத்தவன் நின்று, “குளித்துவிட்டு

வருகிறேன்மா. வேலை வேலை என்று ஒரே கச கசா." என்றவாறு உள்ளே சென்றான்.

வேலை வேலை என்று கசகசாவாமே! இதை, இன்னமும் நம்பிக் கொண்டிருக்க, அவள் என்ன முட்டாளா?

இருந்த இடத்தை விட்டு அசையவே இல்லாமல் உட்கார்ந்திருந்தாள்.

யுகேந்திரனும் சீக்கிரமாகக் குளித்துவிட்டு வந்தான். ஆனால், படுக்கையறையை எட்டிப் பார்த்துவிட்டு வந்திருப்பான் போல.

"என்னடா, இன்னும் இங்கேயே உட்பார்ந்திருக்கிறாய்? வா, போகலாம்." என்று, அவள் எழ உதவியாகக் கையை நீட்டியபடி அவளை அணுகினான்.

ஆனால், அவள் அசையாமல் இருந்து, "உங்களிடம் பேச வேண்டும்." என்றாள்.

இன்னொரு சோஃபாவில் தொப்பென அமர்ந்தான் யுகேந்திரன்.

எப்போதுமே, மற்றவரின் உடல், முக பாவங்களைக் கவனித்து, அதற்கேற்பப் பேசுகிறவன். இப்போதும், ஒற்றை சோஃபாவில் உட்கார்ந்திருந்த மனைவி, அவளது மரத்த குரல் இவற்றின் காரணமாய் ஒன்றை ஊகித்து, "இந்த அதிகப்படி வேலை நேரம் பற்றித்தானே? என்னம்மா செய்வது? "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்று எந்தக் காலத்திலோ எழுதி வைத்து இருக்கிறார்களே! இப்போது நமக்குப் பெயர் இருக்கிறது. வயதும் துணை வரும்போது, இயன்றவரை உழைத்துப் பணத்தை அறுவடை செய்துகொள்ள வேண்டாமா? அதனால்தான் இந்த அளவு வேலை செய்ய வேண்டியிருக்கிறது." என்று அவள் கேளாத கேள்விக்கு விளக்கம் கொடுத்தான்.

இதில் ஏமாற, அவள் இன்னுமென்ன முட்டாளா?

"ஆனால், இன்று நீங்கள் வேலை எதையுமே பார்க்கவில்லையே!" என்றாள் சுமனசி இனிய குரலில்.

"வாட்?!" என்று நிமிர்ந்தான் அவளுடைய கணவன்.

எப்படிக் கண்டுபிடித்தாள் என்ற அதிர்ச்சியா?

"இவ்வளவு நேரம் வேறு என்ன செய்தேனாம்?"

சிரித்து சமாளிக்க முயற்சிக்கிறான்!

"இவ்வளவு நேரமும், முதலில் அந்தப் பெண் ரேணுவோடு ஊர்

சுற்றிவிட்டு, பிறகு அவள் வீட்டில், அவளோடு இவ்வளவு நேரம் கூத்தடித்துவிட்டு வந்திருக்கிறீர்கள்." என்றாள் அவள் நிதானமாக.

"என்ன உளறுகிறாய், சுமனசி? இன்று முழுக்க வேலைதான் நடந்தது. புது ப்ராஜெக்ட்டுக்கான துணிமணிகள் தேர்வு, அதன்பின் அதற்கான செலவுக் கணக்குகள் . ."

"பொய்! " என்று, ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள் சுமனசி.

துணிமணிகள் தேர்வாம்! அந்தக் கடையில் யாரும் பார்த்திருக்கலாம் என்று அதற்கொரு காரணம் சொல்லியாயிற்று. ஆனால், இரவில் அவள் டாக்சியில் போய்ப் பார்த்தது? "திரிபாதி சாரின் அலுவலகம் எங்கிருக்கிறது என்று எனக்குத் தெரியும். இவ்வளவு நேரமும் நீங்கள் இருந்தது அவரது வீட்டில். அப்படி இல்லை என்று அதற்கும் பொய் சொல்ல வேண்டாம்." என்றாள் கோபமாக.

புருவம் சுளித்து, "எதற்குப் பொய் சொல்வது?" என்று கேட்டான் அவன். சாருக்குக் கொஞ்சம் அசதியாக இருந்ததால், வீட்டில் வைத்துத்தான் கணக்குப் போட்டோம். இதில் என்ன இருக்கிறது?" என்று அவளையே கேட்டான் அவன்.

ஏளனமாகக் கைதட்டி, "பிரமாதம். சமாளிப்பைச் சொன்னேன். " என்றாள் அவள்.

அவளை வெறித்து நோக்கிவிட்டு, "உண்மையை நம்பாதவர்களிடம் அது பற்றி மேலே சொல்லிப் பயனில்லை. ஆனால், நான் அவரது வீட்டில் இருந்து வேலை செய்தது, உனக்கு எப்படித் தெரியும்? " என்று, மறுபடியும் அவனே கேள்வி கேட்டான்.

"வேலை செய்ததாக மறுபடியும் சொல்ல வேண்டாம். நீங்கள் அங்கே இருந்ததை, நானே வந்து பார்த்தேன்!"

புருவம் உயர்த்தி அவளைப் பார்த்துவிட்டு, "உளவா? " என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

கீழ்த்தரமாக நடந்ததாக, அவளைக் குன்ற வைக்கிறானாம்!

ஆனால், "தப்புச் செய்யாதவர்களுக்கு, ஒற்று, உளவைப் பற்றி ஏன் கவலை?" என்று திருப்பினாள் மனைவி.

"ஓ, தப்புதான் என்று முடித்தே ஆயிற்றாக்கும்! ஆனால் என் கவலை . . கவலை கூட இல்லை. வெறும் கேள்விதான். என்னிடம் இவ்வளவுகூட நம்பிக்கை இல்லாதவள், எந்தத் தைரியத்தில், எனக்குக் கழுத்தை நீட்டினாய்? என்னோடு கிளம்பி, நீ அறியாத இந்த ஊருக்கு

வந்தாய்? “

மெய்தான். எல்லாமே, திருமணத்துக்கு முன்பாக ஆர அமர ஆலோசித்து அறிந்திருக்க வேண்டும். அவசரப்படுத்தியது அவன்தான் என்றாலும், அதை ஏற்றிருக்க வேண்டியது இல்லையே! இப்போது அவனிடம் இதை ஒப்புக் கொள்வம் மடத்தனமே. எனவே, “உங்களை நம்பி வந்தது தப்பு என்று இங்கே வந்த பிறகுதானே தெரிகிறது?” என்று சமாளித்தாள்.

“தெரிந்துவிட்டதல்லவா? இனி என்ன செய்வதாக உத்தேசம்?”

“திரும்பிப் போவதாகத்தான். இனி இங்கே ஒரு நாள் தங்கினாலும் எனக்குக் கேவலம்!” என்று சுமனசி அறிவித்தாள்.

அவளையே பார்த்து, “ஓ, முடிவே செய்துவிட்டாயா?” என்று இனம் காண முடியாத குரலில் கேட்டான் அவன்.

“ஆமாம்! மாற்ற முடியாத முடிவு! “ என்றாள் அவள் பிடிவாதக் குரலில்.

ஒரு கணம் தாமதித்து, “யோசித்துப் பேசு, சுமனசி. .அங்கே உன் சித்தி உன்னை ஆலம் சுற்றி வரவேற்கப் போவதில்லை.” என்று சற்றுத் தணிந்த குரலில் எடுத்துச் சொன்னான் யுகேந்திரன்.

அவ்வளவு நேரம் சுழன்றடித்த புயலில், ஆனந்தவல்லியைப் பற்றிய நினைவே சுமனசிக்கு வரவில்லை. ஆனால், சித்தியைப் பற்றி யுகேந்திரன் குறிப்பிட்டதோ, அடியோடு பிடிக்கவில்லை!

அவளைப் பற்றிச் சொல்ல, இவன் என்ன மகா ஒழுங்கு?

கூடவே இன்னொன்று தோன்றக் கண்கள் அகல “ஓ! “ என்றாள் அவள். “ஆக, அந்தத் தைரியம்தானா? இவள் போக்கிடம் இல்லாதவள்., என்ன தப்பு செய்தாலும், பொறுத்துக்கொண்டு, மிதியடி போலச் சும்மா கிடப்பாள் என்று எண்ணித்தான், அப்படி விரட்டிப் பிடித்துத் திருமணம் செய்தீர்கள் போல! “ என்று அவனைக் குற்றம் சாட்டினாள்.

“சே! நல்ல விஷயத்தை எல்லாம், அசிங்கப்படுத்தாதே. ஆனால், ஒரு விஷயம் புரிந்துகொள். நீ இப்படி விறைத்துக்கொண்டு போனால், பின்னாலே ஓடி வந்து காதல் பிச்சை கேட்பேன் என்று மட்டும், ஒரு சிறு கணம் கூட எதிர்பாராதே! “ என்று எச்சரித்தான் அவன்.

“காதலா? ஒரு நல்ல வார்த்தையை அசிங்கப்படுத்துவது, இப்போது நீங்கள்தான். உங்களுக்கு இருந்தது காதல் அல்ல. வெறும் காமம். இருபது நாட்கள் ஜாலியாக இருந்தாயிற்று அல்லவா? அலுத்துப் போய்

அடுத்ததை . .”

அவ்வளவு நேரம் இருந்த கட்டுப்பாடு மறைய, “ஏய்!” என்று யுகேந்திரன் கையை ஓங்கிக்கொண்டு எழுந்துவிட்டான்.

ஒரு கணம் மிரண்டு சுருண்டுவிட்டு, உடனேயே அடிப்பாயா என்று நிமிர்ந்து அவளும் எழும்போதே, அவன் ஓங்கிய கையை இறுக மூடி இறக்கிவிட்டான்.

முஷ்டியாய் மூடியிருந்த கையை வெறித்துப் பார்த்தவன், சிறு அமைதியின் பின்.”ரைட். உன் விருப்பம் அதுவானால், போய்விடு. ஆனால் ஒன்று. எப்படி நீயாகப் போகிறாயோ, அப்படி நீயாகத்தான் திரும்பியும் வர வேண்டும். பின்னோடு நான் வந்து, காலில் விழாத குறையாக அழைப்பேன் என்று மட்டும் நினைக்காதே. அது ஒரு போதும் நடக்காது என்பது மட்டும் உனக்கு எப்போதும் நினைவிருக்கட்டும்!”

அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள் சுமனசி. “நிச்சயமாய்! நீங்கள் வரமாட்டீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். கடலில் என்ன, மீன்களுக்கா பஞ்சம்? அப்டியே சூரியன் மேற்கே உதித்து, நீங்கள் வந்து அழைத்தாலும், நானும் இங்கே திரும்பி வரவே மாட்டேன். அது உங்களுக்கும் நினைவிருக்கட்டும்.”

“மறக்க மாட்டேன்!” என்றான் அவனும் .

“சுரய்யாவிடம் சொன்னால் என்ன டிக்கட் வேண்டுமானாலும் எடுத்துத் தருவாள்.” என்றான் எங்கோ பார்த்தபடி.

“நெட்டில் டிக்கட் எடுக்க எனக்கும் தெரியும்!” என்றாள் அவளும் முகம் திருப்பி.

“அதுதானே! அவ்வளவு இல்லாமலா, இந்த ஊரில் நள்ளிரவில் வந்து . .ச்சு. எப்படியோ போகட்டும். அப்படியானால் . .பை.” என்று, அவனது அலுவல் அறைக்குள் சென்று, யுகேந்திரன் கதவைச் சாத்திக்கொண்டான்.

மணமாகி ஒரே மாதத்தில், சுவரில் எறிந்த பந்தாக சுமனசி திரும்பி வந்த கதை இதுதான்.

அதிர்ந்து தேறி, சிற்றன்னையின் திறமையால் ஒருவாறு குடும்பம் சிங்கப்பூருக்குச் சென்றது.

அதன் பிறகு, இதில் தன் மீது எங்காவது பிழை இருக்கிறதா என்று பலமுறை சுமனசி அலசி ஆராய்ந்திருக்கிறாள்.

நேரடியாக, அவனாக எந்தப் பெண்ணையும் தப்பாகத் தொட்டு

அவள் பார்த்தது இல்லைதான். ஆனால், அதற்கு அவசியமே இல்லாமல், அவர்கள்தான் மேலே வந்து விழுந்தார்களே!

அதுவும் அந்த ரேணு! அவளோடு சுற்றுவதற்காக, வேலை என்று பொய் சொல்லவில்லை? அது நிரூபிக்கப்பட்ட உண்மைதானே?

குடும்பத்தார் சிங்கப்பூருக்குச் சென்ற பிறகு, அந்த வீட்டிலேயே தனியாக இருப்பது, அவளுக்கு ஒன்றும் கடினமாக இருக்கவில்லை.

பொதுவாகப் பலரும் வேலைக்குப் போகிறவர்கள் என்பதால், அங்கே யாரும் யாரையும் இழுத்து வைத்து வம்பு பேசுவதில்லை. முக்கியமாக, அப்படிப் பேச நேரம் இருப்பதுமில்லை.

வம்பர் மகாசபைத் தலைவியான ஆனந்தவல்லி வெளிநாடு சென்றபின், வேலை மெனக்கெட்டு, மற்றவர்களைக் கூப்பிட்டு, அடுத்தவர்களைப் பற்றிப் புரளி பேசும் வேகம் யாருக்கும் இராததால், அவளது வாழ்க்கை கியர் போட்டு ஓடத் தொடங்கிய வாகனம் போல, அது பாட்டில் போய்க் கொண்டிருந்தது.

எப்போதேனும், பழைய நினைவுகள் வந்து வாட்டுவது உண்டுதான். ஆனால் அதற்கு அவகாசம் இல்லாதபடி, ஏதாவது வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்துகொண்டே இருப்பாள். ஏதோ வேலையும் நடக்கும். சோம்பிக் கிடப்பது இல்லாததால், உடம்பும் ஆரோக்கியமாக இருந்தது.

இதைக் கெடுக்க என்றே, அன்றைய பத்திரிகை வந்தது போலும்.

பத்திரிகையைப் பிரித்தால், அதன் பொழுது போக்குப் பகுதி பிரிந்து கீழே விழுந்தது.

குனிந்து எடுக்கும்போதே, முகத்தில் அறைவது போல, யுகேந்திரனின் படம் அவளைப் பார்த்துச் சிரித்தது. கூடவே, அந்த ரேணு!

# அத்தியாயம் -9

தூரத் தூக்கிப் போட முடியாமல், அவர்களைப் பற்றிய விவரங்களைப் படித்த சுமனசிக்கு நெஞ்சு எரிந்தது.

பத்திரிகை என்றால், அன்றாட செய்திகளை எழுதிவிட்டுப் போவதுதானே? அதைவிட்டுப் பொழுதுபோக்குகள் பற்றி எழுதுவானேன்? இந்தச் சானலில் இது, அந்தச் சானலில் அது என்று நிகழ்ச்சி நிரலோடேனும் நிறுத்தலாம்.

அதைவிட்டு, அந்த நிகழ்ச்சிகளைப் பற்றி, நிகழ்ச்சிகளைத் தயாரித்தவர்கள், நடித்தவர்கள் பற்றியெல்லாம் எழுதியாக வேண்டுமா? அதுவும், அவர்களது காதல், கல்யாணம் பற்றி விளம்ப வேண்டுமாக்கும்!

வெட்கம் கெட்டதுகள். கண்ட கழுதை என்று அவனுடைய தாயே சொன்ன பிறகும், அறிவுகெட்டதனமாகப் போய் விழுந்தாளே! அதற்காக எத்தனை முறை, தலையில் ஓங்கிக் குட்டிக் கொள்ளலாம்?

ஆத்திரமும் வெறுப்புமாக ஏதேதோ எண்ணமிட்டுவிட்டு, அதை மறக்கக் குறுக்கும் நெடுக்குமாக நடந்து பார்த்தாள். ஆனால் உடல் ஓய்ந்ததே தவிர, மனம் இயல்புக்கு வர மறுத்தது.

ஒரேயடியாக இல்லை என்று முடித்தால் தவிர, இந்தத் தவிப்பு ஓயாது என்று தோன்றியது.

அப்போதும் ஓயும் என்று உத்திரவாதம் கிடையாதுதான். ஆனால், கைவிட்டுப் போய்விட்டது., திரும்பக் கிடைக்க வாய்ப்பே இல்லை என்று, இந்த மட நெஞ்சுக்கு ஒருவாறு புரியலாம் அல்லவா?

நடையை நிறுத்திப் போய், அலமாரியைத் திறந்தாள்.

ரொம்பவும் முன்னால் ஒரு வேகத்தில், குடும்ப விவகாரங்கள் தொடர்பான வக்கீலிடம் வாங்கி வைத்தது., செயல்படுத்த மனமில்லாமல், அடியில் அப்படியே போட்டு வைத்திருந்த ஃபைலை எடுத்தாள். படித்துப் பாராமலே, அதில் குறித்திருந்த இடங்க அளில் கையெழுத்திட்டாள். கவரில் திணித்து முகவரி எழுதி ஒட்டினாள்.

அலுவலகத்துக்குச் செல்லும் வழியிலேயே கூரியர் நிறுவனத்துக்குச் சென்று, நேரிலேயே கொடுத்துவிட்டுத்தான் ஆஃபீசுக்குப் போனாள்.

ஆனால், அதுவரை அவளை உந்திய வேகம் அதற்கு மேல் வடிந்து போய்விட, மனதில் அமைதி கொஞ்சமும் இல்லாது போயிற்று.

என்றைக்கோ செய்திருக்க வேண்டியது! இப்போதே, அது மிகவும் காலம் கடந்த செயல். இப்போதாவது, நினைவு வந்து செயல்பட்டதை எண்ணி சந்தோஷம் . . குறைந்த பட்சமாக நிம்மதியேனும் அடைய வேண்டும். அதை விட்டு, இப்படித் தவிப்பது மடத்தனம்!

இப்படித் தனக்குத்தானே எவ்வளவு புத்தி சொல்லிக்கொண்டபோதும், ஒன்றும் பலனிருக்கவில்லை! வேண்டாத வேலையை எல்லாம் எடுத்துச் செய்து, அலுத்துப் போய்த் தூங்கினாள்.

காலையில் எழுந்தால், விடியலே தெரியாத இருட்டு.

இந்த மதுரை மாநகரத்தில் புயல் எச்சரிக்கை!

என்னவோ வெப்பம் அதிகமாகி விட்டதால், அதைத் தணிப்பதற்காக, எங்கெங்கிருந்தோ குளிர் காற்று வேகமாக இங்கே வந்து கொண்டிருக்கிறதாம்!

உச்சுக் கொட்டிவிட்டு வேலைக்குக் கிளம்பினால், அலுவலகத்திலிருந்து கூப்பிட்டு, இன்று விடுமுறை என்றார்கள்.

சுமனசிக்கு ஒரே எரிச்சலாகிவிட்டது. இனி, எண்ணங்களோடு வேறு போராட வேண்டுமே! சலிப்போடு மறுபடியும் போய்ப் படுத்தாள்.

முந்தைய இரவில் தூங்காததற்குக் கொஞ்சமேனும் ஈடுகட்ட முடிந்தால், உடலுக்கு ஓய்வோடு,இந்தக் கொல்லும் நினைவுகளில் இருந்தும் கொஞ்சம் விடுதலை கிடைக்கக் கூடுமே!

கொஞ்சம் கண்ணயரும் போலத் தோன்றியபோது, செல் ஒலித்து, எழுந்து உட்கார வைத்தது.

யார் என்று பார்த்தால், சுபத்ரா ஆன்ட்டி! எதையும் மறப்பதற்கு வழியில்லாமல், இந்த ஆன்ட்டி வேறு என்று ஒரு கணம் சலித்தவளுக்கு, உடனேயே மனம் குன்றியது.

யுகேந்திரன், ஆன்ட்டியுடைய ஒரே மகன். மகனைப் பற்றி, அந்தத் தாய்க்கு எத்தனையோ கனவுகள், ஆசைகள் இருந்திருக்கும்.

ஆனால், மறந்தும் மகனைப் பற்றிப் பேச மாட்டார்கள். அவளது சுகம், குடியிருப்பின் செகரட்டரி, மற்றுமுள்ள யாராவது பற்றி, ஏதாவது விசாரிப்பு . . .

அவர்களிடம், ஆன்ட்டி நேராகவே நலம் விசாரிக்க முடியும். ஆனால், சுமனசியுடன் பேச விஷயம் வேண்டுமல்லவா?

தாயம்மா, அவளுடைய பையன்கள், புதிதாகப் போட்டிருக்கும் பயிர் . . .இப்படிக் கொஞ்ச நேரம்  ஏதாவது வளவளத்துவிட்டு, இருவரும் பை சொல்லி வைத்துவிடுவார்கள்.

சொல்லப் போனால், ஒவ்வொரு மாதமும் , இது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது எனலாம்.

எப்போதுமே, ஆன்ட்டியுடன் பேசுவது மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். இன்றுதான் அவளுக்கு எதுவுமே பிடிக்கவில்லையே!

மனதைக் கட்டுப்படுத்தத் தெரியாதவள் படத்தான் வேண்டும். ஆனால், ஆன்ட்டி இன்று பார்த்து ஃபோன் செய்திருக்க வேண்டாம்.

செல்லை எடுத்து, சிரமப்பட்டு, குரலில் உற்சாகத்தைக் காட்டி, "ஹலோ ஆன்ட்டி, என்ன திடீரென்று என் ஞாபகம்? ஆனால், என்றைக்கும் இல்லாதபடி இந்த மதுரையில் மழை மேகம் திரண்டபோதே, நீங்கள் கூப்பிடப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரிந்திருக்க வேண்டும்." என்றாள் கிண்டலாக.

"பரவாயில்லையே. சின்னப் பெண் அல்லவா? இன்றைக்கு என்னை முந்திக் கொண்டாய் போல! ஆனால், அப்படித்தான் நீ அடிக்கடி கூப்பிட்டுக் கூப்பிட்டு எடுத்துப் பேசியதாலேயே, என் ஃபோன் தேய்ந்து போனதாம். கடைத் தெருவில் சொல்லிக் கொண்டார்களாம். " என்றாள் சுபத்ரா பதிலுக்கு.

"சூழு சூழுய் ஆன்ட்டி, உங்கள் இடத்தில்தான், கடைத்தெருவே கிடையாதே, அங்கே எப்படிச் சொல்லிக் கொண்டு போக முடியும்? இதில் இருந்தே, உங்கள் பேச்சு எவ்வளவு உண்மை என்று வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறதே!" என்று சின்னவள் கேலி செய்தாள்.

அதற்குள் சுதாரித்து, "என்ன அவசரக்காரப் பெண்ணம்மா, நீ? நான் பக்கத்து ஊர்க் கடைத்தெருவை அல்லவா சொன்னேன்! முழுதும் கேட்காமல், என்ன அரட்டை?" என்று சிரித்தாள் மூத்தவள்.

கூடச் சேர்ந்து நகைத்துவிட்டு, "அம்பேல்! உங்களைப் பேச்சில் ஜெயிக்க முடியுமா, ஆன்ட்டி? தோல்வியை ஒத்துக் கொள்ளுகிறேன். அதை விடுங்கள். அங்கே நல்ல மழையா?" என்று சுமனசி விசாரித்தாள்.

"ஆமாம்மா, அடித்துப் பெய்து கொண்டிருக்கிறது. வெள்ளம் வரக் கூடும் என்கிறார்கள். ஆனால், இந்தக் காய்ந்த சிற்றோடையில் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகத் தண்ணீரையே நாங்கள் பார்த்தது இல்லை. வெள்ளமாவது, இன்னொன்றாவது? அங்கே, உனக்கு எப்படி?"

"இங்கே மழை அவ்வளவு இல்லை, ஆன்ட்டி. காற்றுதான் ஒரே வேகமாக அடிக்கிறது. எதற்கும் என்று அலுவலகத்துக்கு விடுமுறை விட்டுவிட்டார்கள். அதனால் செய்வதற்கு ஒன்றுமில்லாமல், மொட்டு மொட்டென்று வெறுமனே முழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்." என்று எரிச்சல் பட்டாள் சுமனசி.

"நானும் அப்படித்தான், சுமிம்மா. இந்த மழை இல்லை என்றால், இங்கே வருகிறாயா என்று உன்னைக் கேட்டிருப்பேன். இப்போது, வேலைக்காரர்களை அனுப்ப வேண்டும். அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் எல்லோரும், ஏதோ திருவிழா என்று மாமனார் வீட்டுக்குப் போயிருக்கிறார்களாம். அந்த இடம், ரொம்பத் தாழ்வானது. இவர்கள்

போய், எல்லோரையும்  ஏதாவது மேட்டுப் பகுதி பார்த்து கூட்டிப் போய் விட வேண்டும்! அவர்களை அனுப்பிவிட்டு, உள்ளே பூட்டிவிடுவேன். கொஞ்ச நேரம் டீவி பார்த்துவிட்டுப் படுத்து விடப் போகிறேன். வைக்கட்டுமா?” என்று சுபத்ரா கூறும்போதே, சுமனசிக்கு, யுகேந்திரனின் பயம் நினைவு வந்தது.

அந்தப் பயம் காரணமாகத்தானே, தாயை வேரோடு பிடுங்கி வைத்த மாதிரி மதுரையில் குடி வைத்ததும், அது தாய்க்கு ஒத்து வராததும் இன்னும் . . .

இன்னும் நிகழ்ந்தவை பற்றிய நினைவை ஒதுக்கி, சுபத்ராவைப் பற்றி சுமனசி யோசித்தாள்.

ஒருதரம் ஸ்ட்ரோக் வேறு வந்தவள். அந்த ஸ்ட்ரோக் மறுபடி வந்தால்?

அவசரத்துக்கு முதல் உதவி செய்யத் தாயம்மாவுக்குத் தெரியும். கற்றுக் கொடுத்துதான், பண்ணை வீட்டுக்கு அனுப்பியதே. ஆனால், அதற்கு மேல்?

சட்டென எங்கேனும் அழைத்துச் செல்ல யாரும் இல்லாமல், ஆபத்தாகி விடாதா?

“ஆன்ட்டி, தனியே இராதீர்கள் . . “ என்று சின்னவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே தொடர்பு விட்டுப் போயிற்று.

சற்று நேரம் முயன்று பார்த்துவிட்டு, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வேலை செய்த ஒரு சிநேகிதியிடம் விசாரித்ததாள்.

கிடைத்த பதிலில், கவலை அதிகரித்தது. முழு அலுவலகமுமே இயற்கைச் சீற்றத்தின் மீட்புப் பணியில் முடுக்கி விடப் பட்டிருப்பதாக அவள் சொன்னாள்.

ஊகூம். சுபத்ரா ஆன்ட்டி எக்கேடோ கெடட்டும் என்று, சுருட்டி மடக்கிக்கொண்டு வசதியாக வீட்டுக்குள் உட்கார்ந்திருக்க, அவளால் முடியாது! இங்கே தனியே உட்கார்ந்து, கண்டதையும் நினைத்து, சும்மா முழித்துக்கொண்டு இருப்பதற்கு, அங்கே போவது மேல்! ஆன்ட்டியோடு செஸ், ஸ்க்ராபிள் விளையாடலாம் . வேண்டாத பேச்சு பேசவும்மாட்டாள்.

பொதுவாகத் தந்தையின் காரை, சுமனசி அதிகம் எடுப்பதில்லை. சிற்றன்னையின் ஜாடைப் பேச்சுகளால், அந்தக் காரில் தனக்கும் உரிமை உண்டு என்கிற எண்ணமே அவளுக்கு வந்ததில்லை. மகள் பயன்பாட்டுக்காகவே, பசுபதி காரை விற்காமல் அங்கேயே

விட்டுவிட்டுப் போயிருந்தபோதும், அதை அவள் அதிகம் உபயோகித்ததில்லை.

தந்தை சொன்னது போல, வாரம் ஒரு தரம் காரை எடுத்து, குடியிருப்பை ஒட்டிய சாலையில் சுற்றிவிட்டு வருவாள். அடுத்து அவள் பயன்படுத்தியது, சுபத்ரா வீட்டுக்குச் செல்ல மட்டும்தான்.

நகரத்தின் போக்கு வரத்துக்கு, ஸ்கூட்டர் வசதியாக இருந்தபோதும், மதுரையில் இருந்து சுமார் இரண்டு மணி நேரத்துப் பயணத்தில் இருந்த சுபத்ராவின் வீட்டுக்குச் செல்லக் கார்தான் வசதியாக இருந்தது.

அன்றும் அது போலவே காரிலேதான் சென்றாள். மழையும் காற்றுமாகக் கூடுதலாக ஒரு மணி நேரத்துக்குப் பின் வீட்டை அடைந்தாள்.

கேட்டைத் திறந்து உள்ளே போய்ப் பார்த்தால், அந்த வீட்டில், ஆள் இருக்கும் அரவமே இல்லை. சும்மா என்றால், கேட்டைத் திறக்கும் சத்தத்திலேயே, சுபத்ராவோ, தாயம்மாவோ ஜன்னல் வழியே எட்டிப் பார்த்துவிடுவார்கள்.

பல முறை அழைப்பு மணி அடித்தும், பதிலே இல்லை.என்னதான் தோட்டம் செடிகொடி ஆசை என்றாலும், இந்த மழை, காற்றில், சுபத்ரா தோட்டத்துக்குள் போய்ப் பார்ப்பது, நடக்காத காரியமே.

என்றாலும், சுமனசி வீட்டை ஒட்டியவாறு சென்று, சுற்றிலும் பார்வையால் ஆராய்ந்தாள். கண்ணுக் கெட்டிய தூரம் வரை, ஆள் நடமாட்டமே தெரியவில்லை.

காலையில் அவளிடம் சொன்னது போல, மாடிக்குப் போய்ப் படுத்தவள் அப்படியே தூங்கியிருக்கக் கூடும் என்று தோன்றியது.

மதுரை ஃப்ளாட் போலவே, அந்த வீட்டுச் சாவி, அவளிடமும் ஒன்று உண்டு. “நீ எந்த நேரம் வந்தாலும், நான் அக்கம் பக்கம் சென்றிருந்தால் கூட, உள்ளே போய் உட்கார்ந்து கொள்ளலாம் இல்லையா?” என்று சொல்லி, சுபத்ரா கொடுத்து வைத்திருந்தாள்.

இது வரை அந்தச் சாவியைப் பயன்படுத்த நேர்ந்தது இல்லை.

இன்று அதைக் கொண்டு வீட்டின் உள்ளே போய்ப் பார்த்தால், ஒரு மாறுபாடு . . .அவசரமாக வீட்டை ஒதுங்க வைத்த தோற்றம் தெரிந்தது.

எதற்கும் என்று, மாடிக்கு ஓடிப்போய்ப் பார்த்தாள்.

படுக்கையறை காலியாக இருந்ததோடு, அங்கேயும் குளியலறையில், பேஸ்ட், பிரஷ், சோப் இல்லை.

இன்னும் தேடியபோது, ஆன்ட்டியின் கிட்பாக் போன்றவையும் இல்லை. இந்த மழை, காற்றில், இங்கே தனியே இருக்க வேண்டாம் என்று, தாயம்மாவோடு எங்கோ சென்றிருக்க வேண்டும். பத்திரமாக இருப்பாள்.

அன்று காலை . .சரியாகச் சொல்வது என்றால் முந்தைய நாளில் இருந்தே அடி வயிற்றில் இருந்த படபடப்பு, சற்று அடங்கியதைப் போல, சுமனசி உணர்ந்தாள்.

இனி, காரை எடுத்துக்கொண்டு கிளம்ப வேண்டியதுதான் என்று கதவைத் திறந்தால், அவளையே தூக்கிப் போய்விடும்போலப் பேய்க்காற்று, கதவைத் தடாரென்று அவள் மீதே அடித்தது.

சிரமப்படுக் கதவை மூடிவிட்டு, சுமனசி யோசித்தாள்.

இந்தக் காற்றிலும் மழையிலும், அவளால் காரை ஓட்ட முடியாது என்று நிச்சயமாகத் தெரிந்தது. மதுரைக்கும் அப்போதே போயாக வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. எனவே, இந்த மழை, காற்றின் சீற்றம் சற்றுக் குறையும்வரை அங்கேயே இருந்து விடுவது என்று முடிவு செய்தாள்.

ஆன்ட்டியைத் தனியே இருக்க வேண்டாம் என்று புத்தி சொன்னவள், அந்தத் தனிமையைத் தவிர்ப்பதற்காகவே மதுரையில் இருந்து கிளம்பி வந்தவள், கடைசியில் அவளே அங்கே தனித்திருக்கும்படி ஆயிற்று!

ஆனால், அந்த வீடும் அவளுக்குச் சொந்த வீடு போலத்தான்.

ஃப்ரிட்ஜைத் திறந்து ஆராய்ந்துவிட்டு, ஒரு காஃபியைப் போட்டு எடுத்துக்கொண்டு வந்து, டீவி முன் உட்கார்ந்தாள். பொழுதைப் போக்க வேண்டுமே!

ஆனால், டீவி நிகழ்ச்சியில் பதியாமல், மனம் எங்கோ சுற்றியது.

சொந்த வீட்டில்கூட, சில சமயங்களில், சித்தி அவளை அன்னியமாக உணர வைத்து விடுவாள். அது போன்ற தருணங்களில், சுமனசி பேசாமல் எழுந்து ஒதுங்கிப் போய்விடுவாள்.

தந்தையும் தம்பிகளும் கூட, சற்று இலகுவாக உணர்வது போலத் தோன்றவும், குடும்பம் சேர்ந்திருக்கும் தருணங்களில், வேறு ஏதாவது வேலையை இழுத்து வைத்துச் செய்து, அதையே காரணம் காட்டி,

சுமனசி அறைக்குள் முடங்கி விடுவாள்.

ஒருவேளை . . .யுகேந்திரனிடம் மனம் சாய்வதற்கு, இந்த ஒதுக்கமும் காரணமாக இருக்குமோ? சே! அதெல்லாம் இராது. கோ எஜுகேஷனில் படித்தவள். ஆண்களோடு கூடச் சேர்ந்து பணி புரிகிறவள். சில வழிசல்களும் உண்டுதான். அவர்களில் யாரையும் அவள் ஏறிட்டுக் கூடப் பார்த்தது இல்லையே!

இப்படித் தகாத ஒருவனோடு தன்னைப் பிணைத்துக்கொண்டு அவதிப் படுவது, அவளது தலையெழுத்தாக இருந்திருக்க வேண்டும்!

ஏதேதோ யோசனையில், யாரோ கதவைத் தட்டும் ஓசை முதலில் அவள் காதுகளில் விழவே இல்லை! காது கேளாததற்கு, இடியும் மின்னலுமாய் சோவென்று பெய்த மழையும் கூடக் காரணமாக இருக்கலாம்!

ஆனால், யாரோ கதவை இடிப்பது போலத் தட்டுவது நிச்சயம். ஆனால் . . . அந்த யாரையோ நம்பிக் கதவைத் திறப்பது, எந்த அளவுக்கு உசிதம்?
செய்வது, உத்தம குணமாக இருக்கலாம். ஆனால், தன்னைத் தானே காத்துக் கொள்வது, அதை விட உத்தமம் ஆயிற்றே!

பாதுகாப்பாக இங்கே இருப்பதை விட்டு, யாரென்று தெரியாத யாருக்கோ கதவைத் திறந்துவிட்டு, அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளப் போராட நேர்வது மடத்தனம் அல்லவா?

“யாராவது இருக்கிறீர்களா? எனக்கு உதவி செய்யுங்கள்!”

ஓர் இடி இடித்து, காற்றின் வீச்சும் சற்றே குறைந்திருந்த நேரத்தில் அந்தக் குரல் தெளிவாகக் கேட்டது. அந்தக் குரல்! அவசரமாக ஓடிப்போய்க் கதவை லேசாகத் திறந்து பார்த்தால், அங்கே தள்ளாடிக்கொண்டு நின்றது, அவனேதான். யுகேந்திரன்!

வேகமாகச் சங்கிலிப் பூட்டைத் திறந்து, கதவையும் விரியத் திறந்தால், “ததண்ணீர் வேகத்தில் கா . .கார் உஉருண்டு பள்ளத்தில் . .” என்றவாறே, மயக்கமுற்று அவள் மேல் சாய்ந்தான் அவன்.

ஆறடி உயரத்து ஆண்மகன் அவன். அதிகப்படி சதை போடவில்லை என்றாலும்,

அவனைத் தாங்குவது கடினமாகவே இருந்தது. ஒருவாறு கூட்டிப்போய், சோபாவில் அமர்த்துமுன், அவளுக்கு மூச்சு வாங்கிவிட்டது.

நிதானமாக மூச்சு வாங்கிக் கொண்டிருக்க முடியாமல், யுகேந்திரன்

மயங்கிக் கிடந்த தோற்றம், அவளை மிகவும் பாதித்தது.

அதிக நேரம் உணர்வு மயங்கிக் கிடப்பது நல்லதல்ல.

அவனுக்குச் சுய உணர்வு வரச் செய்வதுதான் மிகவும் முக்கியம் என்று தோன்ற, ஈரத் துணி கொண்டு கண்களை, நெற்றியை மென்மையாகத் துடைத்து விட்டாள். முனகியவாறு கண்ணைத் திறந்தவனிடம், “கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு நிறைய அடி பட்டிருப்பதால் வலி இருக்கும். . .” என்றவளை இடை மறித்து, “ஆமாம். கட்டாயம் பட்டிருக்கும். திடீரென்று வேகமாகத் தண்ணீர் . . .ஆமாம்., தண்ணீரின் வேகத்தில் கார் உருண்டுவிட்டது. கதவைத் திறந்து வெளியே வருவதே சிரமமாகிவிட்டது. நல்லவேளையாகப் பக்கத்தில் இந்த வீடு இருந்ததால், இஇங்கே வ . .வந்துவிட்டேன். “ என்றான் அவன்.

என்னவோ உறுத்தியதை ஒதுக்கி, “தலையில் ஏதோ காயமும் பட்டிருக்கிறது. இரத்தத்தைத் துடைத்துக் கட்டுப் போட்டுவிட்டால் . .. “ என்றபோது, அவன் மறுபடியும் குறுக்கிட்டான்.

“வவந்து . . “ என்று தயக்கத்துடன் தொடங்கி, “தொல்லை செய்வதற்குத் தயவு பண்ணி மன்னியுங்கள். கொஞ்சம் சூடாகக் காஃபி, டீ எதாவது தர முடியுமா? அப்படி எதையாவது குடித்தால், சீக்கிரமாக நன்றாகி விடும் என்று தோன்றுகிறது. உடம்பைக் கூட, நானே துடைத்துக்கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்.”“ என்றான் அவன்.

தயக்கத்துடன் அவன் பேசப் பேச, சுமனசிக்கு ஆத்திரம் உண்டாயிற்று.

அவனிடமிருந்து விலக்கம் கேட்டவள் அவளேதான். விலகி வந்தவளும் அவளேதான். அதற்காக, இந்த மாதிரி நேரத்தில்கூட, அவளை அன்னியமாகப் பேசிக் குத்திக் குதற வேண்டுமா?

ஆத்திரத்துடன் பார்த்தால், அவன் போடுகிற வேஷமாய் முழுமையாகவே மாறி, மிகச் சிறப்பாகவே நடித்தான்.

இப்படி யாரோ ஒருத்தியைத் தொல்லை செய்ய நேர்ந்துவிட்டதே என்று கூச்சமும் வருத்தமும் அப்படியே முகத்தில் தெரிந்தது. அந்த நெற்றிப் புடைப்பு, ரத்தம் கசிந்து கொண்டிருந்த கன்னத்துக் கீறல்களையும் மீறி!

சுமனசி முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள். அவனைப் பார்க்கும்போது, அவனது காயங்கள் ஒரு துன்பம் என்றால், இந்த நேரத்தில், இந்தப் பேச்சு, அவளைக் கொல்லாமல் கொன்றது.

ஆனால், இதற்காக அழுதோ, ஆத்திரப்பட்டோ ஏதாவது சொல்லவும் அவளுக்கு மனம் வரவில்லை! ஆனால், அப்படி ஓர் உணர்ச்சி நிலையை எதிர்பார்க்கிறானோ என்று தோன்றவும், சுமனசி சிரமப்பட்டு நாக்கை அடக்கிக் கொண்டாள்.

அவன் காயம்பட்டு வந்திருக்கிறான். ஆன்ட்டியுடைய பிள்ளை. அவனுக்கு சிகிச்சை செய்து அனுப்புவது, அவளது கடமை!

பேசாமலே போய், அடுப்பைப் பற்ற வைத்து, டீ தயாரித்து, சற்று அதிகச் சர்க்கரை போட்டுக் கொணர்ந்து கொடுத்தாள்.

ஒரு மிடறு குடித்தவன்,” ரொம்ப இனிப்பு “ என்றான்.

“அதிர்ச்சிக்கு நல்லது என்று அதிகம் சர்க்கரை சேர்த்தேன்.” என்று அவள் கூறவும் ஒப்புதலாகத் தலையசைத்து, “தாங்க்ஸ்.” என்றாள்.

“இப்போது உங்கள் காயங்களைப் பார்க்கலாமா? நானே பார்க்கட்டுமா?” என்று, அவனிடம் அனுமதி கேட்டாள் சுமனசி.

அனுமதிதான். அவன் வேறு யாரோ போலப் பேசினால், அவள் வேறு என்ன செய்ய முடியும்? அவனுக்கோ, சிகிச்சை செய்தே ஆக வேண்டும்! என்ன மாதிரி இடத்தில் எல்லாம் உருண்டு எழுந்து வந்தானோ? ஒரு டீடீ கூடப் போடாமல் இருப்பதே பெரிய தப்பு!

நல்ல வேளையாக இப்போது யுகேந்திரன் மறுக்கவில்லை.

“அசதியாகத்தான் இருக்கிறது. தயவு பண்ணி நீங்களே . . .”

“நீங்களே”யாம்!

பல்லைக் கடித்துப் பொறுமை காத்தாள் சுமனசி.

ஆன்ட்டி வைத்திருந்த பஞ்சு, கா.ஸ் துணியால் துடைத்து, மருந்திட்டு, கட்டுப் போட்டு . . .அவள் சிகிச்சையைச் செய்யச் செய்ய, யுகேந்திரன் ஏதோ நினைவாய் முகம் சுளித்து , அசையாமல் அமர்ந்திருந்தான்.

கட்டுப் போட்டு முடிந்ததும், “இப்போது பரவாயில்லையா?” என்று கேட்டாள்.

அவனது முகச் சுளிப்பு மாறவே இல்லையே!

“ம். பரவாயில்லை., ரொம்பவே பரவாயில்லை. . . ஆனால் . . .”

“ஆனால் என்ன? எங்கேயும் கட்டு அதிகப்படி இறுக்கமாக இருக்கிறதா?” என்று அருகில் நெருங்கித் தலைக் கட்டைத் தொட்டாள் சுமனசி.

என்னவோ தீயால் சுட்ட மாதிரித் துள்ளி விலகினான் யுகேந்திரன்.

அவளை ஆத்திரமாக நோக்கி, “பாருங்கள், இப்படி யாரையும் ரொம்பவும் நம்பக் கூடாது. வந்து . .இதைச் சொல்லக் கூடாதுதான். ஆனால், .உங்களிடம் பொய் பேச எனக்கு  மனமில்லை வந்து . .உங்களைப் பார்க்கும்போது, அப்படியே கட்டி அணைக்க வேண்டும்போல, வந்து இன்னும் என்னென்னவோ  செய்யும் ஆசை அதிகமாக வருகிறது. நம்பி அடைக்கலம் கொடுத்த பெண்., அவளிடம் தப்புப் பண்ணக் கூடாது என்று, கஷ்டப்பட்டு என்னை அடக்கிக் கொண்டிருக்கிறேன். ஆனால் . .இப்படிப் பட்ட மனக் கட்டுப்பாடு இல்லாத எவனாவது, எனக்குப் பதிலாக உள்ளே நுழைந்திருந்தால், உங்கள் கதி என்ன ஆகும்? உங்கள் நல்லதற்காகச் சொல்கிறேன். இப்படி வெகுளியாக இராதீர்கள்.” என்று பெரிதாகப் புத்தி சொன்னான்.

அவன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, “சோ” வென்று கடலில் பெரிய அலை தொடர்ச்சியாக அடிப்பது போலப் பேரோசை கேட்டது.

திகைப்புடன் ஓடிப்போய் வேளியே நோக்கினால், பார்க்குமிடம் எல்லாம் ஒரே தண்ணீர்! வெள்ளக்காடு!

பதினைந்து ஆண்டுகளாக, அந்தப் பக்கம் காய்ந்த தரையாக இருந்த சிற்றோடை என்று சுபாத்ரா ஆன்ட்டி சொன்ன ஓடை மட்டுமல்ல, அதற்கு மேலும் தரையெல்லாம், கண்ணுக்குத் தெரிந்த எல்லா இடங்களிலும் தடதடவென்று எதையெல்லாமோ உருட்டித் தள்ளிக்கொண்டு, அழுக்கான கரும் பழுப்பு நிறத் தண்ணீர் வெள்ளமாக ஓடியது

வீட்டையும் வெள்ள நீர் சூழ்ந்து உயர்ந்தது!

# அத்தியாயம் -10

“ஐயோ வெள்ளம்!” என்று சட்டென அவளையும் பின்னிழுத்துத் தானும் பின்னடைந்த யுகேந்திரன் கதவை அழுந்தச் சாத்தித் தாளிட்டான்.

ஆனாலும், கதவுக்கடியில்  வெள்ள நீர் கசிந்து உள்ளே வரலாயிற்று.

வீடு உயரத்திலேயே இருந்தாலும், வெள்ள நீரும் பெருகி உயர, கழுவி விட்ட நீர் செல்லும் மடைத் துவாரங்கள், மற்றும் இண்டு இணுக்குகள் மூலமாக, வெள்ளநீர் வீட்டினுள் பெருகலாயிற்று.

அவசரமாக வீட்டின் மற்ற அறைகளுக்கு ஓடிச் சென்று, ஜன்னல், கதவுகளை அழுந்த அடைத்தவாறே,  “சீக்கிரம். இந்த வெள்ளத்தோடு என்னென்ன உள்ளே வருமோ? என்னதான் கழிவுநீர் வழிகளில் சல்லடைகள் பதித்திருந்தாலும் சிறு பூச்சிகள், உள்ளே வந்துவிடக் கூடும். மிக அத்தியாவசியமான பொருட்களை எடுத்துக்கொண்டு, நாம் மாடிக்குப் போய்விடலாம். அரிசி, பருப்பு இப்படித் தேவையானதை நீங்கள் எடுங்கள். இந்த டீவி காஸ் சிலின்டர், அடுப்பு போன்ற பெரிய பொருட்களை, நான் உயரே எடுத்துப் போகிறேன். வெள்ள நீரில் வீணாகக் கூடிய வேறு எதுவும் இருந்தாலும், முடிந்தவரை எடுத்துப் போகலாம்.” என்று வேகமாகக் கூறினான்.

பேசும்போதே, சிலிண்டரை லாக் செய்து, ட்யூபைக் கழற்றி, அவன் சொன்ன ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு, யுகேந்திரன் மாடிப்படி ஏறினான்.

அன்னியன் மாதிரிப் பேசினானே! நம்பும்படியாகக்கூட!

ஆனால், இங்கே மாடி இருப்பது, இவனுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், இப்போது என்ன சொல்லுவான் என்று அவள் யோசித்தாள்.

ஓர் ஓரமாக என்றாலும், மாடிப்படி உள்ளே இருக்கையில் இந்தக் கேள்வியும் அசட்டுத்தனம்தான். ஆனால், அவன் இயல்பாகச் சொன்ன விதம் . . .

“சீக்கிரம். சும்மா நில்லாதீர்கள், மேடம். எந்த நேரமும், இந்தப் பழைய வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு கூட வெள்ளம் உள்ளே வரலாம்.  . ..” என்ற அதட்டலில், மற்ற யோசனைகளை விட்டு, அவளும் செயலில் இறங்கினாள்.

ஆனாலும், அந்த “மேடம்” உறுத்தாமலும் இல்லை.

கணவன் சொன்ன அரிசி, பருப்பு பாத்திரங்களோடு, ஃப்ரிட்ஜில் உள்ள தண்ணீர், தயிர், , காய்கறி போன்றவற்றை எடுத்துவிட்டு, அதன் கதவை மூடும்போது, கரண்டைக் கால் அளவு வெள்ள நீர் உள்ளே வந்துவிட்டது.

“இதற்கு மேல் இறங்கி வராதீர்கள். நான் மெயினை ஆஃப் பண்ணப் போகிறேன். மெழுகுத்திரி இருக்கிறதா? டவர் இல்லாவிட்டாலும், மொபைலை டார்ச் லைட்டாக அவசரத்துக்குப் பயன் படுத்தலாம் “ என்றதோடு மின்சாரத்தை நிறுத்திவிட்டு, யுகேந்திரன் மேலே வந்தான்.

மாடி ஜன்னல் வழியே பார்த்தால், சுற்றிலும் தண்ணீர் தவிர ஒன்றும் தெரியவில்லை. “ஏதோ பெரிய குளம் உடைப்பெடுத்திருக்கும் போலத் தெரிகிறது.” என்றான் அவளது தோளுக்கு மேல் தலையை நீட்டிப் பார்த்த அவன்.

திடுமென காதருகில் குரல் கேட்கவும் தடுமாறி, விலக முயன்றதில் பின்னே நின்ற அவன் மீதே, சுமனசி இடித்துக் கொண்டாள்.

அவன் அவளைப் பிடித்து நிறுத்த, சும்மாவே ஏதேதோ பேசுகிறானே என்று பதட்டத்துடன் விலக முயன்றால், அவளது கால்கள் வலுவிழந்து துவண்டன.

நல்லவேளையாக அவன் அவளை விட்டுவிடாமல் பிடித்திருக்கவும், அவள் கீழே விழுந்துவிடவில்லை.

ஆனால், பற்றிய கைகள் பிடியை விடாமலே இருக்கவும், சுமனசி திகைப்புடன் அவனை நோக்கினாள்.

மீண்டும் அவன் தீச் சுட்டவன் போல விலகினான் .

கணவன் நடந்துகொள்ளும் விதம், சுமனசிக்கு ஒன்றும் புரியவில்லை.

பழைய ஆசை அவனுக்கு இப்போதும் இருப்பதை அவளால் உணர முடிந்தது. ஆனால், பிரிந்து சென்றவளிடம் அதைக் காட்டினால், தன்னைப் பலவீனமானவனாக நினைப்பாள் என்று அஞ்சுகிறானோ? அதனால்தான், அம்னீஷியா தாக்கியிருப்பது போல நடிக்கிறானோ என்று அவளது யோசனை ஓடியது.

யுகேந்திரனின் நடிப்பு எவ்வளவு உண்மை போலவே இருக்கும் என்று, அவளுககுத் தெரியும்.

ஆனால், அதே சமயம் உண்மையிலேயே மறதி நோய் தாக்கியிருந்தால்? அவனது காயங்கள் எதுவும் பொய்யில்லையே! சுத்தம் செய்து கட்டுப் போட்டவள் அவளாயிற்றே.

அந்த வலியையும் பொறுத்துக்கொண்டு, கனமான பொருட்களைப் படியில் தூக்கி

வந்தானே! மனம் உருகுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

“மாடியில் படுக்கும் அறை ஒன்றுதான் இருக்கிறது. இன்றைய நிலையில், என்னால், நெளிந்து மடங்கி சோஃபாவில் படுக்க முடியாது.. அதனால் சாரி, நீங்கள் . .உங்கள் வீட்டிலேயே உங்கள் வசதியை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. . . .”

குரலில் தெரிந்தது, உண்மையான வருத்தம்தான்.

“பரவாயில்லை. எனக்குப் பிரச்சினை கிடையாது.” என்றாள் அவள்.

ஒரு தலையணை போர்வையைக் கொணர்ந்து வைத்துவிட்டு, “குட்நைட். நான் படுக்கப் போனதும், எதற்கும் கதவை வெளியே தாளிட்டுவிடுங்கள். குகுட்நைட்.” என்று யுகேந்திரன், உட்புறம் கதவை மூடிக் கொண்டான்.

அழுவதா? சிரிப்பதா?

நீ நினைப்பது தவறு. நமக்கிடையே பூட்டிய கதவுக்கே தேவையில்லை. என்ற உண்மையைமட்டும் இவனிடம் சொன்னால் . .. அல்லது சொல்லக் கூடாதோ?

முந்திய நாள் காலையில், அவள் கையெழுத்திட்டு அனுப்பிய பத்திரம்? அதன் பின்னேயும், இதெல்லாம் என்ன மடத்தனமான எண்ணங்கள்? முழு மூடத்தனம்!

சட்டென்று இன்னும் ஒன்று நினைவு வந்தது.

அந்தப் படுக்கை அறையில், மகனின் திருமணப் படம் ஒன்றை சுபத்ரா ஆன்ட்டி வைத்திருந்தாள். அந்த அறைக்குள் செல்ல நேர்ந்தால், சுமனசி அந்தப் பக்கமே பார்க்க மாட்டாள்.

இந்த இரவில், யுகேந்திரன் அதைக் கவனித்திருக்க இயலாது. ஆனால், அந்த அறையில், நாளைக் காலை வெளிச்சத்தில் அவன் அந்தப் படத்தைப் பார்க்கும்போது என்ன நடக்கும்?

மறுநாள் அவன் விழித்து வரும்போது, சுமனசி காஃபி போட்டுக் கொண்டிருந்தாள். “கதவை வெளியே பூட்டவோ, என்னைக்

கட்டுப்படுத்திக் கொள்ளவோ தேவையே இல்லை என்று தெரிகிறதே!" என்றவன், பின்புறமிருந்து அவளைத் தழுவி, கழுத்து வளைவில் முகம் புதைத்து முத்தமிட்டான்.

அவர்களிடையே என்னென்னவோ நடந்திருப்பதைச் சொல்ல வேண்டிய நேரம். அவனது தொடுகையை விலக்க வேண்டிய தருணம் ஆனால் பேச்சு, செயல் இரண்டுமே கைவிட்டுவிட, அவனது அணைப்பில், அவள் நெகிழ்ந்து நின்றாள்.

அவளை அழுந்த முத்தமிட்டுவிட்டு, "என்ன ஆயிற்று, சுமனசி. நீ தனியாக, நான் தனியாக இங்கே எப்படி வந்தோம். " நெற்றியைத் தேய்த்துவிட்டு, "அத்தோடு, நம் இருவருக்கும் இடையே ரொம்பவும் பயங்கரமாக  ஏதோ பிரச்சினை ஒன்று இருப்பது போலத் தோன்றுகிறதே. ஒருவேளை, நாம் இருவரும் தனித்தனியே வந்ததால் அப்படித் தோன்றுகிறதோ? கரெக்ட்! அதுதான் காரணம்! இல்லையா? நீ பிறந்த வீட்டுக்கு வந்திருப்பாய். நான் நான் . . நானும் ஏதோ வேலையாக . .அல்லது, அம்மா எப்படி இருக்கிறார்களோ என்ற கவலையில் தனித்தனியே கிளம்பி வந்திருப்போம். சரிதானே?"

ஒரு காஃபி கப்பை அவனிடம் கொடுத்துவிட்டு, சுமனசி மற்றதை எடுத்துக் கொண்டாள்.

உண்மையைச் சொல்வதற்கான அடுத்த வாய்ப்பு இது!

ஆனால், அவனது கற்பனை சரியில்லை என்று அவளால் சொல்ல முடியவில்லை.  மடத்தனமாக உன்னுடன் சண்டை போட்டுவிட்டு, உன்னை விட்டுப் பிரிந்து வாழ்கிறேன். அப்படி வாழும் இடத்திலிருந்து வந்தேன் என்று சொல்ல அவளால் முடியவே இல்லை!

கூடவே, ஒரு திகைப்பு! அவன் தப்பு செய்ததால், அவனைப் பிரிந்து வந்ததாக, ரைட் ராயலாகச் சொல்வதென்ன, அப்படி நினைக்கக் கூட, இப்போது அவளால் முடியவில்லையே!

அப்படியானால், அவள் எண்ணியதுதான் தப்பா? அந்த நாற்பது வயது நடிகை அலகா சொன்னது போல, அவளைத்தானே மணந்திருக்கிறான்! வாழ்வை அவளதாக்கிக் கொள்வது, அவளது பொறுப்புத்தானோ?

அன்று அவன் சொன்ன விளக்கம் கூட, மெய்யாகவே இருக்கலாம்!

அவனது நீண்ட விரல்கள், அவளை நோக்கி வரவும், திகைப்புடன் பார்த்தாள்.

விரல்களால் அவளது புருவங்களை மெல்ல வருடினான் அவன்.

“இங்கே சுளிப்பானேன்? இவனுக்கு இப்படி நினைவு மறந்திருக்கிறதே என்று சஞ்சலமாக இருக்கிறதா? கவலைப்படாதே. முக்கியமான நீயும் அம்மாவும் தெளிவாகி விட்டீர்கள். வேறென்ன வேண்டும்? மற்றது, தானாக வரும்! அதுவரை, இந்த வீட்டில், தன்னந்தனியே நாம் மட்டும்! தேனிலவில் கூடக் கிடைக்காத தனிமை! முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!” என்று அவளை அருகே இழுத்தான்.

அவளும் விலகிக் கொள்ளவில்லை.

வாழும் அந்த வினாடி தவிர, வேறு எதையும் நினைக்கக் கூட, சுமனசிக்கு மனம் வரவில்லை.

உண்மை தெரியும்போது தெரியட்டும். அதன் பின்னே நடப்பது நடக்கட்டும்! அனாவசியமாக, அதை இப்போதே தருவித்துக் கொள்வானேன்?

தொண்டை வறண்டு, தண்ணீர்த் தாகத்தில் சுமனசி கண் விழித்தாள்.

மேலே கனமாகக் கிடந்த கை, பரம சுகமாக இருந்தது. மெதுவாக ஒதுக்கிவிட்டுப் போய்த் தண்ணீரைக் குடிக்கும்போதே, மழைச் சத்தம்கேளாதது அதிசயமாக இருந்தது.

ஓடிப்போய் ஜன்னல்வழியே பார்த்தால், மெய்யாகவே, மழை நின்றிருந்தது. தண்ணீரும் வெகுவாக வடிந்திருந்தது. சாலையின் வரி வடிவம் லேசாகத் தெரிந்தது.

பார்த்துக்கொண்டு நிற்கும்போதே, அவனும் விழித்து அவளருகில் வந்து நின்றான்.

வெளியே வெறித்தவன் முகத்தில் புருவம் சுளித்திருந்தது.

“என்னப்பா? “ என்று, கலைந்து கிடந்த அவனது சிகையை ஒதுக்கி சுமனசி கேட்டாள்.

“ம்ம்ம் . . .ஏதோ . . . ஒரு . பெரிய பிரச்சினை நமக்குள் இருப்பது போல ஒரு பிரமை! அது . . கனவாக இருக்குமோ, என்னவோ? விழித்துப் பார்த்தால் நீ அருகில் இல்லையா? மெய்யாகவே அப்படித்தான், அதனால் நீ போய்விட்டாய் என்று பயந்து போனேன். என்ன மாதிரிப் பயம் தெரியுமா? வா. இங்கே என் கைகளுக்குள் வா. அப்போதுதான் என் மனது அமைதியாகும்.” என்று அவளை அணைத்து அழைத்துச் சென்றான் யுகேந்திரன்.

அடி பட்டிருந்ததால் இருக்குமோ? அவளை அணைத்தபடியே,

அவன் சீக்கிரமே தூங்கிவிட்டான்.

இருவரும் பின்னிக் கிடக்கையில், அவன் ஏதோ முனகுவது, சுமனசிக்குக் கேட்டது. என்னவாக இருக்கும்? தூக்கத்தில் பேசுகிறானா?

கண் விழித்த பிறகு அவனைக் கேலி செய்ய என்றுதான், அவனது முனகலை சுமனசி கவனித்தது.

ஆனால், அவன் சொன்ன வார்த்தைகள், அவள் தலையில் நெருப்பை வாரிக் கொட்டின!

அவன் முனகிய வார்த்தைகள், “வந்துவிடுவேன், ரேணு”

ரேணு! அவனது குறும் படங்களுக்குப் பின்பலமாக இருக்கும் பணக்காரருடைய மகள். வீட்டுக்கே வந்து உரிமையோடு உறவாடுகிறவள். யுகேந்திரனிடம் அவளுக்குத்தான் முதல் உரிமை என்று, எப்போதுமே காட்டிக் கொள்கிறவள்!

வரவேற்பு விருந்தின்போதே, அவனோடு இழைந்த மற்ற பெண்களில் சிலர் கூட, அதே போலப் பேசத்தானே செய்தார்கள்! என்னவோ அவனைப் பிடிக்கும் பந்தயத்தில், அந்த ரேணு மூக்கை நீட்டிக் கிட்டத்தட்ட ஜெயித்த மாதிரியும், அயனான அந்த வினாடியில் சுமனசி எங்கிருந்தோ குறுக்கே வந்து கோப்பையைத் தட்டிச் சென்றுவிட்டது போலவும், எத்தனை பேச்சு! எல்லாம் ஒதுக்கி அவனோடு வாழ்ந்தாளே!

அப்புறம், பிரிவுக்குக் காரணமான அந்தக் கடைசி நாள்!

அதையும் கூட, அவனது விளக்கம் மெய்யாக இருக்கலாம் என்று எண்ணினாளே! எண்ணித்தானே . . . ஒருவேளை, கணவனுக்காக ஏங்கியிருந்த மேனி, அப்படி எண்ணத் தூண்டியதோ என்று யோசனை ஓடும்போதே, அவளுக்குக் கூசியது.

அப்படியில்லை என்று உறுதியாக மறுக்க முடியாமல் உண்மைநிலை அவள் முகத்தில் அறைந்தது.

தூக்கத்தில்கூட இன்னொரு பெண்ணின் பெயரைச் சொல்கிறவன், அவளைத்தானே அதிகம் விரும்பியிருப்பான்? அப்படி இல்லை என்றாலும், இன்னொரு பெண்ணின் பெயரைச் சொல்வதானால், அவளையும் அதுகளில் ஒன்றாக நினைப்பதாகத்தானே அர்த்தம்.

எப்படிப் பார்த்தாலும், அவளுக்கு அவமானம்தானே?

செய்கிற தப்புகளை எல்லாம் செய்துவிட்டு நிம்மதியாக

உறங்குகிற கணவனைப் பார்க்கையில் கோபம் வந்தது. ஆத்திரத்துடன் எழுந்து விலகிப் போனாள்.

இப்படியே காரை எடுத்துக்கொண்டு, இங்கிருந்து போய்விட்டால் என்ன என்று கூட, சுமனசி ஒரு தரம் யோசித்தாள்.

ஆனால், அவளால் முடியாது. உண்ண உணவின்றி, அவனைப் பட்டினி கிடக்க விட்டுவிட்டு, அவளால் அப்படிப் போக முடியாது!

அவன் எப்படியோ? அவளுக்குக் கொடூர புத்தி கிடையாது!

இருக்கிற பொருட்களைக் கொண்டு, உப்புமா போல ஒன்றைத் தயாரித்துக்கொண்டு இருந்தபோது, அவன் வெளியே வந்தான். அவனுமே மூடு சரியில்லாதது போல பரபரப்புற்றுத் தெரிந்தான்.

என்ன வேண்டும் துரையே என்று அவனது தோளைத் தடவி ஆறுதல் படுத்திக் கேட்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான் போல! எப்படியோ போய்த் தொலையட்டும்! அவளுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை!

தலையில் அடி பட்ட குழப்பம்! அவனுக்கு இரண்டு வேளை சோறு பொங்கிப் போட்டதோடு, அவளது மனிதாபிமானக் கடமை முடிந்தது. காரை எடுக்கும்படியாகச் சாலை இருந்தால் உடனே கிளம்பி விட வேண்டியதுதான்.

இங்கே இருக்க, இருக்க, இவனைப் பார்க்கப் பார்க்க, மூளை மழுங்கிப் போகும்.

இப்படி சுமனசி திட்டமிட்டுக் கொண்டிருக்க, "சே!" என்று, யுகேந்திரன் நெற்றியில் அறைந்து கொண்டான்.

அவள் திரும்பிப் பார்க்கவும், "ஏதோ பெரிய வேலை, சுமனசி ! ரொம்பப் பெரிய வேலை! காலம் தவறாமல் கட்டாயமாகச் செய்ய வேண்டியது! அதைச் செய்யாமல், இங்கே உட்கார்ந்து வெட்டியாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறேன். . ." என்று எரிச்சலுடன் கூறினான்.

எரிச்சல், அவன் மீதுதான். ஆனால், வெட்டிப் பொழுதா, போக்கினான்?

அவளோடு இவ்வளவு ஆசைளாகப் பழகியது, அவனுக்கு வெட்டியாகப் பொழுது போக்குவதா?

அப்படித்தான் இருக்கும். இங்கிருந்து கிளம்ப முடியாத நிலையில், உணவு வேண்டும் கூடவே, போனசாக வேறு சுகமும் கிடைத்தால்

விடுவானேன்?

வேறும் “டைம்பாஸ்”. அதற்கு மேல், அதற்கு மதிப்பில்லை!

திரும்பி இருந்து வேலை செய்த அவளது முகபாவம் தெரியாமல், யுகேந்திரன் மறுபடியும் பேசினான். “ரொம்பவும் முக்கியமான வேலை, சுமி. அதை, நான் மட்டும்தான் செய்ய முடியும். கட்டாயமாகச் செய்வதாக வாக்குக் கொடுத்துவிட்டு வந்தேன். . . அதுவரை புரிகிறது. ஆனால் யாரிடம்? எப்படி? எங்கே போவது? ஒன்றும் புரியவில்லையே! தாமதிக்கும் ஒவ்வொரு நிமிஷமும், பெரிய தப்பாகக் கூடும். என்று நன்றாகத் தெரிகிறது. ஆனால், யாருக்கு என்று தெரியவில்லையே! இது என்ன மறதி? எனக்கு ஏன் நினைவு வரவில்லை? ஒன்றுமே தெரியாமல், ரொம்பத் தவிப்பாக இருக்கிறதே!”

“எனக்குத் தெரியும்.” என்றாள் சுமனசி, அடுப்பை வெறித்தபடி.

அதுதான் தூக்கத்திலேயே புலம்பினானே! உடனே வராவிட்டால் செத்து விடுவேன் என்று மிரட்டியிருப்பாள்!

“எஎன்ன? உனக்குத் தெரியுமா? யார்? யாருக்காக நான் போக வேண்டும்?” என்று யுகேந்திரன் பரபரத்தான்.

“அந்தப் பெண் ரேணு! உங்கள் ஃபைனான்சியருடைய மகள்!”

உடலை விட்டு உயிர் பிரியும் வேளை வந்துவிட்ட போதும், கடைசி வினாடி வரை, அது பிழைத்துக்கொள்ளவே வெகுவாக முயற்சிக்குமாம்!

அதுபோலவே, சந்தேகத்துக்கே இடமின்றி, யுகேந்திரனின் வாழ்வில் அந்தப் ரேணுவுக்குரிய இடம் என்ன என்று தெளிவாகத் தெரிந்த பிறகும், “சே! நமக்கிடையே அவள் எங்கிருந்து முளைத்தாள் “ என்பது போன்ற பதிலையே, கணவனிடமிருந்து வெகுவாக எதிர்பார்த்தாள், அந்த அசட்டு மனைவி.

ஆனால், மண்ணைத் தின்ற கண்ணன் வாயில், யசோதைக்கு மூன்று உலகங்களும் தெரிந்து பிரமிக்க வைத்ததாகக் கூறுவார்கள்.

அதே பிரமிப்புடன், “ரேணு..!” என்று யுகேந்திரன் விழிகள் விரிய பார்த்தான். வட்டமான சாசராகக் கண்கள் அவளையே வெறித்தாலும், அவனது பார்வையில் தான் இல்லை என்பது, அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

அது பற்றி ஆராய்வதற்கு, அவன் அவகாசமும் கொடுக்கவில்லை!

“ஐயோ, ரேணு!” என்று, காயம் பட்ட நெற்றியில் ஒருவன்

இப்படியா அடித்துக் கொள்வான்?

“ என்ன மாதிரிப் பைத்தியக்காரன், நான்! நேற்றே போய், முழு நேரமும் என்  பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுத்திருக்க வேண்டியவன்! இங்கே . .சேசே! என்ன முட்டாள் நான். ஐயோ, மணி என்ன? நேற்று மாலையே நான் டெல்லியில் இருந்திருக்க வேண்டுமே! நான் இங்கே, ஜாலி செய்து, நேரத்தை வீணாக்கிக்கொண்டு . . .சேசேசே! எனக்கு என்னை நினைக்கவே அருவருப்பாக இருக்கிறதே. இப்படியா ஒரு மடையனாக இருப்பேன்?! “ என்று தன்னையே கசந்துகோண்டான்!

அவள் திகைத்து நோக்கும்போதே, அவன் அவசரமாகத் திட்டமிட்டான்.

“சுமனசி, உடனே டெல்லி சென்றாக வேண்டுமே. மதுரையில் விமானத்தில் டிக்கட் எடுத்து . . .கிடைக்குமா? இப்போது . . . மதுரைக்கு . .உன் காரை எடுத்துப் போகிறேன்.” என்று சுற்றுமுற்றும் எதையோ தேடினான்.

ஓர் ஆணியில் தொங்கிய படத்தின் மேல், அதே ஆணியில் அவளது கைப்பையும் கிடந்ததைப் பார்த்தான்.

பாய்ந்து போய், அவளிடம் கேளாமலே கைப்பையைத் திறந்து, மறுபடியும் அவளிடம் கேளாமலே பைக்குள் இருந்த கார்ச்சாவியை எடுத்துக்கொண்டு, வேகமாகப் படியிறங்கி, வெளியே ஓடினான்.

மேலும் சில வினாடிகளில், அவளது காரைக் கிளப்பும் ஓசை கேட்டது.

வீட்டைப் போலவே, கார் ஷெட்டும் உயரத்திலேயே இருந்தது. அதனால், கார் இயந்திரத்துக்குள் வெள்ள நீர் புகவில்லை போலும் . ..

தன் போக்கில் எண்ணமிட்டபோதும், சுமனசியின் நெஞ்சு வெடித்துக் கொண்டிருந்தது.

யுகேந்திரனின் வாழ்வில், அந்த ரேணுவுக்கு உள்ள இடம் அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டதல்லவா?

கணவனின் துரோகம் ஒரு பக்கம் என்றால், அவனது பிரிவும் ஒரு பக்கமாக, சுமனசியை அரை உயிராக்கிவிட்டது.

கணவனோடு இருக்கும்போது, எப்போதுமே சுமனசி ஒரு மகாராணி போல உணர்வாள். அவள் அருகில் இல்லாதபோதுதான் குழப்பமெல்லாம்.

ஆனால், அவளுடன் சல்லாபித்ததையே, வெட்டியாகப்

பொழுதைக் கழித்ததாகச் சொல்லிவிட்டானே! அத்தோடு, அருவருப்பாக உணர்வதாகவும் கூறியதை அவளால் தாங்கவே முடியவில்லை.

சொன்னது மட்டுமின்றி, அவளைப் பிரிந்து சென்றும் விட்டான்! பழம் செருப்பாகக் கூட அல்ல, அதில் ஒட்டிய தூசியாய் உதறிவிட்டுப் போய்விட்டான்.

அதுவும், இந்த இடத்தில் தன்னந்தனியாக விட்டுவிட்டு! அவனுடைய தாயாருக்காக அஞ்சினானே, அந்தத் திருட்டு கொலை எல்லாம், அவளுக்கு மட்டும் நேராதாமா?

நேரட்டும். இன்னும் உயிரோடு இருந்துதான் என்ன சாதிக்கப் போகிறாள்? அல்லது, யாருக்குத்தான், அவள் தேவை?

வாயில் கதவு, அழுந்தச் சாத்தினாலே பூட்டிக் கொள்வதுதான். ஆனால், அப்படிச் சாத்தியிருக்கிறானா, இல்லையா என்று கீழே போய்ப் பார்க்கக் கூட அவளுக்கு சக்தி இல்லாதது போல, உடல் ஓய்ந்துவிட்டிருந்தது. மனமும் இல்லை.

என்னவேனும் நடக்கட்டும் என்று அப்படியே தரையில் படுத்துவிட்டாள் சுமனசி.

# அத்தியாயம் -11

மேலும் ஒரு நாளில் வெள்ளம் நன்கு வடிந்துவிட, சுபத்ரா திரும்பி வந்து பார்க்கும் வரையும் அப்படியேதான் கிடந்தாள்.

குளம் உடைப்பெடுத்ததால், வீட்டுக்குள்ளும் தண்ணீர் புகுந்திருக்கும் என்று, சுத்தம் செய்ய ஆட்களோடு தயாராகவே வந்த சுபத்ராவுக்குக் கீழ்த்தளம் இருந்த மாற்றமும், அடுத்து மாடியில் சுமனசி இருந்த நிலையும் பேதிர்ச்சியாய் இருந்தது.

அவளை ஆசுவாசப்படுத்தி, எழுப்பி, உப்பும் சர்க்கரையும் போட்ட எலுமிச்சைச் சாறு குடிக்க வைத்து, உடம்பில் கொஞ்சம் தென்பு வரச் செய்தாள்.

சற்று நேரம் சுமனசி ஒரே அழுகையாக அழுதாள்.

அவளை ஆறுதல் படுத்தி, அவள் எப்படி வந்தாள், என்ன நடந்தது என்று கேட்டு, ஒருவாறு விவரம் அறிந்த பெரியவள், சற்று நேரம் பேசாமல் இருந்தாள்.

மகன் அவளைத் தேடி வந்த நேரம் சந்திக்க முடியாமல் போய் விட்டதே என்று அவளுக்கு மிகவும் வருத்தம்தான். ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலே, மருமகளிடம் பேசினாள்.

“இல்லை, சுமிம்மா. நீ நினைக்கிற அளவு, யுகேன் அயோக்கியன் இல்லை. அந்தப் பெண்களைப் பற்றி . . .எந்த அளவுக்கும் இறங்க, எல்லா இனத்திலுமே இருக்கிறார்கள். அவர்களில் யாரையாவதேனும் மணந்துகொள் என்று, அவனிடம் நேரேயே கேட்டிருக்கிறேன். அடுத்த ஐம்பது ஆண்டுகாலம், பார்த்து சகிக்கிற மூஞ்சி யாருக்காவது இருக்கிறதா என்பான் . . .ஒப்பனையை வழித்து எடுத்துவிட்டால், அரைக் கிலோ எடை குறைந்து போவார்கள் என்று கிண்டலடிப்பான்.

“ஆனால் அவனுக்கு, உன்னிடம் அன்பு இருக்கிறது. உன் திருமணத்தை நான் ரொம்ப ஆதரிக்கவில்லை, நினைவிருக்கிறதா? ஆனால், மனைவி என்றால் நீ மட்டும்தான் என்று அப்போதே சொன்னான். நீயும் உறுதியாக இருந்தாய். அவ்வளவு அன்பு இருந்தால் எல்லாம் நன்றாகிவிடும் என்று எண்ணினேன்.

“பார், மதுரை ஃப்ளாட்டை உனக்குக் கொடுக்கச் சொன்னது பையன்தான். நீ மாறி வருவாய் என்பதிலும், அவனுக்கு நிச்சயம்தான். அஅது எப்படியோ இருக்கட்டும். இங்கே  சாலை எல்லாம் ரிப்பேர். ஒரு வாரம் இங்கே இருந்து உடம்பைக் கொஞ்சமேனும் தேற்றிக் கொண்டு,

அப்புறமாகப் போகலாம். டவர் சரியானதும் அலுவலகத்துக்குச் சொல்லிக் கொள்ளலாம்." என்று, ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தாள்.

சுபத்ராவும் தாயம்மாவுமாகச் சேர்ந்து கவனித்ததில், அந்த ஒரே நாளில், சுமனசியின் எடையில் ஒரு கிலோ ஏறாவிட்டால் அதிசயம்.

உள்ளிருந்த வலி சற்றும் குறையாவிட்டாலும், தனக்கு யாருமில்லை என்ற உணர்வு மாறி, சுமனசி இயல்புக்குத் திரும்பினாள்.

கீழ்த் தளத்தில், வெள்ள நீர்க் கசடு போகத் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்து முடிப்பதற்கு, ஒரு நாள் ஆயிற்று. அதன் பிறகுதான், சின்னவளைக் கீழே இறங்கவே விட்டார்கள்.

எல்லோருமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். வெள்ளத்தினால் அனுபவித்த துன்பத்தைக் காட்டிலும், குளத்து நீர் உடைப்பெடுத்து வீணாகப் போனதுதான், அனைவருக்குமே கவலையாக இருந்தது.

பேசிக் கொண்டிருக்கும்போதே, டெலிஃபோன் மணி அடிக்கவும், எல்லோருமே ஆச்சரியமாகப் பார்த்தார்கள். பல நாட்களாக வேலை செய்யாத தொலைத் தொடர்பு!

சாலைகளைப் பழுது பார்க்கும்போது, இதையும் சரிப்படுத்தி இருக்கிறார்கள்!

அது குறித்துச் சொல்லிச் சிரித்தவாறே ரிசீவரை வாங்கிப் பேசிய சுபத்ராவின் முகம் மாறிப் போயிற்று.

எல்லோரும் கவலையோடு பார்க்க, பேசி முடித்துவிட்டுப் பெரியவள் விவரம் சொன்னாள்

டெலிஃபோனில் பேசியவர், திரிபாதி எனவும், சுமனசியின் கண்களில் கூர்மை கூடிற்று.

அந்த ரேணுவுடைய தந்தை! யுகேந்திரனின் படங்களுக்கு நிதி அளிப்பவர்! யுகேந்திரனுக்குத் திருமணம் ஆன பிறகும், மகள் அவனோடு ஒட்டிப் பழகுவதைக் கண்டுகொள்ளாமல் இருப்பவர்! இப்போதென்ன, விவாகரத்து வாங்கித் தரச் சொல்லுகிறாரா?

ஆனால், சுபத்ராவின் கவலை பாய்ந்த முகத்தின் காரணம், முற்றிலும் வேறாக இருந்தது.

அவரது பேசியதன் சுருக்கம் இதுதான்.

அவருடைய மகளைப் பணத்துக்காக யாரோ கடத்திவிட்டார்கள். கடத்தியவர்கள் ரொம்ப மோசமானவர்கள். இது போன்ற ஆபத்தான்

வேலைகளில் ஈடுபட்டு வெற்றியோடு திரும்புகிறவன் யுகேந்திரன். இப்போதும் அதே போல ரேணுவை மீட்கப் போனான். போய் இரண்டு நாட்களாக ஒரு தகவலும் இல்லை.

“உங்களையும், மனைவியையும் பார்த்துவிட்டுத் திரும்புவதில், எப்படியோ ஒரு நாள் தாமதம்ஆகிவிட்டது. அத் பற்றி . . . அது வேறு. இன்று காலைக்குள், அவனோ, அவனிடம் இருந்து ஏதேனும் செய்தியோ வரவில்லை என்றால், உங்களிடம் தரச் சொல்லி ஒரு கவர் தந்துவிட்டுப் போனான். அதில் அவனது உயிலும் . . .” எனும்போதே, அவரது குரல் உடைந்து போயிற்று.

யுகேந்திரனுக்கே ஆபத்து எனவும், சுமனசி ரேணுவை மறந்தாள்.

“ஆன்ட்டி, நான் உடனே டெல்லிக்குப் போக வேண்டும். யுகனைப் பற்றி நேரிலேயே கேட்க வேண்டும். ஐயோ! என்னால் இங்கே ஒரு கணம் கூட இருக்க முடியாது. ரோடு எப்படி இருந்தாலும் பரவாயில்லை. எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கிறேன். உங்கள் வழக்கமாக டாக்சியை வரச் சொல்லுங்கள். ஐயோ, நான் போக வேண்டுமே! என் யுகனைப் பார்க்க வேண்டுமே . . . “ என்று பதறத் தொடங்கினாள்.

குரலோடு, கைகள் வெளிப்படையாகவே உதறின.

பெற்றவள் அல்லவா? சுபத்ராவுக்கும் கிட்டத்தட்ட அதே நிலைதான். ஆனால், வயதின் அனுபவத்தால், அமைதியை இழுத்துப் பிடித்துத் திட்டமிட முடிந்தது.

பக்கத்து டவுனில் இருந்து, அவள் வழக்கமாகப் பயன்படுத்தும் டாக்சியை வரவழைக்க ஏற்பாடு செய்தாள்.

“மதுரை உன் இடம். அங்கே நம் இருவருக்கும் விமான டிக்கட்டுக்கு ஏற்பாடு செய்.” என்று மருமளிடம் ஒரு பொறுப்பைக் கொடுத்து, அவளை ஓரளவு இயல்புக்குத் திரும்பச் செய்தாள்.

சுமனசி அவ்வப்போது வரும்போது அங்கே விட்டுப் போயிருந்த அவளது சில உடைகளோடு தனக்கும் துணிமணி எடுத்து வைக்குமாறு தாயம்மாவைப் பணித்தாள்.

திரிபாதியை அழைத்து, தாங்கள் இருவரும் வருவது பற்றித் தகவல் கொடுத்தாள்.

“கட்டாயம் வாங்கம்மா. என்னாலும், தனியாக இந்தச் சுமையைத் தாங்க முடியவில்லை!” என்று, தன் துன்பத்தில் பங்கேற்க அழைத்தார் அவர்.

டெல்லியில் இருவரையும் வரவேற்றுத் தன் வீட்டுக்கே அழைத்துப் போனார். “விவரங்கள் அங்கேதான் வரும்.” என்று காரணம் சொன்னார்.

செல்லும்போதே, யுகேந்திரனைப் பெற்றவள் ஒரு கேள்வி கேட்டாள். “யுகன் செய்தி சார்ந்த படம் எடுக்கிறவன்தானே? இந்தக் கடத்தலுக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு?”

“எஎன்ன தொடர்பு என்றால்? யூகி உங்களிடம் கூடச் சொன்னதில்லையா? பயந்து, தடுப்பீர்கள் என்று நினைத்திருக்கலாம். அவனது படங்களின் பின் புலம் வன்முறை. எல்லாம், கோஷ்டிச் சண்டைகள், போர்கள், கடத்தல், கொலைகள் . . இந்த மாதிரி விஷயங்களை நேரில் சென்று ஆராய்ந்து, அதை உடனே படமாகவும் எடுத்துவிடுவான். எல்லா சானல்களிலும், அவனது படங்களுக்குக் கிராக்கி அதிகம். .”

ஒரு தரம், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைக் களமாக வைத்துப் படம் எடுக்கும்படி சித்தி கூறியதற்கு, யுகேந்திரன் ஆத்திரப்பட்டது, சுமனசிக்கு நினைவு வந்தது. அவன் கோபப்பட்டதன் காரணம் இப்போது புரிந்தது. ஆனால், ஏன் இந்த மாதிரித் தொழிலைத் தேர்ந்தெடுத்தான்?

“யூகிக்கு சீக்கிரமாக நிறையப் பணம் தேவைப் பட்டது. அதனால், துணிந்து இதில் ஈடுபட்டான். செயலுக்கு அவனும், பணத்துக்கு நானும் பொறுப்பு. லாபம் நிறையவே வந்தது!”

அன்னை பெருமூச்சு விட்டாள். “பணம் தேவைப்பட்டதுதான். ஆனால், யுகன் செய்தது, இவ்வளவு ஆபத்தானது என்று தெரிந்திருந்தால், வேண்டாம் என்று தடுத்திருப்பனே!” என்றாள் வருத்தத்துடன்.

“அதனால்தான் சொல்லவில்லை போல!” என்றார் திரிபாதி. “ஆனால், வெகு கணக்காகப் போய் வேலையை முடித்துவிட்டு வந்துவிடுவான். எல்லாம் திட்டமிட்ட பிறகு, ஒரே நாளில் போய், அம்மாவையும் மனைவியையும் பார்த்துவிட்டு வருவதாக . . .அதில் அந்த ஒருநாள் தாமதம் பிரச்சினை ஆகிவிட்டது. போலீசிடம் போவதற்காக இழுத்தடிப்பதாக, கடத்தல்காரர்கள் நினைத்துவிட்டார்கள். என்னென்னவோ மிரட்டினார்கள். உடனேயே நான் பணத்தையே அனுப்பிவிட்டபோதும், அவர்கள் என்னை நம்பவில்லை! அத்தோடு, சொன்ன ஆள் மாற்றி, வேறு ஆளிடம் அனுப்பியது வேறு! எல்லமே அவர்களுக்குத் தப்புத் தப்பாகத்

தோன்றிவிட்டது. “

அவர் சொன்னதோடு, இன்னும் சிலதும் சுமனசிக்குப் புரிந்தது. யுகேந்திரனின் வேகம் . .தீவிரம்! காலம் பொன்னானது என்பானே! எதையுமே கணக்காகத் திட்டமிட்டுச் செய்கிறவன்!

அவன், இடைப்பட்ட ஒரு நாளில், அங்கே ஏன் வந்தான்?

அவள் அனுப்பிய விவாகரத்து நொட்டீஸ் அவன் கைக்குக் கிடைத்திருக்கும்., தாயை அழைத்துக்கொண்டு, மனைவியிடம் பேசி, மணவிலக்கு நடவடிக்கையைக் கைவிடச் செய்வதற்காக, ஓடி வந்திருக்கிறான்.

வந்த இடத்தில் அடி பட்டு, நினைவு மறந்து . . .ஐயோ! அதனால் அவனுக்கு ஏதேனும் ஆகிவிடுமா?

உயிலை அனுப்புவது என்றால், தாமதத்தின் காரணமாக, அவன் ஆபத்தை எதிர்பார்த்திருக்கிறான் என்றுதானே அர்த்தம்?

“ரேணு” என்றதும் அவன் துடித்தோடி வந்ததன் காரணம் இப்போது வேறாகத் தெரிந்தது!

எல்லாம் தன்னால் நேர்ந்ததோ என்று சுமனசியின் நெஞ்சு துடித்தது.

வீட்டுமுன் கார் நின்றது.

அந்த வீடு, சுமனசி அறிந்ததே. அந்த இரவில் . . அதுதானே, அவளுக்குச் கடைசிச் சான்றாக அமைந்தது.

ஏன் அப்படியொரு சந்தேகம் வந்தது?

“அலுவல் அறையில் இருப்போம். உடனே தெரியும்.” என்று கூட்டிப் போனார் திரிபாதி.

ஏழெட்டு இருக்கைகளுடன் அந்தப் பெரிய அறையைப் பார்த்ததும், அவளுக்கு இன்னும் வலித்தது.

அவனது விளக்கத்தை ஒத்துக்கொள்ளவே மறுததுவிட்டாளே! அதெல்லாம் தப்பு என்று, இனி அவனிடம் எப்படிச் சொல்வது?

சொல்ல முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில், அவளுக்கு மயக்கமே வரும் போலிருந்தது.

ஆனால், “என் மக்கள் இரண்டு பேரையும் இழந்துவிட்டேனோ என்று பயமாக இருக்கிறதே.” என்று கலங்கும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், திரிபாதிதான் அவரும் ஆற்ற மாட்டாமல் புலம்பிக்

கொண்டிருந்தார்.

மக்கள் இரண்டு பேருமா?

“நான் பணத்தைக் கொடுத்தும், இரண்டு பேரும், இன்னும் வரவில்லையே!”

சொல்வதற்கு ஆள் இல்லாமல் அடக்கி வைத்திருந்தது., இப்போது ஒத்த வேதனை நிலையில் இருந்தவர்களைக் கண்டதும், பெரியவர் பொங்கிப் பொருமினார்.

“என் ரேணுக்குட்டி, எனக்குக் காலம் கடந்து பிறந்த ஒரே பெண். வாடகைத்தாய் வைத்துக் கொள்ளலாம் என்றால் மனைவி கேட்கவில்லை. அவளே பெற வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அந்த ஆசை, அவளது உயிரையே பலி கொண்டுவிட்டது.2 ரேணுவுக்குத் தாய் இல்லை. வெகுளித்தனம் உண்டு. இவ்வளவு பணத்துக்கு ஒரே வாரிசு எனும்போது, எத்தனை வகை ஆபத்துகள் வரக் கூடும்?

“அத்தனை பேரிலும், யூகியோடு அவள் இருக்கும்போது மட்டுமே, நான் கவலையற்று  இருப்பேன்!  அவள் கொஞ்சம் அதிகமாகப் போனாலும் பொறுத்துப் போப்பா என்பேன்!

“கடைசியில், இப்போது இரண்டு பேரையும் சேர்த்துப் பறிகொடுத்துவிட்டேன் போலிருக்கிறதே.” என்று புலம்பினார் திரிபாதி.

பாவமாகத்தான் இருந்தது. கூடவே, சுமனசிக்குக் குன்றலாகவும் இருந்தது.

பெண்ணைப் பெற்ற தகப்பனுக்கு இருந்த நம்பிக்கை, தாலி கட்டிய மனைவிக்கு இல்லாமல் போயிற்றே!

மாமியாரைத் திரும்பிப் பார்த்தாள். அவளுக்கும் இதே பாதிப்புதானே?

லேசாக உயர்த்திய தலையோடு பார்வையும் உயர்ந்திருந்தது.

மேலே இருக்கிறவனிடம் வேண்டிக் கொண்டிருக்கிறாள்!

நம் முயற்சியில் ஒன்றுமில்லை என்றால், கடைசிக் கதி கடவுள்தானே?

ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு,மற்ற இருவரும்கூட, சுபத்ராவையே பின்பற்றினர்.

மூவரும், எவ்வளவு நேரம் அப்படியே இருந்தார்களோ? வாயிற்புறம் இருந்து ஏதோ அரவம் கேட்கவும் மூவரும் திகைத்து விழி

திறந்து பார்த்தால், படாரென்று கதவு திறக்க, அறை வாயிலில் நின்றவர்கள், யுகேந்திரனும், ரேணுவும்!

சுமனசி துள்ளி எழுந்து, மின்னலாய்ப் பாய்ந்து சென்று கணவனோடு ஒட்டிக்கொண்டாள்.

ரேணு ஒரு கணம் திகைப்புடன் நோக்குமுன், “என் கண்ணே!” என்று, மகளை அணைத்தார் திரிபாதி.

“அப்பா . . “ என்று தந்தையின் மார்பில் புதைந்து விம்மினாள் மகள்.

“ஒன்றுமில்லையடா. அதுதான் வந்துவிட்டாயே!” என்று மகளைத் தட்டிக் கொடுத்தார் திரிபாதி.

மனைவியின் தலைக்கு மேல், தாயார் அமர்ந்திருந்தது கண்ணில் படவும், “அம்மா!” என்று அவளையும் பற்றியபடியே , யுகேந்திரன் தாயிடம் விரைந்தான்.

உணர்ச்சி வசப்பட்ட பல் நிமிஷங்கள் கழிய, திரிபாதி எல்லோருக்கும் குளிர்பானம் கொண்டுவரச் சொன்னார்.

“இங்கேயே சாப்பிடுங்கள். யார் யாருக்கு என்ன பிடிக்கும் என்றால், உடனே செய்யச் சொல்லுகிறேன்.” என்று வீட்டுக்காரராய் த் திரிபாதி உபசரித்தார்.

குனிந்து தன்னைப் பார்த்துக்கொண்ட யுகேந்திரன், “இல்லை சார். இரண்டு நாட்களாகக் குளிக்கவில்லை. முதலில் வீட்டுக்குப் போய்க் குளித்தாக வேண்டும். அப்புறமாய் உணவைப் பார்க்கலாம். “ என்றான் .

“ஐயோ! நான் நாலு நாளாகக் குளிக்கவில்லை ! கேட்டால், குளியல் ஒரு கேடா என்று திட்டினாங்கப்பா!” என்று குறை சொன்னாள் ரேணு.

“ஒன்று செய்யலாம். ரேணு குளித்ததும், நீங்கள் இருவரும் எங்கள் வீட்டுக்கு வாருங்கள். நான் சோனுவிடம் சொல்லி சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணுகிறேன்.” என்ற மனைவியை, யுகேந்திரன் பெருமையுடன் பார்த்தான்.

“ரொம்ப சாதாரணமாகக் குளியல் கிளியல், சாப்பாடு என்கிறீர்கள். இவ்வளவு நேரம் பட்ட பாடு என்ன? அங்கே என்ன நடந்தது? அந்தக் கடத்தல் கோஷ்டி, இனித் தொல்லை செய்யாமல் இருப்பார்களா? ஒன்றும் சொல்லவில்லையே!” என்று சுபத்ரா கேட்கவும், அதிர்ந்து, “ஆமாம் யூகி, அது பற்றி, நீங்கள் எதுவும் சொல்லவில்லையே!” என்று

கேட்டார்.

“என்ன நடந்தது? பணம் கொடுத்த பிறகும், விட மாட்டோம் என்றார்களே. எப்படி வந்தீர்கள்? போகட்டும் என்று அவர்களே விட்டுவிட்டார்களா? “என்று தொடர்ந்து விசாரித்தார்.

மீண்டும் ஒரு தரம் தன்னைக் குனிந்து பார்த்துவிட்டு, “எல்லாம் அப்புறம் விரிவாகச் சொல்கிறேன், சார். இப்போதைக்கு, சுருக்கமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். அங்கே அவர்களுக்குள்ளேயே தகராறு. இந்தப் பணத்தோடு, இன்னும் கொஞ்சம் அடிக்கலாம் என்று சிலர். தப்பே செய்தாலும் தொழில் தருமம் மீறக் கூடாது., சொன்ன வார்த்தை மீறக் கூடாது என்று கொஞ்சம் பேர். அவர்களுக்குள் தகராறு வந்தது. எங்களை உள்ளே கொண்டு போய்ச் சிலர் பூட்டி வைக்க, எதிர் செட்டில் ஒருவன் தப்ப விட்டான். புதிதாகச் சேர்ந்தவர்கள், பழைய ஆட்கள் என்று, அவர்களுக்கிடையே பெரிய சண்டை. அந்தச் சண்டைக்கிடையில் நாங்கள் ஓடி வந்துவிட்டோம். இரு குழுவாகச் சண்டை போட்டதில் அந்தக் கூட்டமே அழிந்து போயிற்று. செத்தவர்கள் போக மற்றவர்கள் மாட்டியிருக்கிறார்கள். என்று, செய்தியில் கேட்டோம்.

“ரைட்! இப்போது நாங்கள் வீட்டுக்குப் போகிறோம். ரேணு தயாரானதும், நீங்களும் அங்கே வந்துவிடுங்கள். சாப்பிட்டுவிட்டு நிதானமாகப் பேசுவோம்.” என்று எழுந்தான்.

வீட்டுக்குப் போய், குளித்துவிட்டு, தந்தையும் மகளும் வருவதற்காகக் காத்திருந்தபோது, மூன்று பேரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“முதலில் இதற்குப் பதில் சொல்லு. பணம் கொடுத்த பிறகு, நீ ஏன் போனாய்?” என்று அவசரமாகக் கேட்க, சுபத்ராவுக்கு ஒரு கேள்வி இருந்தது.

திரிபாதியின் முன்னிலையில் இதைக் கேட்டால் நன்றாயிராது என்று கருதி, அவசரமாகக் கேட்டாள்.

“அம்மா, இது போன்ற பிரச்சினைகளில், நேரம், காலம் ரொம்பப் பார்ப்பார்கள். ஒரு நாள் பிந்தியது பிரச்சினை ஆகக் கூடும் என்று எனக்கு ஐயம். . அத்தோடு, பணம் கொண்டுபோன ஆளோடு, ரேணு வரவில்லையே! அதனால்தான் நானே போனேன்.”

“ஆனாலும், பணத்தையும் கொடுத்து, உங்கள் உயிருக்கும் ஆபத்து என்றால், தாங்க முடியவில்லை.” என்றாள் சுமனசி.

சிறு அமைதியின் பின், யுகேந்திரன் பேசினான். “எந்தச் சூழலிலும் நிலை தவறாமல் இருக்க எனக்குக் கற்றுக் கொடுத்தவர், திரிபாதி சார்தான். முதலில் அவரிடம் ஒரு சீனுக்கான பாடம் கேட்கப் போனபோது, பெண்கள் உடை மாற்றும் இடத்தில் இருந்து, அந்த சீனில் எப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கும் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தார். சில பெண்கள், அரை குறையாக . அவர்களோ, அவரோ அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. .என் பார்வை தடுமாறியது. தனியே கூப்பிட்டுச் சொன்னார். அந்த மேஜையின் ஒரு பகுதி மாதிரி நினைத்துப் பார். அப்புறம் தடுமாறாது என்றார். உருவகம் செய்து பார்த்தேன்.அப்புறம் எந்தப் பெண்ணிடமும் எனக்கு எதுவும் தோன்றியது இல்லை. உன்னைத் தவிர. இப்படி, அவர் எத்தனையோ எனக்குச் செய்திருக்கிறார். அவருக்குத் திருப்பிக் கொடுப்பதற்கு, உயிர் கூடப் பெரிதில்லை!”

அவருடைய மகளுக்காகவும், அவன் என்னதான் செய்யலாகாது?

“நன்றி இருப்பது சரிதான். ஆனால், இப்படி உயிருடன் விளையாடுகிற வேலை எல்லாம் இனிமேல் வேண்டாம். எனக்கு அப்புறம் வைத்துக்கொள்!”

“அம்மா!” என்று அதிர்ந்தான் பிள்ளை.

“கஷ்டமாக இருக்கிறதில்லையா? எனக்கு மட்டும் . . ஏன், சுமி என்ன பாடு பட்டாள் தெரியுமா? சொல்வது புரிகிறதா?” என்று தாயார் விடாமல் விரட்ட, “ஆபத்தில் மாட்டிக் கொள்வதில்லை. சரிதானா?” என்று பணிந்தான் பிள்ளை.

திரிபாதியும் ரேணுவும் வந்து, எல்லோரும் உணவுண்டு, இலகுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

யுகேந்திரனின் கை வளைவுக்குள் சுமனசி சுருண்டு அமர்ந்திருந்தாள். மற்றவர்கள் இருப்பது பற்றிய தயக்கமே அவளுக்குத் தோன்றவில்லை.

அவனது கரமும், வெகு இயல்பாகவே, அவளைச் சுற்றியிருந்தது.

முதல் தடவையாக அதைப் பொருட்படுத்தாமல், இன்னொரு சோஃபாவில் தந்தையின் தோளில் சாய்ந்தபடி உட்பார்ந்திருந்த ரேணு. “அப்பா, முப்பது கோடியாப்பா? அவ்வளவு ரூபாயாப்பா எனக்காகக் கொடுத்தீர்கள்? “ என்று, உடம்பைத் திருக்கி, அவர் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

“நீ என் உயிரை விட அருமை அம்மா! எத்தனை கோடி என்றாலும்,

பணம் பெரிதல்ல. “ என்றார் அவர் கனிவுடன்.

“உங்களுக்கு என்னைப் பிடிக்காது என்று நினைத்தேன்ப்பா. அம்மா செத்ததாலே, என்னை உங்களுக்குப் பிடிக்காது என்று நிறையப் பேர் சொன்னார்களா . . “ என்றவள் சுமனசியைப் பார்த்து, “அப்புறம், யுகிக்கு மட்டும்தான் என்னிடம் ஆசை., உன்னை விரட்டினால், பழைய மாதிரி எல்லாம் சரியாகிப் போகும் என்றும் அவர்கள் சொன்னார்களா . . அதனால்தான், கண்ட நேரத்தில் வந்து, கண்ட நேரத்தில் ஃபோன் பண்ணி அறுத்தேன். இப்போதுதான், எனக்கு அப்பா கிடைத்துவிட்டாரே. இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன், சாரிப்பா.” என்று மன்னிப்புக் கோரினாள்.

ஒரு வெகுளிப் பெண்ணைப் பகடையாக்கி எப்படி விளையாடி இருக்கிறார்கள்.

கணவனின் கையணைப்பு தன்னம்பிக்கையைத் தர, “அதெல்லாமில்லை. நீ கட்டாயமாக அடிக்கடி வர வேண்டும். அப்போது, நாம் இருவருமாக கேட்டரிங் சோனு வீட்டுக்குப் போய் நிறைய மொக்கலாம். என்ன?”

“ஓ! அங்கே எதெல்லாம் நன்றாக இருக்கும் தெரியுமா? தேங்காய்ப் பாலிலே செய்ததாம் மூன்று கலரில் ஓர் இனிப்பு ஸ்ஸ்ஸ் என்ன ருசி தெரியுமா? . .”

அவள் பேசப் பேச, அந்தக் குழந்தைப் பெண்ணை அன்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் சுமனசி.

அதைப் பார்த்த யுகேந்திரனின் முகமும் சந்தோஷமாகக் கனிந்தது.